வானவில்லாய் வந்தவளே!

நீல வானில், பிரகாசமாய் உலா வந்துகொண்டிருந்த பகலவன், காற்றுக் கரங்களுக்கு ஏற்ப அசைந்தாடிய பாதையோர மரங்களை, சோம்பலாகப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

நீண்ட நைல் நதியில் மிதக்கும் படகுகளாய், வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக, நெடிய தார்ச்சாலையில் ஊர்ந்து பயணித்தன. அந்த போக்குவரத்து நெரிசலைக் கண்டு மனம் நொந்தபடி, மெதுவாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் [illegible].

சட்டென்று எதிரே சிக்னல் விழுந்துவிட, காரை நிறுத்திவிட்டு அசுவாரசியமாய் திரும்பியபோது தான், அந்தக் காட்சி அவன் கண்களில் விழுந்து மனதிற்குள் நுழைந்தது!

கண் தெரியாத ஒரு இளைஞனை, அவனுடைய கைப்பிடித்து கனிவுடன் வழிநடத்தியபடி பாதையைக் கடந்து வந்து கொண்டிருந்தாள், ஒரு இளம் பெண்.

சாலையில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் பிறரைப் பற்றிய அக்கறையின்றி கடந்து கொண்டிருக்க, அவளுடைய மனித நேயமும், பரிவும் ஏனோ உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்து நிறைந்தன.

ஒரு மெச்சுதலோடு அவர்களை கவனிக்கும் போதே, பூங்குழலியின் நினைவு அழையா விருந்தாளியாய் ஓடிவந்து ஒட்டிக் கொண்டது.

அவளும் இப்படித்தான் ஊனமுற்றவர்களுக்கு உதவுவதென்றால் ஓடி ஓடிச் செய்பவள்.

ஆனால் அவளுடைய காருண்யமும், மனிதாபிமானமும் கடைசியில் எப்படித் தோற்றது என்று எண்ணும்போதே, இதயம் கனத்துப்போனது.

எதிரே சிக்னலில் பச்சை ஒளிர, உடனே காரை உசுப்பிக் கிளப்பியவன், தான் வேலை செய்கின்ற சாப்ட்வேர் நிறுவனத்திற்குச் சென்றான்.

இந்தியாவில் பல இடங்களில் கிளை விரித்திருக்கும் அந்த நிறுவனத்தில் புராஜெக்ட் மேனேஜராக பணி புரிகிறான் அவன்.

கை நிறைய சம்பாதித்தும், எல்லா வசதிகளிருந்தும், மனம் மட்டும் நிம்மதியைத் தொலைத்து வெகு நாட்களாகியிருந்தன.

இப்போதெல்லாம் வீட்டிற்குச் சென்றால் நிம்மதி தருகின்ற ஒரேயொரு செல்லக் குழந்தை மதியுடன் விளையாடுவது மட்டும் தான்.

அவனும் அவனிடம் பாசமாக ஒட்டிக் கொண்டு விடுவான்.

பூங்குழலியின் நினைவுகளை மறக்கச் செய்பவனும் அவன் தான். நெருப்புத் திரியாய் தூண்டி விடுபவனும் அவன் தான்.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் அலுவலகத்திற்கு சென்றவனுக்கு கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்தபோது, இந்த உலகமே மறந்து போயிற்று.

அதே நேரம் வீட்டில் அவனுடைய தாய் சாரதா, குழந்தை மதியை உறங்க வைத்துக் கொண்டிருந்தார்.

தாயை இழந்த அந்த சிறு குழந்தையைப் பார்த்தால், அவருக்குப் பெரும் வேதனையாய்!

பூங்குழலியை நினைத்தாலோ இதயமே வெடித்துவிடும் போல் வலிக்க ஆரம்பிக்க... அப்போது அழைப்பு மணி ஒலித்தது.

வாசல் கதவைத் திறந்தால் எதிரே அழகிய இளம் பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.

தந்தச்சிலை போல் அழகாக... விழிகளிரண்டும் கவிதை பேச... உயரமாய் ஒரு ஓவியம் போல் நின்றிருந்தவளையே, ஒரு கணம் ஆழ்ந்து நோக்கினார் அவர்.

உடனே, தன்னுடைய கரங்களை டியூலிப் மலர்களாய் குவித்து அவரை வணங்கியவள், ''வணக்கம்மா! நான் பிரதாயினி! பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கி நாங்க அதிலே குடிவரப்போறோம். நாளைக்கு காலையிலே ஏழு மணிக்கு சிம்பிளா கிரஹப் பிரவேசம் பண்ணி பால் காய்ச்சிக் குடிக்கலாமின்னு இருக்கோம். உங்களை அவசியம் வரச்சொல்லி அம்மா சொல்லிட்டு வரச் சொன்னாங்க. வந்துடுங்கம்மா'' சாரல் மழையாய் அழைத்தாள்.

''முதல்லே நீ உள்ளே வாம்மா! ரொம்ப சந்தோஷம். நான் நாளைக்கு கட்டாயம் வரேன்...!'' என்றபடி நகர்ந்து வழி விட்டார் சாரதா.

பிறகு அவள் சோபாவில் அமர, ''உங்க அப்பா, அம்மா எல்லாரும் இந்த ஊர் தானாம்மா?'' மெதுவாக விசாரித்தார் அவர்.

''இல்லைம்மா. பூர்வீகம் தஞ்சாவூர் பக்கம்! அப்பாவுக்கு பிசினஸ் இங்கே டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் வெச்சிருக்காங்க. முன்னாடி பிளாட்டில் இருந்தோம். அம்மாவுக்கு தான், தனி வீட்டிலே இது மாதிரி தோட்டமும் வீடுமா இருக்கணும்னு ரொம்ப ஆசை. அதான் இந்த வீட்டை வாங்கிட்டு வந்துட்டோம்.''

விழிகளில் மின்னலுடன் அவள் பகர, ''ஒரு நிமிஷம் இரும்மா. காபி குடிச்சிட்டு போகலாம்'' என்றபடி சாரதா எழுந்தார்.

''இல்லைம்மா! இப்பதான் குடிச்சேன். இன்னும் ரெண்டு மூணு வீட்டுக்குப் போகணும். நாளைக்கு கட்டாயம் வந்திடுங்க. வீட்டில் எல்லார்கிட்டயும் சொல்லிடுங்க'' என்றபடி அழகிய முறுவலுடன் விடைபெற்றாள், அவள்.

''உன் பேரென்னம்மா சொன்னே?''

அவருக்கு பூங்குழலியை அப்படியே நினைவுபடுத்தின.

மறுநாள் காலையில் பிரதாபினியின் வீட்டிற்குப் போனபோது, அன்புடன் வரவேற்ற லட்சுமணனையும், ரங்கநாயகியையும் அவருக்கு மிகவும் பிடித்துப் போனது.

குழந்தை நிறைமதி ஆவலுடன் பிரதாவிடம் தாவ, வாஞ்சையுடன் அவளைத் தூக்கிக் கொண்டான் அவன்.

அந்த தெருவிலிருந்து பலரும் வந்திருக்க, பரிசைக் கொடுத்த பிறகு அனைவரிடமும் பேசிவிட்டு பூஜை முடிந்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினார் அவர்.

தாம்பூலப் பையைக் கொடுத்து ரங்கநாயகி வழியனுப்ப, மதிதான் அந்தப்பெண் பிரதாவிடமிருந்து வர மறுத்து ஆர்ப்பாட்டம் செய்தாள்.

"அம்மா குழந்தை இங்கேயே இருக்கட்டுமே நான் பாத்துக்கறேன். அவ என்ன சாப்பிடுவான்னு மட்டும் சொல்லுங்க. ஊட்டிவிட்டு அப்புறமா கொண்டு வந்து விடறேன்."

ஆர்வத்துடன் கூறிய பிரதாவிடம் மறுக்க மனமின்றி சரியென்றவர், "இட்லி மட்டும் குடும்மா. நான் போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சி எங்க வீட்டு சமையல்காரம்மாவை அனுப்பறேன். குடுத்தனுப்பிடுங்க. உங்களுக்கும் வேலை இருக்குமே" என்றபடி விடை பெற்றார்.

மதி அவனிடம் இயல்பான பிரியத்துடன் ஒட்டிக்கொள்ள, சாப்பிடக் கொடுத்துவிட்டு அவளுடனேயே சுற்றிக் கொண்டிருந்தான் பிரதா!

அப்போது பக்கத்து வீட்டிலிருந்து மதியைத் தூக்கிச் செல்ல வந்த கனகத்திடம், அரை மனதுடன் அவளை அனுப்பிவிட்டு சாப்பிடுபவர்களை கவனிக்க ஆரம்பித்தான் அவன்.

திடீரென்று லட்சுமணன் அவனை அழைக்கும் குரல் கேட்டது.

"பிரதா! வசுந்தரா வந்திருக்காங்க பாரு. வாங்க வாங்க" உற்சாகத்துடன் இரைந்தார். வசுந்தரா ஹைகோர்ட்டில் சீனியர் லாயர். அவரிடம் தான் ஜூனியராக பணியாற்றுகிறான் பிரதாபினி.

சீனியர் என்பதை விட ஒரு உடன் பிறவா சகோதரி என்றே கூறலாம். இருவருக்கும் ஏழு வருடங்களாகப் பழக்கம்.

அவன் 'பி.எல்.' படிப்பதற்கு முன்பிலிருந்தே இரு குடும்பமும் இனிய நட்புடனிருந்தனர்.

"பையனைப் போட்டு எங்க இப்படி அடிக்கிறீங்க"

"பின்னே எனக்கு சமையல், துணிதுவைப்பது, கோலம் எல்லாம் கத்துக் கொடுங்கப்பான்னு கேக்கிறான்"

முன்னிப்பட்டு கண.சிவகுமார்.

அவன் வக்கீலுக்கு படித்ததற்கு காரணமே, வசுந்தரா தான் என்று கூட சொல்லலாம்.

உடனே ஓடிவந்து அவரை வரவேற்றவன், "வாங்கக்கா! காலையிலேருந்து எதிர்பார்த்துட்டிருந்தேன்" என்றான் ஆதங்கத்துடன்.

"ம்... சாரி பிரதா. உனக்கு தான் தெரியுமே. சங்கவியைப் பத்தி. உங்க வீட்டுக்கு வரேன்னதும் ஸ்கூலுக்குப் போக மாட்டேன்னு ஒரே அடம். நீன்னா தான் அவளுக்கு உயிராச்சே.

"மன்த்லி டெஸ்ட் நடக்குது! இல்லாட்டாலாவது பரவாயில்லை. இவ ரெடியாகாததாலே லேட் போயிடுச்சி. அவசரமா கிளம்ப சொல்லி கொண்டு போய் ஸ்கூல்லே விட்டுட்டு வரேன். அதான் லேட்டாயிடுச்சி!" என்றபடி உள்ளே வந்தார் அவர்.

பிறகு அவன் வீட்டை சுற்றிக் காண்பிக்க, அவருக்கு அந்த இல்லம் மிகவும் பிடித்துப்போனது.

"இது மாதிரி சுத்தி ஒன்னா ஒரு தோட்டமும் நடுவிலே வீடும் சென்னையிலே இப்பல்லாம் கனவு மாதிரி ஆயிடுச்சி இல்லை?" என்றபடி தோட்டத்தை சுற்றிப் பார்த்தார்.

மாமரங்களும் தென்னை மரங்களும் நிழலாய் அந்த நிலப்பரப்பை ஆக்கிரமித்திருக்க, இடையிடையே மரமல்லி மரமும், பவளமல்லி மரமும் மலர்களை சொரிந்து அந்த பூமியையே நறுமணம் மிகுந்ததாய் மாற்றி இருந்தன.

"ஆமாம்கா. உங்களுக்குத்தான் தெரியுமே, அம்மாவுக்கு பிளாட் கல்ச்சரே பிடிக்கலை. இது மாதிரி இருந்தே பழக்கப்பட்டவங்களா. அதான் அப்பா இந்த வீட்டை வாங்கிட்டாங்க!"

இருவரும் உற்சாகமாகப் பேசியபடி உள்ளே வர, அவரை சாப்பிட வைத்து தான் அனுப்பினார் ரங்கநாயகி.

2

அன்று மாலையில் அலுவலகத்திலிருந்து வந்து ஷூவைக் கழட்டி வைத்து விட்டு சோர்வுடன் சோபாவில் சாய்ந்த சிற்பியை, வீட்டின் அமைதி வியப்படையச் செய்தது.

தினமும், அவன் வீட்டிற்கு வரும் நேரத்தில் ஷூவைக் கூட கழட்ட விடாமல் ஓடி வந்து காலை கட்டிக்கொண்டு மழலையில் ஏதாவது மிழற்றியபடி இருப்பாள் மதி.

"என்னம்மா மதி தூங்கறாளா? வீடே நிசப்தமா இருக்கு?" ஆவலுடன் விசாரித்தான்.

"இல்லைப்பா! அவ பக்கத்து வீட்டுக்குப் போயிருக்கா. இன்னிக்கு காலையிலே பக்கத்து வீட்டு கிரஹப் பிரவேசத்துக்கு போயிருந்தேன் இல்லையா? அந்த வீட்டுப் பொண்ணுக்கு மதியை ரொம்ப பிடிச்சிடுச்சி! இவளும் அவகிட்ட அப்படி ஒட்டிக்கிட்டா! அதான்!"

"ஏம்மா? அதுக்காக முன் பின் தெரியாதவங்க வீட்டிலயா குழந்தையை விடறது?"

அவன் சலிப்புடன் அலுத்துக் கொள்ள, "அவங்க ரொம்ப நல்ல பேமிலியா தெரியறாங்கப்பா. கொஞ்ச நேரம் முன்னாடி தான் அந்தப்பொண்ணு வந்து தூக்கிட்டுப் போனா! இப்ப வந்திடுவா!" என்றபடி உள்ளே சென்றார் அவள்.

பிறகு அவர் கொடுத்த காபியைப் பருகியபடி அவன் அமர்ந்திருக்க, மெல்லமையான கொலுசுச் சப்தம் அவனைக் கலைத்தது.

கையில் மதியுடன் உள்ளே நுழைந்த அந்த பெண்ணைக் கண்டதும், அவனுடைய புருவங்களிரண்டும் வியப்பில் உயர்ந்தன.

தேன்நிறவண்ணத்தில் வானவில்லாய் வர்ணம் காட்டிய அந்தப்பெண், கண் தெரியாத ஒரு இளைஞனைப் பரிவுடன் அழைத்துச் சென்றவளை பார்த்த முதல் கணமே மனதில் அழுத்தமாய் பதித்தவனை, இங்கு அவன் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

"வாம்மா பிரதா! மதி ரொம்ப வம்பு பண்ணிட்டானா?" புன்னகையுடன் விசாரித்தபடி வரவேற்றார் சாரதா.

புதிதாக ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டு சிறிது தயங்கியவள், "இல்லைம்மா! ரொம்ப சமத்தா இருந்தா! நீங்க தேடுவீங்களோன்னுதான் அழைச்சிட்டு வந்தேன்." மெதுவாகக் கூறினாள்.

உடனே தன் மகனிடம் திரும்பியவர், "இவன் தாம்மா என் மகன் சிற்பி. சாப்ட்வேர் இன்ஜினியரா இருக்கான். இவ தாம்ப்பா நான் சொன்ன பிரதா" என்று அறிமுகப்படுத்தினார்.

"ஹலோ" என்று அவன் புன்னகைக்க சிறு முறுவலுடன் கை குவித்தாள் அவள். குவித்த அவளுடைய விரல்களுக்கு பதிலாய் அவன் உடலிருந்த மொத்த செல்களும், கை குவித்து தொழுதன. பிறகு மதியை சாரதாவிடம் கொடுத்துவிட்டு அவள் கிளம்ப, மீண்டும் அவளுடனே செல்ல வேண்டும் என்று அடம் பிடிக்க ஆரம்பித்தாள் குழந்தை.

"மதி... பேசாம இருக்கணும்!" அவன் கோபத்துடன் அதட்ட அவள் முகம் சட்டென்று சுருங்கியது.

அதைக் கண்ட பிரதாவுக்கோ, மனதில் சுருக்கென்று ஒரு வலி!

எப்போதுமே, சிறு குழந்தைகள் முகம் வாடினால் அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

"சிற்பி! நான் வரேன்! குழந்தைங்க அவிச்ச மலர் மாதிரி! கடுமையான சின்ன சொல் கூட அவங்களை வாட வைச்சிடும்!" மெல்லிய குரலில் கூறினாள்.

உடனே சுள்ளென்று கோபம் வந்தாலும், அவள் கூறியதன் நியாயம் புரிந்து அமைதியானவனுக்குள் சிறு சலனம்.

அவள் வேண்டுமென்றே தன்னைத் தவிர்த்து தாயிடமே பேசியதும், ஏனோ அவளை சீண்ட வேண்டும் போல் ஒரு உணர்வு.

"ம்... குழந்தைங்க சைக்காலஜியை இவ்வளவு தெரிஞ்சு வச்சிருக்கீங்களே நாதுக்குமெழுவி... நீங்க சொன்னா சரிதான். உங்களுக்கு ஒரு பத்து குழந்தையாவது இருக்குமா?" கிண்டலாக கேட்டான்.

உடனே பதறி நிமிர்ந்தவளைக் கண்டதும், "என்ன சிற்பி. கிண்டலா? பிரதா சொன்னதுல என்ன தப்பு?" பரிந்து வந்தார் சாரதா.

உடனே தன்னை அமைதிப்படுத்தி அவரிடம் திரும்பியவள்,

"அம்மா! எதையுமே பரிபூரணமா உணரணும்னா அதை அனுபவிச்சிருக்கணும்னோ, கடந்து வந்திருக்கணும்னோ அவசியமில்லை. சாவைக் கண்டு ஏன் பயப்படறோம்? முன்னே பின்னே செத்துப் பார்த்த அனுபவம் இருக்கிறதாலேயா... இல்லியே!"

நக்கலாக அவன் பதிலடி கொடுத்ததும், ஏனோ அவன் மேல் கோபப்படவே முடியவில்லை.

அவளுடைய உதட்டைப் பார்வை கூட, மெலிப்பாய் உள்ளிறங்கின.

குறுகுறுவென்று தன்னையே உரசிய அவன் பார்வையை உணர்ந்தவள் பதைப்புடன் "நான் வரேம்மா" என்று வெளியேறினாள்.

முதல் முறையாக ஒரு பெண் அவனுடைய மனக்குளத்தில் மெல்லிய அதிர்வலைகளை ஏற்படுத்தி விட்டுச் செல்வது புரிவதாய்.

அவனுக்குள் புதைந்திருக்கும் நேசத்தைத் தேட ஆரம்பித்தது, நெஞ்சம்.

பிறகு சாரதா அவர்களுடைய குடும்பத்தைப் பற்றிக் கூறியதையெல்லாம் மவுனமாய் ரசித்தவனுக்குள் புதிதாய் இனம் புரியாதொரு உணர்வு.

அப்படியே சாய்ந்து தன் மடியில் உறங்கிப் போன மதியையே பார்த்திருந்தவனுக்குள், பூங்குழலியின் நினைவு, நிழற்படமாய் தெரிந்தது.

தொடர்ந்து வந்த நாட்களில் சாரதாவும், ரங்கநாயகியும் ஒரே வயதினராய் நல்ல தோழிகளாகி விட, கோவிலுக்குச் செல்வதிலிருந்து ஷாப்பிங் வரை இருவருமே இணைந்து போக ஆரம்பித்தனர்.

ஒரு ஞாயிறன்று மாலையில், சிற்பி தன் தாயை கேலி செய்து கொண்டிருந்தான்.

"என்னம்மா! சண்டே ஆச்சன்னா, கடைக்குப் போய் அதை வாங்கணும். இதை வாங்கணும்னு தொல்லை பண்ணுவீங்க. இப்பல்லாம் என்னைக் கூப்பிடறதே இல்லை?"

"ம்... இப்ப தான், நானும் பக்கத்து வீட்டு ரங்கமும் கடைக்குப் போயிடறமேப்பா! அவங்களோட உதயம் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு போய் காய், மளிகை சாமான், பழம் எல்லாம் வாங்கிட்டு வந்திடறோம். நல்ல தரமாவும் இருக்கு. அதான்!" பெருமையுடன் சிலாகித்தார் அவர்.

"எப்படிம்மா போறீங்க? ஆட்டோவிலயா? அந்த காசுக்கு இங்கே பக்கத்துல இருக்கற நாடார் கடையிலயே வாங்கிடலாமே!"

"இல்லைப்பா! அங்கே காய் பழம் எல்லாமே நல்ல பிரெஷ்ஷா இருக்கு. எவிக்கிறதாலே அலுப்பும் தெரியலை. அவங்க வீட்டுக்காரரு மதியம் சாப்பாட்டுக்கு வந்துட்டுத் திரும்பறப்போ சில நாள் நாங்களும் போயிடுவோம். வரும்போது ஆட்டோதான் பக்கம் தானே"

"ஓ! உதயம் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் அவங்களது தானா? ஆமாம் மதி எங்கேம்மா காணோம்?" மெல்ல விசாரித்தான் அவன்.

"அவ அங்கேதான்ப்பா இருக்கா! அந்தப்பொண்ணு பிரதாகிட்டே ரொம்பவே ஒட்டிக்கிட்டா. இப்பல்லாம் அவங்க வீட்டிலிருந்து வரவே மாட்டேங்கறா!"

"பாத்தும்மா! அவங்களுக்கு டிஸ்டர்பன்ஸ் இல்லாமப் பாத்துக்கங்க!"

"ஞாயிற்றுக்கிழமைகள்லே காலையில வெளியிலே போனா, பிரதா சாயந்தரம் தான் வருவாளாம். ரங்கம் சொன்னாங்க. அவ வந்தப்புறம் தான் அனுப்பி வெச்சேன். அவ நம்ம மதி மேல உயிரா இருக்காப்பா. நிச்சயமா தொந்தரவா நினைக்க மாட்டா."

அவர் முடிக்கும்போதே அங்கு மதியுடன் வந்துவிட்ட பிரதா, அவன் என்ன கூறி இருப்பானென்பதை உடனே புரிந்து கொண்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை சாரதாவிடம் கொடுத்தவள், உடனே அவனிடம் திரும்பினாள்.

"சாரி சார்! குழந்தைகளை யாருமே தொல்லையா நினைக்க மாட்டாங்க. ஒரு வேளை நீங்க அப்படியோ என்னவோ? உங்களை மாதிரியே மத்தவங்களை நினைக்க வேண்டாம்!"

அன்று அவன் சீண்டியதற்கு பதிலடி கொடுத்த நினைவுடன், கண்ணென்று கூறிவிட்டு வேகமாகச் சென்று விட்டாள்.

ஏனோ அவள் மீது கோபிக்கவே முடியாமல் சிறு புன்னகைப்பூவொன்று சோம்பலாய் அவனுடைய உதடுகளில் பூத்தது.

அவனிடம் கோபத்தை எதிர்பார்த்துத் திரும்பிய சாரதாவிற்கோ, பெரும் வியப்பு!

பிறகு குழந்தையுடன் உள்ளே சென்றவர் திரும்பி வந்த போது, சிற்பி நிறைய கேள்விகளுடன் காத்திருந்தான்.

"அம்மா! அந்தப் பொண்ணு பிரதா என்ன பண்றா? எங்கே வேலை பாக்கறா?" அவளைப்பற்றி அறிந்து கொள்ளும் சுவாரசியம் தெரிந்தது அவன் குரலில்!

"அவ ஒரு லாயர்கிட்ட ஜூனியரா இருக்கறதா ரங்கம் சொன்னாங்க. சாயந்திர நேரத்தில் கடைக்குப்போய் அவங்கப்பாவுக்கு உதவி செய்வாளாம்."

"ஓ! வக்கீலம்மாவா? அதான் படபடன்னு ரொம்ப கோபம் வருது!" தனக்குள் பேசியபடி எழுந்து உள்ளே சென்றான் அவன்.

சமீப காலங்களில் அவளை நினைக்கத் துவங்கும் போதெல்லாம்,

பல்டாக்டர் ஜமீதா படத்தை மாட்டி வச்சிருக்காரே ஏன்?

பல்சிகிச்சைக்கு வாயை திறக்கன்னு சொல்லிச் சொல்லி டாக்டருக்கு அலுத்து போச்சாம் அதுதான்.

-முத்து

தான் தன்னையே மறப்பதும், அவளை மறக்க நினைத்தாலே மூச்சுக் காற்றுக்கு தவிப்பது போல் ஒரு உணர்வு வருவதையும், அவனாலேயே தடுக்க முடியவில்லை.

3

மறுநாள் காலையில், பிரதா அலுவலகத்திற்குச் சென்ற போது, புன்னகையுடன் வரவேற்ற வசந்தராவைப் பார்த்தவுடன் மனதில், தெளிவும் தன்னம்பிக்கையும் கைவசப்பட்டன.

சிறிது காலமாக அவருக்குத்தான் எவ்வளவு பிரச்சனைகள். எல்லாவற்றையும் சேர்த்து சேர்த்தே கரைத்து விடுமென்ற வித்தையை அவர் எங்கு கற்றார் என்று யோசிக்கும் போதே, பெரும் பிரமிப்பு ஏற்பட்டது.

நேற்று அந்த பக்கத்து வீட்டு இளைஞன் கூறிய வார்த்தைகளே மனதில் ரங்கராமிட்டு, ஏனோ சிறு வேதனையை ஏற்படுத்தியிருந்தன.

"என்ன பிரதா, எப்பவுமே ஜாலியா இருப்பே. இன்னிக்கு என்னாச்சு, டல்லாயிருக்கே?" உற்சாகத்துடன் வினவினார் வசந்தரா.

அலுவலகத்தில் மட்டும் அவரை மேடம் என்று அழைத்தே பழகியிருந்தாள் பிரதா.

"ஒண்ணுமில்லை மேடம்!" என்றபடி நேற்று நடந்ததைப் பற்றி கூறினாள்.

"ப்ச்... இது தானா! அவர் சொன்னதிலே தப்பில்லையே! நம்மாலே ஒருத்தருக்கு தொந்தரவு இருக்கக்கூடாதுன்னு நினைக்கிறது சரிதானே! உன்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்ச ஒருத்தர் இப்படி ஒரு ஒபீனியனை சொன்னா தான் நீ வருத்தப்படணும்!" அழுத்தமாக முடித்தார்.

உடனே யோசித்தபோது, அவர் கூறுவதும் சரியென்றே பட்டது.

"நீ, எனக்கே ஒரு நேரத்துல யோசனை சொன்னவ இந்த மாதிரி சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம்மா மண்டையை உடைச்சிக்கிறது! இன்னிக்கு ரெண்டு கேஸ் நீ மூவ் பண்ணணும்! ஞாபகம் இருக்கா?"

உடனே மனம் புத்துயிர் பெற்று தொழிலுக்குள் ஊடுருவ, யானை பலம் வந்தது.

"ம் இருக்கு மேடம்! வனிதாவோட ரேப் கேஸ். இபிகோ 35 எச் பிரிவில் குற்றவாளிக்கு நாளைக்குத் தீர்ப்பு. அநேகமா ரெண்டு வருஷமாவது தண்டனை கிடைக்க செய்யணும்.

அப்புறம் தேவியோட வரதட்சணை கேஸ். 'ஆர்டிஓ' விசாரணை முடிஞ்சு நமக்கு சாதகமாத் தான் வந்திருக்கு. 304 (பி) பிரிவின்படி அவனுக்கு தண்டனை நிச்சயம் மேடம். இன்னிக்கு கோர்ட்டில நான் பாத்துக்கறேன்"

தெளிவுடன் கூறியவளையே பரிவுடன் பார்த்த வசந்தராவிற்குள், ஒரு பெருமித உணர்வு!

இருவரும் கிளம்பி கோர்ட்டிற்குச் சென்று தங்கள் கேஸ் வரும் வரை காத்திருந்த போது தான், வசந்த கால உற்சாகத்துடன் கடந்த வசந்தராவின் வாழ்க்கையில் திடீரென்று நடந்த சோகங்களும், அவர் அனுபவித்த மன

உணர்ச்சிகளும், ஏனோ திடீரென்று பிரதாவிற்கு ஞாபகம் வந்தன.

வசந்தராவின் தைரியமும், தன்னம்பிக்கையும், அவருடைய வாழ்க்கைப் போராட்டமும் அவளுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன.

சென்ற வருடம் நடந்த அந்த நிகழ்ச்சி இன்று நடந்ததைப் போல் நினைவடுக்குகளில் பாவியது.

வசந்தராவும், அவருடைய கணவர் ஜெயதேவும் ஒற்றுமையாக, நன்றாகத்தான் குடும்பம் நடத்தி வந்தனர். இருவருக்கும் காதல் திருமணமென்பதால் இரு வீடுகளுமே அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்த காரணத்தினாலேயே, வசந்தராவிடம் செல்லமணனுக்கும், ரங்கத்திற்கும் தனிப்பிரியம் இருந்தது.

அவரும், இவர்களை தன்னைப் பெறாத தாய் தந்தையாகவே மனதளவில் கவனித்து, எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார்.

சங்கவிக்கு பத்து வயதாக இருக்கும்போது தான், தன் கணவரின் நடவடிக்கைகளில் மாற்றத்தை உணர ஆரம்பித்தார் வசந்தரா.

அப்போது தான், அவரிடம் ஜூனியராகச் சேர்ந்திருந்தாள் பிரதா.

பல வருட பழக்கமிருந்தாலும், இரு குடும்பங்களும் இணை பிரியாது இணைந்திருந்தாலும், தொழில் முறையில் தினமும் பழக ஆரம்பித்தது, சிறிது நாட்களாகத்தான்.

வசந்தராவிற்கு விஷயம் தெரிந்த உடனே குடும்பத்தில் பிரச்சனை வெடிக்க, சில நாட்களின் போராட்டத்திற்குப் பிறகு தன்னுடைய தவறை ஒத்துக் கொண்டார் ஜெயதேவ்.

தங்கள் இருவருக்கிடையேயும் இருந்த காதலை உறவின் அழுத்தத்தை... பற்றுதலை... குழந்தையின் பாசத்தை அந்த தவறான உறவு குறைத்து பிரித்து விடுமென்ற அச்சமும், அவருடைய துரோகமும், கலவையான வெறிச் செயலும் பலமாய் வேரூன்ற உடனே விவாகரத்திற்கு விண்ணப்பித்திருந்தார் வசந்தரா.

காதலித்து மணந்த தன்னை ஒரு போகப் பொருளாய் மட்டும் மதித்து, அலுத்துப் போனதும், உடையை மாற்றுவது போல், கழற்றி எறிந்தவனின் மேல் பெரும் வெறுப்பும் அருவெறுப்பும் வந்தது. தான் ஒரு ஆண்... ஒரு பெண்ணால் தன்னை என்ன செய்ய முடியும் என்ற ஜெயதேவின் திமிர் அகம்பாவத்தை, வசந்தராவுடைய வக்கீல் நோட்டீஸ் சிறிதும் அழிக்கவில்லை!

ஆறே மாதத்தில் மியூச்சுவல் கன்செண்ட்டில், இருவருக்கும் விவாகரத்தும் கிடைத்து விட்டது.

அவர், உடனே அந்தப் பெண்ணை மறுமணமும் செய்து கொண்டு விட்டார்.

ஆனால், மகளை மட்டும் விட முடியாத ஜெயதேவ், வாரத்தில் ஒரு நாளாவது அவளுடன் பொழுதைக் கழிக்கின்ற வாய்ப்பைப் பெற்றார்.

அதற்குப் பிறகுதான், வசந்தராவின் வாழ்க்கையில் விதி விளையாட ஆரம்பித்தது.

வார இறுதி நாட்களில் தன் வீட்டுக்கு அவளை அழைத்துச்

செல்பவர், அந்தப் பெண்ணிடம் சித்தி என்று பழக விட, அவள் எதற்குமே சங்கவியைக் கட்டுப்படுத்தவில்லை.

மாறாக இங்கு கிடைக்காத சில சுதந்திரங்கள்... எந்த சினிமா வேண்டுமானாலும் பார்க்கலாம்... எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற நிலை!

காய்ச்சல் வரும்... சளி பிடித்திருக்கிறது.... உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாது என்று அம்மா தவிர்த்ததெல்லாம், சங்கவிக்கு அங்கு அபரிமிதமாகக் கிடைக்க ஆரம்பித்தது.

ஹோட்டல், சினிமா, ஊர் சுற்றுவது என்று உலகத்திலுள்ள அத்தனை மகிழ்ச்சியையும், ஒரே நாளில் தந்தை அறிமுகப்படுத்த, அவளும் மாற ஆரம்பித்தாள்.

படிக்க வேண்டும்... நல்ல உணவுப் பழக்க வழக்கங்கள்... அழகாக உடை உடுத்துவது என்ற அம்மாவின் அறிவுரைகளை, மனது வெறுக்க ஆரம்பித்தது.

எல்லாமே தன் அப்பாவிடம் தான் கிடைக்கும் என்ற எண்ணங்கள், அவளுக்குள் தவறாகப் பதிவு செய்யப்பட்டன.

எதற்கெடுத்தாலும் அடம் பிடிப்பதும், தாயைத் திட்டுவதும், தந்தையை உயரத்தில் பேசவும், தந்தையிடமே போய் விடுவேன் என்று பயமுறுத்துவதும் எனப் பெரிதும் மாறிப் போனாள் அவள்.

ஊரிலுள்ள எல்லோருக்கும் வக்கீலாய் அறிவுரை கூறி நியாயம் பெற்றுத் தருபவர், தலைக்கென்று வரும் போது, சிறிது மனம் தளர்ந்து உடைந்து போனது தான் உண்மையானது!

சமூகத்தின் வார்த்தைகள், அவரை பலமிழக்க வைத்தன.

கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்தால், ஒரு பெண்ணை திமிர் பிடித்தவளாக, அனுசரித்துப் போகத் தெரியாதவளாக மட்டுமே, இச்சமுதாயம் கணித்து வைத்திருக்கிறது.

அதையும் மீறி அவள் பட்ட காயங்களையும், ரணங்களையும், இழந்த தன்மானத்தையும், சுய கௌரவத்தையும் பற்றி யாருமே நினைத்துப் பார்ப்பதில்லை.

தனித்து நின்று போராடி வாழ்க்கையில் வெற்றி பெறுகின்ற பெண்களை ''வாழாவெட்டி'' என்ற விமர்சனத்துடன் விலக்கி வைத்திருக்கின்ற மூட மக்களைப் பற்றிய கவலை, அவரை சிறிது ஆட்படுத்தவே செய்தது.

4

ஒரு நாள், வசந்தரா மிகவும் சோர்ந்திருந்த வேளையில் தான், என்னவென்று விசாரித்தாள் பிரதா. அவர் எல்லா விபரமும் கூற, ஓய்ந்து போனது மனது!

அன்று முழுவதும் யோசித்திருந்ததில், அதற்காக ஒரு தீர்வுடன் உறங்கிய பிரதா, மறு நாளே அதைப்பற்றி வசந்தராவிடம் பேசினாள்.

''மேடம்! நீங்க இப்ப தான் நிதானமா இருக்கணும்! அப்பா, அம்மா ரெண்டு பேரையும் மாறி மாறிப் பாக்கிறதாலே, அவளுக்குள்ளே ஒரு இம்பேலன்ஸ் வந்திருக்கு... நாம இப்ப உரிமைக்காக சண்டை போடறது ஆபத்தாக்கூட முடியலாம்!

''நான் செய்யறது, சொல்றது, வாழறதெல்லாம் உனக்காக.... உன் நன்மைக்காகத்தான்னு நீங்க பொறுமையா உணர்த்தணும்... எல்லாத்தையுமே அவ மேலே இருக்கிற அதிகப்படியான அன்பால தான் செய்றீங்கன்னு புரிய வைக்கணும் மேடம்!'' மெதுவாகக் கூறினாள்.

''என்னால முடியலை பிரதா! நீயவி ஒரு பிரேக்கிங் பாயிண்ட் கிட்ட வந்திட்ட மாதிரித் தோணுது... இந்த விஷயத்துல நான் தோற்க விரும்பலை!

''தேவுக்காக எங்க அம்மா, அப்பாவை இழந்தேன்... இப்ப அவருக்காக என் குழந்தையையும் நான் இழக்க மாட்டேன்!

''ஒரு தாயால தான், தன் குழந்தையை அதுவும் பெண் குழந்தையை நல்ல படியா வளர்க்க முடியும்!

''அவர் தான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டாருல்லே... எங்களை நிம்மதியா விட்டுட வேண்டியது தானே!'' ஒரு தாயின் கண்ணீரும் நியாயமான உணர்வுகளும் புரிந்தன. இதயம் கனத்துப்போய் அமர்ந்திருந்தவளுக்குள், ஒரு யோசனை உதித்தது.

''மேடம்! நான் ஒன்னு சொல்லவா? நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது... பாரஸ்ட்லே பராசக்தின்னா எதிர் பக்கம் தீ மூட்டி அதை அணைப்பாங்களாம்... அது மாதிரி செய்யலாமா?.... நீங்க எதுவும் கண்டுக்காதீங்க... அவ அப்பாகிட்டே போயிடுவேன்னு மிரட்டினா உடனே சரின்னு சொல்லுங்க... அவர் கிட்டயும் இதப்பத்தி பேசுங்க... பார்ப்போம்!'' உறுதியுடன் முடித்தாள்.

உடனே பதட்டத்துடன் நிமிர்ந்தவர், ''வேண்டாம் பிரதா! அவர் சரின்னுட்டா... சங்கவி என்னை விட்டுட்டுப் போயிடுவா! அப்புறம் நான் உயிர் வாழறதிலே அர்த்தமே இல்லை!'' மெலிதாய் ஒரு கண்ணீர்ப் படலம் அவர் விழிகளில்!

''இல்லை மேடம்! அப்படி எதுவும் நடக்காது. இப்போ வாரத்துல ஒரு நாளுன்றதாலே தானே, இப்படிப் பண்றாங்க...! சங்கவிக்கு உங்க மேல வெறுப்பை வரவழைக்கணும்னே அந்த அம்மாவும் இதுக்கு ஒத்துழைக்கிறாங்க போலருக்கு!

''ஆனா புதுப் பொண்டாட்டியோட மகிழ்ச்சியா வாழ்ந்துக்கிட்டிருக்கறதை இவளோட குறுக்கீடு நிச்சயமா தகர்த்துடும்... அதுவே பெரிய தொந்தரவா அமைஞ்சிடும்னா, அதை நிச்சயமா உங்க கணவர் விரும்ப மாட்டாரு! வேணும்னா முயற்சி பண்ணிப் பார்க்கலாமே!

''எனக்கும் சங்கவியை சின்ன வயசிலிருந்தே தெரியுமே மேடம்! அவளும் உங்களை விட்டுட்டுப் போக மாட்டா! நம்பிக்கையுடன் கூறினாள்.

சிறிது நேரம் யோசித்ததில், வசந்தராவிற்கு அதுவும் சரியென்றும், இந்த ஐடியாவை பரீட்சித்துப் பார்க்கலாமென்றும் தோன்றியது.

அதே முறையைப் பின்பற்றி, அந்த வாரம் சங்கவியை எதிலும் கட்டுப்படுத்தாமல், எந்த விஷயத்திலும் தலையிடாமல் ஒதுங்கி இருக்க ஆரம்பித்தார்.

ஒரே வாரத்தில், அவளிடம் மாற்றம் தெரிந்தது.

வசந்தரா அமைதியாக இருந்த விதம், ஒரு வித பயத்தையும், குற்றவுணர்ச்சியையும் அவளிடம் உண்டாக்க, நாம் தப்பு செய்து விட்டோமோ... அதனால் தான் எதை செய்தாலும் அம்மா கண்டு கொள்ளாமல் ஆதரவாக இருக்கிறார்களோ என்ற உறுத்தலும், அவளிடமிருந்து விலகி இருப்பது தவறோவென்ற உணர்ச்சலும், உருவானது.

சிறு வயதிலிருந்தே பழக்கமென்பதால், சங்கவியிடம் இனம் புரியாத ஒரு பாசமிருந்தது, பிரதாவிற்கு!

அதைப் பயன்படுத்தி, சங்கவியிடம் ஒரு நாள் தனிமையில் பேசினாள் அவள்.

ஒரு ஞாயிறன்று அவளை ஐஸ்கிரீம் பார்லருக்கு அழைத்துச் சென்றாள்.

மெதுவாக விசாரித்த போது தான், 'சங்கவியின் குற்றவுணர்ச்சியும், தவிப்பும் புரிந்தன.

உடனே, இது தான் சமயமென்று வசந்தராவின் அன்பையும் பாசத்தையும், தாய்மை உணர்வையும் பற்றிப் புரிய வைத்தாள்.

''சங்கவிம்மா! அம்மா பாவம்டா! அவங்க யாருக்காக இவ்வளவு கஷ்டப்படறாங்க... உனக்காகத் தானே! நீ தான் முக்கியம்கிறதாலே தானே அம்மா வேற யாரையுமே கல்யாணம் செஞ்சுக்கலை?

''இதுவே உங்கப்பா மாதிரி சுய நலமா இருந்திருந்தா, கணவரும் நம்மை விட்டுட்டுப் போயிட்டாரு... குழந்தையையும் ஹாஸ்டல்லே விட்டுடலாம்... நாம ஒரு புது வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கலாமின்னு அவங்க நினைச்சிருப்பாங்களே!

''அவங்களுக்கு உன் அன்பு வேணும்டா! கடைசி வரைக்கும் உன் கூடவே இருக்கணும்... உன்னைத் தாயன்பும் கவனிப்பும் அனுசரணையும் இல்லாமத் தவிக்க விடக் கூடாதுன்னு தான்

''என்னடி இப்படி அரைகுறையுமா டிரஸ் பண்ணிட்டு வந்து நிக்கிறே''

''ஆமா... என் தங்கை இப்படி வந்து நிக்கும் போது கேட்க வேண்டியது தானே''

முன்னீர்ப்பட்டு சண.சிவகுமார்.

இல்லைனு கஷ்டப்படறாங்க! அதைப் புரிஞ்சுக்கம்மா!

''அம்மா ரொம்ப நல்லவங்கடா! அவுங்களுக்கு அப்பா, அம்மா, கணவர்னு எந்த உறவுமே இல்லை... இப்ப நீ மட்டும் தானே இருக்கே!

''உங்க ரெண்டு பேருக்கும் நடுவில இன்னொருத்தர் வரதிலே அம்மாவுக்கு விருப்பமில்லை... அது தன்னோட ரெண்டாவது கணவரா இருந்தாலும் சரி... உங்கப்பாவோட ரெண்டாவது மனைவியா இருந்தாலும் சரி... அதனால தான் உன்னை அவங்க இழக்க விரும்பலை!

''அங்கே உங்க சித்திகிட்டே போய் எத்தனை நாள் உன்னால இருக்க முடியும்?

வாரத்துல ஒரு நாள் போனா, ராஜ போகமா கொஞ்சிட்டு வரலாம்! ஆனா அங்கேயே போய் உன்னால இருக்க முடியாது... புரிஞ்சுக்கடா!''

மெதுவாகப் பேசி அவன் மனதில் பதிய வைத்தாள்.

சரியாக ஒரு மாதம் கழித்து அவனுடைய மன நிலையைக் கண்டு உணர்ந்த நிலையில் ஒரு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார் வசந்தரா.

''சங்கவி... உனக்கு இங்கே இருக்கிறது கஷ்டமா இருந்துதுன்னா, நான் கன்ட்ரோல் பண்றது பிடிக்கலைன்னா, நீ அப்பாவோடயே போய் இருடா செல்லம்... எனக்கு உன் நிம்மதியும் விருப்பமும் தான் முக்கியம்!'' மெல்லிய குரலில் கூறியவர், உடனே ஜெயதேவிற்குப் போன் செய்தார்.

''சங்கவிக்கு அங்கே தான் பிடிச்சிருக்காம்! அதனால அவ திங்க்ஸ் எல்லாம் இன்னிக்கே பேக் பண்ணி அனுப்பி வச்சிடறேன்! என்கிட்ட அம்மா இருக்கற எல்லாரையும் பிரிக்கணும்னு நினைச்சீங்க... நீங்க விரும்பினது நடந்துடுச்சி!

''இன்னைக்கே வந்து அவளையும் அழைச்சிட்டுப் போயிடுங்க! உங்க ரெண்டாவது மனைவிகிட்டே அவளை பத்திரமா பாத்துக்க சொல்லுங்க! நான் சன்டேஸ்லே மட்டும் அவளை இங்கே அழைச்சிக்கிறேன்!'' என்று கூறி விட்டு வைத்தாள்.

மறு கணமே, ''அம்மா'' வென்ற அலறலுடன் ஓடி வந்து பின்புறமிருந்து அவளை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான் சங்கவி.

அவளும் மன வேதனையை மறைத்து அசையாதிருக்கவும், உடனே போனை எடுத்து தன் தந்தையிடம் பேசினான் அவன்.

''அப்பா! நான் அங்கே இனி வர மாட்டேன்... இங்கே அம்மாவோட தான் இருப்பேன்!'' என்று வைத்தவன் தாயிடம் திரும்பினான்.

''அம்மா! நான் இனிமே ஒழுங்கா இருக்கேம்மா... இனிமே அப்பாகிட்டே போறேன்னு மிரட்ட மாட்டேன்.... என்னை மன்னிச்சிடுங்கம்மா... சாரி!'' என்று கதற, அவளை மெதுவாக வருடி ஆறுதல் படுத்தினார் அவர்.

5

அன்றிலிருந்து இன்று வரை, ஜெயதேவ் ஒரு போன் கூட செய்யவில்லை.. தன் மகனை வந்து பார்க்கவுமில்லை!

உடனே டிரான்ஸ்பர் வாங்கி வேறு ஊருக்கு சென்று விட்டார்... இப்போது அவருக்கே ஒரு குழந்தை பிறந்திருப்பதாகக் கேள்வி!

அவருடைய நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றத்தைப் புரிந்து கொண்ட சங்கவியும், இப்போதெல்லாம் நிறையவே மாறி விட்டான்.

அன்றிலிருந்து, அவனுக்கு பிரதாவும் ஒரு காட் மதர் போலாகி விட்டாள்.

நிஜமான பாசத்தையும், பரிவத்தையும் புரிய வைத்தவளை, அந்த சிறு பெண் குழந்தை உயிராய் நேசிக்க ஆரம்பித்தது.

பிரதா அவனிடம் பேசியதைப் பற்றி, சங்கவியே ஒரு நாள் வசந்தராவிடம் கூற, மிகவும் நெகிழ்ந்து போனார் அவர்.

தன் மகன் மனம் மாறித் தன்னுடன் இணைவதற்கு, அவளுடைய பேச்சு தான் முக்கியமான ஒரு தூண்டுகோலாக இருந்திருக்கிறதென்பதை உணர்ந்தவரின் இதயம், நன்றிப் பெருக்கால் நிறைந்து போனது.

அன்றிலிருந்து இன்று வரை, இருவரும் நெருங்கிய தோழிகளாகத் தான் இருக்கின்றனர்.

எந்த விஷயத்தையும் மனம் விட்டுப் பகிர்வதில், ஒரு சீனியர், ஜூனியர் என்ற இடைவெளி இல்லாமல் நெருங்கிய அன்யோன்யம் இருவரிடையேயும் இழையோடுகிறது.

இப்போது, வசந்தராவின் வீட்டினரும், அவளைத் தம்முள் ஒருவராக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இரு குடும்பங்களுக்குள்ளும், மீண்டும் ஒரு இனிய உறவு மொட்டு விட்டு மலரத் துவங்கியிருக்கிறது.

திடீரென்று யாரோ தன்னை அழைப்பது புரிய நிமிர்ந்தாள், வசந்தரா தான் அவளை உசுப்பிக் கொண்டிருந்தார்.

''என்ன பகல் கனவா? கனவிலே என்ன... அந்த பக்கத்து வீட்டு ராஜகுமாரனா?'' கிண்டலாகக் கேட்டார்.

சட்டென்று முகம் கசங்க, ''ப்ச்... மேடம் என்ன கிண்டலா? என்னைப்பத்தி நீங்க என்ன நினைச்சீங்க?'' சலுகையுடன் சிணுங்கினாள் அவள்.

''சரி...சரி... வா! அடுத்தது நம்ம கேஸ் ஹியரிங் தான்.'' என்று கோர்ட்டுக்குள் அவளை அழைத்துச் சென்றார் அவர்.

அன்று மாலையில் திரும்பி வரும் போது, அவருடனே சென்று சங்கவியைப் பார்த்தாள், அவனிடம் நிறைய மாற்றங்கள் வந்திருந்தன.

விடலைப் பருவத்தில் வரும் பல மாற்றங்களைப்பற்றி அவன் சந்தேக வினாக்களை தனிமையில் எழுப்ப, எல்லாவற்றையும் மென்மையாக விளக்கி, அவனுடைய தேவையில்லாத பயத்தை எல்லாம் போக்கி விட்டு விடை பெற்றாள் பிரதா.

இந்த இளைய சமுதாயத்திடம், எதையுமே பயமின்றிப் பகிர்ந்து

கொள்ளும் தைரியத்தையும், கூச்சமின்றி கேள்வி எழுப்பும் துணிச்சலையும் பார்க்க முடிந்ததில் மகிழ்ச்சியானது மனது.

இந்தத் தலைமுறையில், பெரியவர்களுக்கும், "இது பிள்ளைகளுக்குமிடையே, ஆரோக்கியமான ஒரு வித நட்பு இழை கோர்த்திருப்பதை உணர முடிந்தது!

நாளை, வனிதாவின் கற்பழிப்பு வழக்கில் அந்தக் குற்றவாளிகு கூட்டாயம் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் தன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸுக்கு அவன் வந்த போது, மணி ஆறாகியிருந்தது.

கடையை சுற்றிப் பார்த்து, நிறை குறைகளைப் பற்றி பணிபுரிபவர்களிடம் பேச்சு கொடுத்துக் கொண்டு வளைய வந்து கொண்டிருந்தான் அவன்.

அப்போது, "மிஸ் பிரதா" என்று யாரோ அழைக்கும் சப்தம் கேட்டுத் திரும்பினான், அங்கு சிற்பி நின்றிருந்தான்.

உடனே நேற்றைய நினைவில் மனம் வாடினாலும், "ஹலோ சார்... வாங்க... என்ன வேணும்... கேன் ஐ ஹெல்ப் யூ?" கஸ்டமர் என்ற முறையில் சிறிது உற்சாகமாகவே கேட்டாள்.

"இது உங்க கடைன்னு அம்மா சொன்னாங்க... எனக்கு இந்த லிஸ்ட்லே இருக்கிற சாமானெல்லாம் வேணும்!" என்றபடி ஒரு பட்டியலைக் கொடுத்தான் அவன்.

அவள் ஒவ்வொன்றாக ட்ராலியில் எடுத்துப் போட்டபடி அவனுக்கு உதவி செய்தபடி வர, ஓரக்கண்ணால் அவளையே நோக்கியவனுக்குள், தேனியைப் போன்ற அவளுடைய சுறுசுறுப்பும், அவள் காட்டிய விவேகம் கலந்த பொறுப்புணர்வும், பெரும் வியப்பைத் தூண்டின.

"நீங்க ஒரு லாயர்னு அம்மா சொன்னாங்க!" அவனைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வம் அவள் குரலில் கசிந்தது.

அவனுக்கு தேவையான பொருட்களை எடுத்து வைத்தபடி வந்தவன், "ம்... ஆமாம்! நான் ஒரு லாயர் தான் கோர்ட்டுக்கு போய்ட்டு வந்து, ஈவினிங்லே அப்பாவுக்கு இங்கே கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவேன்... நைட் ரெண்டு பேருமா அக்கௌண்ட்ஸ் பாத்துட்டுக் கிளம்புவோம்!" இறு முறுவலுடன் தலையை சரித்தபடிக் கூறினான்.

பிறகு இருவருமாக சேர்ந்து மளிகை சாமான்களை எடுத்துக்

சர்க்கஸ்ல பல் விளையாட்டு பார்க்கக் கூட்டிட்டு போறேன்னு சாராயக் கடைக்கு கூட்டிட்டு வந்திருக்கீங்க?

இதுவும் பார்த்தன் இங்கேயும் விளையாட்டு நடக்கும்.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

கொண்டிருந்த போது, குழந்தைகளுக்கான உணவை எடுப்பதற்காக ஒரே சமயத்தில் அவனும் கை நீட்ட, அவளும் அதை எடுத்து விட்டாள்.

ஒரே நேரத்தில் இருவருடைய கைகளும் நீண்டதில், சட்டென்று இரு கரங்களும் இணைய, அவளுடைய விரல்களைத் தீண்டியதும், மின்சாரம் பாய்ந்தது போல் விடுவித்துக் கொண்டான் அவன்.

அவனுக்கு தான், ஒரு பிறந்த குழந்தையின் பிஞ்சுப் பாதங்களை ஸ்பரிசித்த உணர்வு.

"சாரி..." என்று முணுமுணுத்த போது, அவனுடைய படபடப்பு வித்தியாசமாகத் தெரிய, அவளுள் நமட்டுச் சிரிப்பு குமிழியிட்டுப் பிரிட்டது.

"என்னாச்சு! என்னவோ, ஹை வோல்டேஜ் டிரான்ஸ் பார்மரைத் தொட்ட மாதிரி இப்படிப் படபடப்புறீங்க?"

கண்கள் இடுங்க குறும்பு கலந்த கேலியுடன் அவள் கேட்க, அவன் மௌனமாக டிராலியைத் தள்ளியபடி விலகிச் சென்றான்.

அவளுடைய குறும்புச் சிரிப்பும், இதழோரத் துடிப்பும், சட்டென்று ஒரு வித விதிர்ப்பை ஏற்படுத்தினாலும், தோளைக் குலுக்கி அதை உடனே விலக்கினான்.

அவனுக்குள் தான் சிறு சலனம்...! ஏனோ முதன் முதலாக ஒரு பெண்ணிடம் தன் இதயத்தை தொலைத்து விடுவோமோவென்ற பயம், அந்தக் கணமே அவனுள் வந்தது.

சட்டென்று தலையைக் குலுக்கி தன்னை அமைதிப்படுத்திக் கொண்டவளையே ஓரக்கண்ணால் நோக்கியவன், "என்ன சார் ஏதாவது மறந்துட்டீங்களா?" ஆவலுடன் கேட்டான்.

"ஊஹூம்... இல்லை?" என்றவன், "இனிமே மறக்க முடியும்னு தோணலை!" மெதுவாக முணுமுணுத்தான்.

மனதிற்குள்.... திடீரென்று வானவில்லின் வண்ணங்கள் சரம் கோர்த்தன. பிறகு இருவரும் கவுன்டருக்கு வந்து பில் போட, தன் தந்தைக்கு அவனை அறிமுகப்படுத்தினாள் அவள்.

"அப்பா! இவர் தான் மிஸ்டர் சிற்பி! சாரதாம்மாவோட பையன்!" என்ற போது, இருவரும் மகிழ்ச்சியுடன் கை குலுக்கி விட்டுப் பேச ஆரம்பித்தனர்.

அவன் தன் துறையைப் பற்றியும், அவர் தன் தொழிலைப் பற்றியும் சுவாரசியமாகப் பேச மெதுவாக விலகிச் சென்றான் அவன்.

6

பிரதா, பொருட்களை அடுக்கி வைக்கும் விதம் பற்றி புதிய விற்பனைப் பெண்ணிடம் சில ஐடியாக்களைக் கொடுத்துக் கொண்டிருந்த போது தான், அவளிடம் விடை பெற்றுக் கிளம்பினான் அவன்.

வீட்டிற்குச் செல்லும் போதே, அவளுடைய நிர்வாகத் திறமையும், நேரடி கவனிப்பும், சுறுசுறுப்பும் அவனைப் பெரிதும் ஈர்த்தன!

மாறுபட்ட மதிப்பீடால் மகிழ்ச்சியான வாழ்வின் உச்சமாய்த்

தோன்றியது... ஏனோ அவளைப் பார்த்த போது! மெலிதாய்... ஒரு வல்லின புத்தியுடன் அவனை ஆகர்ஷிக்கத் தொடங்கியிருந்தது... இதயம்!

இதுவரை, எத்தனையோ பெண்களைப் பார்த்திருந்தாலும் இந்த அளவு நெஞ்சம் சலனப்பட்டதில்லையே, என்ற உண்மையும் உறைத்தது.

அன்றிரவு, அனுமதியின்றி நுழைந்த அந்தரங்கக் கனவுகளிலும் ஆகாயகருநீலமாய் அவள் மின்னினாள்!

சட்டென்று விழிப்பு வர, எழுந்து அமர்ந்த போது, மின்சாரம் நின்று போய், நிலவுத் துளிகளாய்.... பனி முத்துக்களாய்... வியர்வை அரும்பத் துவங்கியிருந்தது... தேகத்தில்!

மெல்ல எழுந்து ஜன்னலருகில் சென்று பார்த்தால் பக்கத்து வீடு தெரிந்தது...

அவளுடைய அறையில்... சிறு ஒற்றை மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில், ஜன்னல் கம்பிகளுக்குள் புதைந்து, வானில் நிலவை ரசித்துக் கொண்டிருந்தது அவள் முகம்!

அப்போது தான் மொட்டவிழ்த்த மலராய் உறங்கி விழித்திருந்த அழகு முகத்தில், இரு கரு விழிகளும் பளபளப்பாய் மின்னியபடி கவிதை சிந்த, அந்த நிமிடமே கவிதைத் தருணமாய் மாறி, அந்தப் பாடல் வரிகளை மௌனமாய் முணுமுணுத்தது, இதயம்!

"யார்ந்த தேவதை...? யார்ந்த தேவதை...? ஒரு கோடிப் பூக்கள் உலகமெங்கும் உண்டு... இந்த பெண் போல அழகான பூ ஒன்று உள்ளதா?"

பார்த்த நாளிலிருந்தே மெலிதாய் ஒரு முதல் சலனத்தை ஏற்படுத்தி, இன்று தன் முகவரியை அவனுக்குள் பதித்தவளை எண்ணி, ஏங்கத் தொடங்கினான் அவன்!

திடீரென்று மின்சாரம் வந்து விட, அவள் உருவம் மெல்லிய புகை மூட்டமாய் மறைந்து போனது.

"கடவுளே! என்னுடைய இந்த நேசமாவது ஜெயிக்குமா? இல்லை.... பூங்குழலியுடைய காதலைப் போல் கானல் நீராய்க் கரைந்து போகுமா?" மெலிதாய் ஒரு நடுக்கம் ஓடியது அவன் உடலில்!

காதல் என்பதெல்லாம் ஒரு கண்ணாமூச்சி விளையாட்டாய் எண்ணியிருந்தவனது இதயத்தில் முதல் காதல் மொட்டு விட்ட மாயம் மட்டும் புரியவில்லை!

அந்த வெள்ளிக்கிழமை அன்று ரங்கமும், சாரதாவும் மைலாப்பூர் கோவிலுக்குக் கிளம்பி கொண்டிருந்தனர்.

இருவரும் வாசலுக்கு வரும் போது தான், பிரதா தன் ஸ்கூட்டியில் வந்து இறங்கினாள்.

"வாங்கம்மா... என்ன ரெண்டு பேரும் எங்கேயோ கிளம்பிட்டீங்க போலருக்கு... ஏய்... குட்டிப்பொண்ணு நீயும் போறியா?" என்றபடி ஆவலுடன் மதியைத் தூக்கிக் கொண்டாள்.

கோர்ட்டிலிருந்து நேராக வீட்டிற்கு வந்து விடும் நாட்களில், அவளுடன் சிறிது நேரம் விளையாடிய பிறகே கடைக்கு செல்வது,

இப்போதெல்லாம் வழக்கமாகியிருந்தது.

"நாங்க ரெண்டு பேரும் கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போறோம்... நீயும் வரியா பிரதா?" ஆர்வத்துடன் அழைத்தார் சாரதா.

"அவ கோவிலுக்கெல்லாம் வரதே இல்லை சாரதா! கேட்டா செய்யும் தொழிலே தெய்வம்மா... ரொம்ப நாளாச்சு அவ கோவிலுக்கு வந்து!" ஒரு பெருமூச்சுடன் கூறினார் ரங்கநாயகி.

"ம்மா... இன்னிக்கு எங்களோட வரக் கூடாதா?" பரிவுடன் அழைத்த சாரதாவிடம், ஏனோ மறுக்க இயலாமல், உடனே முகம் கழுவித் தயாராகி வந்தாள் அவள்.

"இன்னிக்கு மழை தான் வரப்போகுது!" வியப்புடன் ரங்கநாயகி கூற, அனைவரும் கிளம்பினர்.

கபாலீஸ்வரரையும் கற்பகாம்பாளையும் தரிசித்து விட்டு பிரகாரத்தில் அமர்ந்தவுடன் மதியை மடியில் அமர்த்திக் கொண்டு விளையாட ஆரம்பித்தாள் பிரதா!

பெரியவர்களிருவரும் பொதுவான கதைகளைப் பேச ஆரம்பிக்க, ரங்கநாயகி தான் மெதுவாகக் கேட்டார்.

"ஏன் சாரதா? நான் கேக்கறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க! உங்க பையனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியது தானே! சின்ன வயசு தானே அவருக்கு! வாரிசு குழந்தையையும் பார்த்துப்பா இல்லையா?" ஆதங்கத்துடன் கூறி விட்டார்.

அதிர்ந்து போய் நிமிர்ந்த சாரதாவால், ஒரு கணம் பேசவே இயலவில்லை.

பிறகு, சுதாரித்து பேச ஆரம்பித்தவரின் விழிகளில், கண்ணீர் குளம் கட்டியிருந்தது.

"ரங்கம்! சிற்பிக்கு இன்னும் கல்யாணமே ஆகலை! இவ இறந்து போன என் மகள் பூங்குழலியோட குழந்தை"

அவர் கூறியதும், உறைந்துபோன ரங்கம், தவிப்புடன் உடனே மன்னிப்பைக் கோரினார்.

"ஓ! சாரி சாரதா... நான் தப்பா நினைச்சிட்டேன்! ஏன்... உங்க பொண்ணுக்கு என்னாச்சு?" கவலையுடன் வினவினார்.

உடனே சாரதாவின் மனதில் பாரமாய் பரவ ஆரம்பித்தன... பல சோக நிகழ்வுகள்!

சாரதாவின் நினைவுகள், மூன்று வருடங்கள் பின்னோக்கிப் பயணித்தன. வழி முழுவதும் துக்கத்தைத் தூர் வாரும் பணிகள்!

7

அப்போது... பூங்குழலி பி.எஸ்சி. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

சாரதாவின் கணவர் தனசேகர், அரசாங்க அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார்.

அழகாய்... துறுதுறுப்பாய் வளைய வந்த பூங்குழலியை, இண்டர்நெட் மூலம் கிடைத்த புதிய நட்பு, அந்த வயதிற்கேயுரிய சிலிர்க்க வைக்கும் அனுபவமாய் [illegible].

தினம் தன்னுடைய கம்ப்யூட்டரில் சாட் செய்வது வழக்கமென்பதால், அதன் மூலம் புதிதாய் ஒரு நட்பு வட்டம் உருவாகியிருந்தது.

அதில், ஒரு வித்தியாசமான தன்மையுடன் அவளிடம் பேசி அமெரிக்காவிலிருந்து தன் புகைப்படத்தையும் அனுப்பியிருந்தான் ஒரு வாலிபன்!

நாளாக ஆக, இருவருக்குள்ளும் பார்க்காமலேயே பேச்சிலேயே, நெருக்கம் அதிகரித்து விட... அவளும் தன் போட்டோவை அந்த கரனுக்கு அனுப்பிவைத்திருந்தாள்.

அவனோடு பேச... பழக... தனக்கான நேரத்தை எல்லாம் அவனுடன் மட்டுமே செலவு செய்ய ஏனோ அவளின் நெஞ்சம் விரும்பியது.

வாலிப வயதின் அபிலாஷைகள், தன் மனதிலுள்ளவற்றையெல்லாம் பகர்ந்து பகிர்கின்ற ஒரு நட்புத் தேடல், எதிர்பார்க்காத இடத்தில் அன்பைப் பெறுவது, இவையெல்லாம் தான் இத்தகைய தொடர்புகளுக்குக் காரணமாகின்றன.

தாய் தந்தையிடம் ஒரு நண்பர்களைப் போல் பழகுபவர்களுக்கு, இது போன்ற ரகசியத் தேடல் அவசியமின்றிப் போகிறது.

தன்னுடைய உணர்வுகள், ரசனைகள், ஏக்கங்கள் எல்லாவற்றையும் முகமறியா ஒருவரிடம் எப்படிப் பகிர்வதென்ற தயக்கமும் வருவதில்லை.

மேலை நாட்டுக் கலாச்சாரத்தில் மயங்கி, அதில் தனக்குப் பிடித்ததை எடுத்து நம் கலாச்சாரத்துடன் இணைத்து மகிழ்வது... உடை விஷயத்தில் மட்டுமின்றி பழக்க வழக்கங்களிலும் தொற்றிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

ஒரு நாள் இருவரும் இண்டர்நெட்டில் பேசிக் கொண்டிருக்கும் போது, அங்கு வந்துவிட்ட சிற்பி தான் விஷயத்தைக் கண்டு பிடித்து விட்டான்.

பிறகு, தனசேகருக்கும், சாரதாவிற்கும் விபரம் தெரிந்துவிட... அந்த வீடே போர்க்களமாகிறது.

ஆனால், பூங்குழலி தன் முடிவில் தீர்க்கமாக இருந்தாள்.

ஒரே பெண் என்பதால், வீட்டில் அவளுக்கு மிகவும் செல்லம்!

அவளை நோகடிக்க விரும்பாத சிற்பியும் சாரதாவும், தனசேகரிடம் பேச, அவரும் அரை மனதாக ஒப்புக் கொண்டார்.

ஆனால் ஜாதகம் பார்த்து ஒத்து வந்தால் மட்டுமே அவள் விருப்பத்திற்கு சம்மதிப்பேன் என்ற பிடிவாதத்துடன் அவர் இருக்க, அவனைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று உறுதியுடன் நின்றாள் பூங்குழலி!

முதலில் கோபம் கொண்டாலும், அந்தப் பையனுடைய ஜாதகத்தையும், பயோடேட்டாவையும் அனுப்பும்படிக் கூறினார் தனசேகர்.

பிறகு, ஜாதகமும் பொருந்திவிட, கரனுடைய படிப்பு, தொழில், குடும்ப விபரங்களும் அனைவருக்கும் பிடித்துப் போயின.

அவன், தன் தாய் தந்தையை ஒரு விபத்தில் இழந்ததால், மாமா குடும்பத்தால் வளர்க்கப்பட்டவன் என்பது தெரிந்ததும், சாரதா நெக்குருகிப் போனார்.

அவனுக்கு, மனதளவில் ஒரு பெற்றோராகவே தனசேகரும் அவரும் மாறிப் போயினர்.

ஒரு மாப்பிள்ளையாக, அவன் எதுவுமே டிமாண்ட் பண்ணிக் கேட்காதது வேறு அவர்களை நெகிழச் செய்வதாய்! அவர்கள் விருப்பம் போல் எல்லாமே செய்யும்படிக் கூறிவிட்டான் கரன்.

அந்த மாதமே, அவன் குடும்பத்திடமும் பேசி முடித்துவிட்டார் அவர்.

கல்யாணத் தேதியும் குறிக்கப்பட, வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற பெருமையும், பெரும் செல்வந்தனென்ற மகிழ்ச்சியும் அனைவரையும் வெகுவாய் ஆட்படுத்தியிருந்தன.

அதற்குப் பிறகு, தினமும் அவளிடம் வெப் கேமில் பேசிப் பேசி சிவக்க வைத்துக் கொண்டிருந்தான் கரன்.

தான் வேலை செய்கின்ற கம்பெனியே அவனை இந்தியாவிற்கு ஒரு வருடம் புராஜெக்டிற்கு பெங்களூர் அனுப்பப் போவதாகக் கூறியபோது, அவர்களுடைய குடும்பமே மிகவும் மகிழ்ந்தனர்.

சாரதாவிற்கும், மாப்பிள்ளையின் பெருமையைப் பற்றி நினைத்தாலே பெருமிதமாய்!

அப்போது தான், வெளிநாட்டு மாப்பிள்ளை என்பதால் எச்சரிக்கையாய் இருக்கும்படியும், நன்றாக விசாரிக்கும்படியும், சில உறவினர்கள் தனசேகரிடம் எச்சரித்தனர்.

ஆனால் தன் நண்பரிடம் இது பற்றிப் பேசியபோது, அவர்தான் தனசேகரை சமாதானம் செய்தார்.

''தனா! மாப்பிள்ளை பேசிப் பழகற விதத்திலேயே தெரியாதா உனக்கு! சிலர் இப்படித்தான்... நல்ல வரன் அமைஞ்சா குழப்பி விட்டுக் கலைக்கப் பாப்பாங்க... அதுக்கெல்லாம் கவலைப்படாதே! பூங்குழலி வெளிநாட்டில் போய் மகாராணியாட்டம் வாழப்போறா பாரு'' என்று தேற்றினார்.

திருமணத்திற்கு முதல் வாரமே, கரன் ஊரிலிருந்து சில உறவினர்களுடன் வந்து ஒரு ஓட்டலில் தங்கி விட்டான்.

அனைவருமே மிகவும் வசதி படைத்தவர்களாக, செல்வச் செழுமையும் நுனி நாக்கு ஆங்கிலமுமாய் வலம் வந்திருந்தனர்.

அவர்களும், சீர் செனத்தி என்று எதுவும் பேசாமலிருக்க, அவர்களுடைய பெருந்தன்மை கண்டு வியப்பு கலந்த பெருமையிலிருந்தனர் அனைவரும்!

''ரிடையர்டு போலீஸை வைத்து சினிமா எடுத்தால் என்ன பேரு வைக்கலாம்?''

''அக்னித் தீர்த்த காலம்''

- ச. ஆ. கேசவன், இளையம் மணியாச்சி.

திருமணம் விமரிசையாக நடந்து முடிய, உறவுகள் ஊருக்கு கிளம்பி விட, பெண்ணும் மாப்பிள்ளையும் தேனிலவுக்குக் கிளம்பினர்.

அங்கு அவளுக்கு ஒரு வைர நெக்லஸை அவன் பரிசளிக்க, மெய் சிலிர்த்துப் போனது பூங்குழலிக்கு!

குழலி... குழலி என்று அவளுடனே சுற்றித் திரிந்து அன்பைப் பொழிந்தான் அவன்.

ஒரு நிமிடம் கூட அவளை விட்டு விட்டு அவனால் தனியே இருக்க முடியவில்லை.

தேனிலவைத் திகட்டும் வரையில் அனுபவித்து விட்டு, இருவரும் ஊர் திரும்பினர்.

தேனிலவிலும், திரும்பி வந்த பிறகும், அவளிடம் உயிராய் இருந்தான் கரண்.

பிறகு விருந்து முடிந்து அவன் பெங்களூரில் வேலையில் சேர வேண்டுமென்று கூற இருவருக்கும் ஒரு பிளாட் வாங்கிக் கொடுத்து அங்கேயே குடித்தனம் வைத்து விட்டு மூவரும் சென்னைக்குத் திரும்பினர்.

பூங்குழலியும் உடனே கர்ப்பமானாள்... ஆனால் அவளுடைய உற்சாகமும் நிம்மதியும் அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

வளைகாப்புக்கென்று ஏழாம் மாதம் அவள் தாய்வீடு வந்தபோது தான், அந்த அதிர்ச்சியான செய்தி, அவளுடைய தலையில் பேரிடியாய் இறங்கியது.

திடீரென்று தொலைக்காட்சியில் கரணுடைய புகைப்படம் காட்டப்பட, குடும்பமே அதிர்ந்து போனது.

போலீசார் மோசடி வழக்கில் அவனை கைது செய்திருந்தனர்.

அவன் அமெரிக்காவில் வேலை செய்யவில்லை என்பதும், இந்தியாவிலேயே பல ஊர்களில் பல பெயருடன் பெண்களை ஏமாற்றி வந்ததும் அப்போது தான் தெரியவந்தது.

வேறு வேறு பெயர்களில் கரண் பலரைத் திருமணம் செய்து ஏமாற்றியதை, எல்லாப் பத்திரிகைகளும் தலைப்புச் செய்தியாய் எழுதின.

அவனால் பாதிக்கப்பட்ட சில பெண்களின் வாக்கு மூலத்தையும் போலீசில் புகார் செய்ததால் அவன் மாட்டிக் கொண்ட விதத்தையும், மீடியாவில் எல்லா சேனல்களும் துகிலுரித்துக் காட்டின.

இதை எதிர்பார்க்காத அந்தக் குடும்பமே, இடிந்து போனது.

பூங்குழலி தன் அறைக்குள்ளேயே அடைந்து, பெரும் உறுத்தலுடன் மனச்சிதைவு நோய்க்கு ஆளானாள்.

இதைத் தாங்க முடியாத தனசேகர், ஒரு நாள் அவமானத்திலும் தீராத வேதனையிலும் அதிகப்படியான தூக்க மாத்திரைகளை விழுங்கி, மீளாத் துயில் ஆழ்ந்து திரும்பி வரவே முடியாத இடத்திற்குச் சென்று விட்டார்.

சாரதாவும் பெரிதும் உடைந்திருக்க, சித்தி தான் அனைவரையும் தாங்கும் தூணாக மாறிப் போனாள்.

அவளுக்கும் தாங்க முடியாத வேதனை இருந்தாலும், வீட்டிற்குத் தலைவனாக இருந்த தந்தை இறந்ததால், இருவரையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றாள்.

கணவரைப் பிரிந்த சோகத்திலும் விட்டத்தை வெறித்தபடி உணர்வுகளைத் தொலைத்து இறுகி இருக்கும் பூங்குழலியைப் பார்த்தும், உருக் குலைந்து போனார் சாரதா.

8

ஒரு நாள் அவளுக்கு திடீரென்று இடுப்பு வலி எடுத்து விட, உடனே இருவருமாகச் சேர்ந்து அவளை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பிரசவத்தின் போது அதிகப்படியான மன உளைச்சலால் பிட்ஸ் வந்து பூங்குழலி இறந்துவிட, நிறைமதி அவளுக்கு பதிலாய் சாரதாவின் கைகளில் தவழ்ந்தாள்.

இதை எதிர்பார்க்காத சாரதா நடைப்பிணமாகி விட, அந்தக் குழந்தையின் மழலைப் பேச்சும், சிரிப்புமே இப்போது அவரை உயிர்ப்பித்திருக்கின்றன.

அன்றிலிருந்து சித்தியும் திருமணம் குடும்பம் என்ற வார்த்தைகளையே வெறுக்கத் துவங்கி விட்டாள்.

கரண் மீது வழக்குப்பதிவு செய்து புகார் அளித்திருந்ததில், அந்த பெங்களூர் பிளாட் மட்டுமே மிஞ்சியிருப்பது தெரிந்தது.

அதுவும் பூங்குழலியின் பெயரில் இருந்ததால், அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவளுக்குப் போட்ட நூறு பவுன் நகைகளும் விற்கப்பட்டிருந்தன.

அவன் போட்ட வைர நெக்லஸே போலி என்று பிறகுதான் தெரிந்தது.

திருமணத்தின் போது அவ்வளவு பெருந்தன்மையாய் பாசமாய் நடந்து கொண்டவன், ஒரு போலி மாப்பிள்ளை பல பெண்களின் வாழ்க்கையை அழித்த ஒரு காமுகன் என்பதையே, அவர்களால் நம்ப முடியாமல் இடிந்து போயிருந்தனர்.

பிறகு காவல் துறையின் முயற்சியால் வழக்கு முடிந்து கரண் சிறையில் தள்ளப்பட, பாதிக்கப்பட்ட பல பெண்களை நினைத்தால் தான் பரிதாபமாய் இருந்தது.

இண்டர்நெட் மூலம் வந்த காதலை நம்பி பூங்குழலி ஏமாந்து உயிரை விட...

மாப்பிள்ளையைப் பற்றி சரியாக விசாரிக்கப்படாமல் அவசரப்பட்டு முடிவெடுத்த பாவத்திற்காக, தன் உயிரையே சிலுவையில் அறைந்து கொண்டார் தனசேகர்.

சாரதாவும் சித்தியும் அந்தத் துக்கத்திலிருந்து விடுபட வெகு நாட்களாயின!

உடனே பெங்களூரிலிருந்து பிளாட்டையும் வளசரவாக்கத்திலிருந்த தங்களின் வீட்டையும் விற்றுவிட்டு, அவர்கள் திருவான்மியூரில் வீடு வாங்கிக் குடி வந்து ஒன்றரை வருடங்களாகின்றன.

"மதி"க்கும் ஒன்றரை வயதாகிறது... அவள் முகம் பார்த்தே இருவரும் தங்களின் வேதனைகளை மறந்திருக்கின்றனர்.

பூங்குழலி, தனசேகரின் இறப்பு இருவருக்கும் பெருத்த அடியாய் இண்டர்நெட் காதல் வெளிநாட்டு வரன் என்ற மோகத்தில் வாழ்க்கையைத் தொலைத்தவளை நினைத்தால், பெரும் வேதனை வாட்டியது!

சிற்பி, திருமணம் என்ற சடங்கையே வெறுக்கிறான்.

அவர் எவ்வளவு கூறினாலும் அதற்கு உடன்பட மறுக்கிறான் மகளின் வாழ்க்கையும் முடிந்து போய், மகனும் தனிமரமாய் நிற்பது கண்டு உடைந்து போனாலும், அவரும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்.

கரண் போன்ற மனிதர்களை... நச்சுப் பாம்புகளை இன்னும் சமூகத்தில் நம்பி கொண்டு தான் இருக்கிறார்கள்.

சாரதா எல்லாவற்றையும் கூறி முடித்துவிட்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட, ரங்கம்தான் அவரை சமாதானப்படுத்தினார்.

அவர் கூறிய கதையைக் கேட்டு பிரதா உறைந்து அமர்ந்திருக்க, விழிகள் சோகமாய் உலர்ந்திருந்தன.

ரங்கநாயகி வெள்ளமாய்ப் பெருகிய கண்ணீரைத் துடைத்தபடி, சாரதாவை அணைத்து ஆறுதல் கூறினார்.

பிரதாவிற்கு, தன் மடியில் உறங்க ஆரம்பித்திருந்த மதியைப் பார்த்தால், இப்போது பரிதாபமாய் இருந்தது.

அம்மாவையும், அப்பாவையும் இழந்த அந்தக் குழந்தையின் நிலை, மனதை பெரிதும் கலக்கச் செய்தது!

கடவுளே ஏன் மனிதர்களுக்கு சோதனைகளைத் தருகிறாய்? அவர்களைத் தூய்மையாக்கி சோதத் தீயிலிட்டு புடம் போடவா? நெஞ்சிற்குள் பல வினாக்கள் சரங்களாய் எழுந்தன.

சாரதாவையும் சிற்பியையும் நினைத்தாலே பரிதாபமாய்... அந்தக் குழந்தை மதியின் இழப்பு இதயத்தில் குருதிப் புனலாய் பாய்ந்தது.

கரண் போன்ற மனிதர்களை இந்த சமூகம் ஏன் மன்னித்து மீண்டும் சமுதாயக் கூட்டிற்குள் உலவ விடுகிறதென்ற கேள்வி நெருஞ்சி முள்ளாய் உள்ளே நெருடியது.

பணத்திற்காகவும் காம இச்சைக்காகவும் தன் உடலை விற்கின்ற இது போன்ற ஆண்களுக்கு, என்ன தண்டனை தந்தாலும் தவறில்லை என்று தோன்றியது.

அந்த மாலைப்பொழுது மிகவும் சோகம் நிறைந்ததாய் மாறிவிட, வானமே அந்தக் கண்ணீர்க் கதையைக் கேட்டு முகமிருட்டி, கண்ணீர்த் துளிகளை சிந்த ஆரம்பித்தது.

உடனே எழுந்த மூவரும் வீட்டிற்குக் கிளம்பினர்.

காரில் திரும்புகின்ற வழியில், கனத்த மவுனமே அனைவரையும் ஆக்கிரமித்திருக்க, அமைதியாக வந்தனர்.

அன்றிரவு முழுவதும் மதியின் நினைவும், அவள் அநாதையாக்கப்பட்ட விதமுமே நினைவிற்கு வந்து பிரதாவை உறங்க விடாமல் செய்தன.

வெகு நேரம் கழித்துத் தூங்கியவளையும் ஆக்கிரமித்து, வெறியாட்டம் போட்டன, சில துர் சொப்பனங்கள்!

மீறு நானே இதைப் பத்தி வசந்தராவிடம் அவள் பேசியபோது, அவர் பெரிதும் அதிர்ந்து போனார்.

அந்தக் கேசை அவருடைய சீனியர் லாயர்தான் எடுத்து நடத்தி வெற்றியும் பெற்றது நினைவிற்கு வந்தது.

பெண்களுக்கு, இச்சமூகத்தில் இழைக்கப்படும் கொடுமைகள் தான் எவ்வளவு அநியாயமானதாய் இருக்கிறதென்று, இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

இது போல, ஒரு பெண்ணும் பணத்திற்காக ஒரு ஆணை ஏமாற்றியதைப் பற்றி அப்போது கூறினாள் பிரதா.

ஒரு திரைப்பட நடிகையின் புகைப்படத்தைத் தன் போட்டோ என அனுப்பி வெளி நாட்டிலிருந்த ஒரு வாலிபனிடமிருந்து பொருட்களாகவும், பணமாகவும் கறந்த ஒரு பெண்ணும், இச்சமூகத்தில் ஒருத்தி தானே என்று நினைக்கும்போதே கசந்தது.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இந்த உலகில் குளித்துக் கொண்டே இருப்பார்கள் என்கிற உண்மையும் புரிந்தது!

திடீரென்று பிரதாவின் குரல் அவரை உசுப்பியது. "மேடம்! சங்கவி எப்படி?"

"ம்... நல்லாயிருக்கா! இந்த வயசிலே ரொம்ப தனியா விடக்கூடாதுன்னு தான் அம்மாவை அண்ணா வீட்டிலிருந்து இங்கேயே வரச்சொல்லிவிட்டேன்! நேத்து தான் அவங்க வந்தாங்க!" பெரும் நிம்மதி தெரிந்தது அவர் குரலில்!

"நானே இது பத்தி உங்க கிட்டே சொல்லணும்னு நினைச்சேன் மேடம்! இந்த அடலொசன்ட் ஏஜிலே தான், நம்மோட கவனிப்பும், அருகாமையும், அனுசரணையும் ஒரு பொண்ணுக்கு அதிகமாத் தேவை!

"அவங்க பயப்படற சில மாற்றங்கள், உடனே நிகழறப்போ பொறுமையா அது எல்லாருக்கும் நடக்கறதுதான்னு எடுத்துச்சொல்ல, ஒரு பெரியவங்க நிச்சயமா வேணும்! நானும் அவகிட்டே இது பத்தி கொஞ்சம் பேசியிருக்கேன்!

"பசங்க நம்மை மாதிரி இல்லை மேடம்! இப்போல்லாம் இவங்களுக்கு கருத்து சுதந்திரம் அதிகமா இருக்கு... நாம கேட்க பயந்த கேள்வியெல்லாம் இவங்க சகஜமா தைரியமா கேக்கறாங்க...

"இந்த தலைமுறை, அவங்க பெற்றோரோட ஒரு ஆரோக்கியமான அன்யோன்யமான நட்பு வளையத்துக்குள்ளே இருக்கறதையும் அந்தப் புரிதலையும் நினைச்சா ரொம்ப சந்தோஷமா இருக்கு!" உணர்ச்சிகள் நிறைந்திருந்தது அவள் குரலில்!

"ஆமாம்! இது தான் சரி! நாம வளர்ந்த விதமே வேற! பெரியவங்க பேசற இடத்துல சின்னவங்க இருக்கக் கூடாது... பெரியவங்களை எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது... இதைப் பண்ணினா தப்பு... அதைப் பண்ணினா குத்தம்னு நம்மை அதட்டி அடக்கிட்டே இருந்ததாலே தான், நிறைய நேரங்கள்லே நாம கோழையா தவறான முடிவெடுத்திருக்கோமோன்னு கூட நினைக்கத் தோணுது!"

ஒரு பெருமூச்சுடன் அவர் முடிக்க, மெதுவாகத் தலையசைத்தாள் அவள்.

"ஆனா ஒரு விதத்தில நாமெல்லாம் ரொம்பக் குடுத்து வச்சவங்க பிரதா! இப்ப இருக்கற குழந்தைகளுக்கு இல்லாத விஷயம், அப்ப நமக்கு வரமாக் கிடைச்சது!

"லீவு விட்ட உடனே பாட்டி வீட்டுக்கு கிராமத்துக்குப் போயிடுவோம்... உறவுப் பிள்ளைங்க எல்லாம் ஒண்ணாக் கூடி பாண்டி, கண்ணாமூச்சி, கொக்கோ, கூட்டாஞ்சோறுன்னு வீடே கோலாகலமா இருக்கும்!

"பாசாங்கில்லாத அற்புதமான ஒரு பிணைப்பு இருந்தது அப்போ! இப்போ கம்ப்யூட்டர் கேம்ஸ், சம்மர் கோச்சிங் கேம்ப்புன்னு அதெல்லாம் தொலைஞ்சு போச்சு!

"நம்ம மாதிரி, இப்ப இருக்கற குழந்தைகளாலே, உறவுகளோட ஒத்துப் போக முடியலை! ஒரு குழந்தையா வளர்றதாலே, யாரோடவும் ஒத்துப் போகாத ஒரு ஆளுமை உணர்வும் வந்திருது!

"ஆமாம் மேடம்! சம்மர் வெக்கேஷன்லயாவது பிறந்து வளர்ந்த ஊரை... நம்ம உறவு மனுஷங்களை எல்லாம் அவங்களுக்கு அறிமுகப்படுத்தி நம்ம மண், கலாச்சாரம், உறவுகள் இதோட அருமையெல்லாம் அவங்களுக்குப் புரிய வைக்கணும்" ஆதங்கத்துடன் முடித்தாள் பிரதா.

"சரி நாளைக்கு பாலா மேடத்தோட கேஸ்... அதுக்கெல்லாம் பிரிபேர் பண்ணிட்டியா? அந்தப் பெரியவர் தன் வாயால சொன்னதை எழுதியாவது குடுத்திருக்கலாம்!

இப்போ வில் முடிஞ்சு அவரோட பையன் இனிமேல் பண்ணவிருக்க முடியாது!

"நாம ட்ரை பண்ணிப் பார்ப்போம்... கேஸ் இழுக்கிற வரைக்கும் லாபம் தான்... பாலாவுக்கு உடனடியாக வேற இடம் தேட வேண்டிய அவசியமில்லை!"

"ஆமாம் மேடம்! லீகல் பாயிண்ட்ஸ் எல்லாம் ரெடி! எனக்கும் கஷ்டமாதான் இருக்கு! எவ்வளவு நல்ல காரியத்துல ஈடுபட்டிருக்காங்க பாலா மேடம்! அதுக்கு உதவலைன்னாலும் பரவாயில்லை... உபத்திரமாவது செய்யாம இருக்கலாம்!" பெரும் ஆதங்கமும் சினமும் தெரிந்தன அவள் குரலில்.

அந்த பல் டாக்டர் போலின்னு நினைக்கிறேன்.

ஏன் சார்?

வாயில இருக்கற கெட்ட வாடையை எப்படி விரட்டலாம்னு கேட்டா நாக்குல ஊதுபத்தியைக் கொளுத்தி வச்சுப் பழகுங்கன்னுங்கிறாரு.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

"எனக்கு ஒரு யோசனை தோணுது! கேஸ் கோர்ட்டுக்கு வருவதுக்கு முன்னாடியே நாம எதிர்பார்ட்டி கிட்ட போய் பேசிப் பார்த்து காம்ப்ரமைஸ் பண்ணினா என்ன?" யோசனையுடன் கேட்டாள் வசந்தரா.

"மேடம்! நான் வேணா அவர் கிட்டப் போய்ப் பேசவா? இந்தக் கேஸை மட்டும் ஏனோ கமர்ஷியல் விஷுவில் பார்க்க முடியலை? காம்ப்ரமைஸ் ஆகிட்டா ஒரு நல்ல காரியத்துக்கு உதவின திருப்தி இருக்கு வேண்டு தோணுது!"

"ம்... வேணா டிரை பண்ணிப் பாரு! பாலா மேடம் பேசாமலா இருந்திருப்பாங்க! பார்ப்போம்" யோசனையுடன் முடித்தார் வசந்தரா.

பாலா ஒரு சமூக சேவி! ஊனமுற்றவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற தாகமும், தேடலும் அவரை ஒரு தன்னார்வ அமைப்பின் நிறுவனராக்கியது.

மனிதாபிமானம் மிகுந்த பல மனிதர்களின் உதவியால் இவர் இந்த பவுண்டேஷனை நடத்தி வருகிறார்.

இந்த அமைப்பை நடத்துவதற்கான இடத்தைத் தேடிய போது, ஒரு பெரிய தொழிலதிபர் தன்னுடைய இடத்தையே லீஸுக்கு வழங்கினார். பத்து வருடங்கள் முடியும் நேரத்தில், லீஸை புதுப்பிக்க நினைக்கும் போது அந்த இடத்தை அந்த அமைப்பிற்கே வழங்கி விடுவதாக சில மாதங்கள் முன்புதான் உறுதியளித்திருந்தார்.

அதற்கான செயல்பாடுகளை முடிக்கும் முன்பே அவர் மாரடைப்பில் இறந்து விட, அவருடைய மகன் இப்போது அந்த இடத்தைக் காலி செய்து தரும்படி கேஸ் போட்டிருக்கிறார்.

பாலா, வசந்தராவின் நெருங்கிய தோழி என்பதால், அவருக்காக இந்தக் கேஸை எடுத்து வாதாடப் போகிறார் அவர்.

10

இருவரும் பேசியபடி, அன்று மதியமே அந்த தொழிலதிபரின் மகன் தினேஷை சந்திக்கச் சென்றாள் பிரதா.

அண்ணா சாலையிலிருந்த அந்த பெரிய அலுவலகத்திற்குச் சென்ற போது, அவனிடம் எப்படிப் பேசப்போகிறோம், எப்படி புரிய வைக்கப் போகிறோம் என்ற லேசான குளிர் உள்ளே பரவியது.

தலையைக் குலுக்கி அதை விடுவித்தவள், வேகமாக உள்ளே சென்றாள்.

காலையிலேயே அப்பாயின்ட்மென்ட் வாங்கி இருந்ததால், அவளை யாரும் தடுக்கவில்லை.

உள்ளே சென்று அந்த தினேஷைப் பார்த்த போது, அவளுடைய நம்பிக்கை சிறிது தொய்ந்து போக, மிகவும் கடுமையானவனாக இருந்தான் அவன்.

அவள் அமர்ந்தவுடனே, "உங்களுக்கு ரெண்டு நிமிஷம் தான் டைம்! அதற்குள்ளே வந்த விஷயத்தை பேசிட்டுப் போயிடணும்" என்றான் வாட்சைப் பார்த்தபடி!

"சார்!" அவள் ஆரம்பிக்கும் முன்பே அறைக்கதவு மெலிதாகத் தட்டப்பட்டு திறக்க, "ஹாய் தினேஷ்..." என்றபடி சித்தி உள்ளே வந்தாள்.

அங்கே அவளைக் கண்டதும், வியப்புடன் ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கியவள், இலகுவாக அவனருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"ஒரு நிமிஷம்" என்று அவளிடம் கூறிவிட்டு திரும்பிய தினேஷ், "என்னடா சித்தி.. திடீர்னு? உன்னோட சாப்ட்வேர் ப்ராஜெக்ட்டை விட்டுட்டு இங்கே தரிசனம் கொடுக்கறே?" இலகுவாக விசாரித்தான்.

"சும்மாதான்டா! நம்ம ஓல்ட் ஸ்டூடண்ட்ஸ் அசோஷியேஷன் விஷயமாப் பேசலாம்னு வந்தேன்.. நீ அவங்களை கவனிச்சு அனுப்பு... நாம அப்புறமாப் பேசலாம்..."

"சரிடா!" என்றபடி அவன் திரும்ப, தர்ம சங்கடத்துடன் ஆரம்பித்தாள் அவள்.

"சார்! உங்கப்பா, பாலா மேடத்துக்கு லீசுக்குக் கொடுத்திருந்த இடத்தைப் பத்திப் பேச வந்திருக்கேன்.."

அவள் முடிப்பதற்குள், எழுந்து கோபமாக இரைந்தான் அவன்.

"ப்ளீஸ்... அதைப் பத்தி எதுவானாலும் என் லாயர்கிட்டப் பேசுங்க.. என் டைமை வேஸ்ட் பண்ணாதீங்க!"

அதற்குள், சித்தி அவனை இடைமறித்தாள்.

"ஏய் தினேஷ்... கோபப்படாதே! இவங்க எனக்கு தெரிஞ்சவங்க தான்... என்ன சொல்ல வராங்கன்னுதான் கேட்போமே.. நீங்க சொல்லுங்க பிரதா..!" மெல்ல ஊக்கினாள் அவள்.

அவள் விபரத்தைக் கூறியவுடன், "ஏன்டா! அங்கிள் விரும்பிக் கொடுத்ததை நாம ஏன் திரும்பக் கேட்கணும்..? அது அவரோட கடைசி ஆசையாக கூட இருக்கலாமே... அதை ஏன் நீ நினைச்சுப் பார்க்கலை? திடீர்னு ஏன் இப்படி ஒரு முடிவெடுத்தே?" இறங்கிய குரலில் வினவினாள்.

"அதில்லை சித்தி... அப்பா இறந்தப்புறம் எல்லா விஷயத்தையும் நம்ம கம்பெனி லாயரை டீல் பண்ண சொல்லி பவர் கொடுத்திருக்கேன்.. அவர்தான் லீஸை ரெனிவல் பண்ண வேண்டாம்... அந்த இடம் நமக்கு ரொம்ப யூஸ்புல்லா இருக்கும்னு சொன்னாரு! அதான் நோட்டீஸ் அனுப்பினோம்!" தனக்குள் மூழ்கிய யோசனையுடன் கூறினான் அவன்.

"ம்... இதிலே எங்க அப்பாவோட ஷேரும் இருக்கா?" மெதுவாக வினவினாள் சித்தி.

"இருக்கு.. அங்கிளும், அப்பாவும் சேர்ந்து கம்பெனிக்காக வாங்கிய பொது இடம் தான் அது! லீஸ் அமவுண்டும், கம்பெனி அக்கவுண்டுலதான் பொதுவா வருது! பத்து வருஷத்துக்கு முன்னாடி கொடுத்தாச்சே! அங்கிள் ஸ்லீப்பிங் பார்ட்னர்ங்கிறதாலே எதிலேயும் தலையிட்டதில்லை!

"சரி.. இவங்க சொல்றது உண்மைதான்னு தெரிஞ்சா, அந்த இடத்தை

விட்டுக் கொடுக்க உனக்கு சம்மதமா? இல்லை... பழைய படி சிகரெட்டையும் பாக்கியிலையா?''

சித்தி கேட்டவுடன், அவர் மனதாக அவன் தலையசைத்தான்.

"அப்போ.. நாளை இவங்களோட போய் அந்த இடத்தையும் அதிலே நடந்துக்கிட்டிருக்கிற அந்த பவுண்டேஷனையும் உன் சார்பிலேயே பார்த்துட்டு வரேன்!

"அப்புறம் ஒரு நாள் நீயும் வந்து பாரு.. உனக்கு திருப்தி.. சம்மதம்னா மட்டும் கேஸை வாபஸ் வாங்கிட்டு காம்ப்ரமைஸ் பண்ணிக்கலாம்! அப்படியோ.. ஷேர்லே இதையும் சேர்த்துக்க.. எப்படியும் இன்விட்டல்லேயே பாதி போயிடும்! யோசிச்சிப்பாரு தினேஷ்!''

அவனுக்காக, பொறுமையுடன் தன் நண்பனிடம் வாதாடினாள் அவள்.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவன், "சரி! இந்த நிமிஷம் மட்டும் வாபஸ்னா, இதுக்கப்புறம் வேற மாதிரி இருந்திருக்கும்.. எப்படியும் கேஸ்லே நாமதான் ஜெயிச்சிருப்போம்!

"சரி.. நீயும் இந்த கம்பெனியில ஒரு ஷேர் ஹோல்டர்ங்கிறதாலே தான் சரிங்கிறேன்.. என் குளோஸ் பிரெண்டுங்கறதாலேதான் ஒத்துக்கிட்டேன்..! ஓகேயா? முதல்ல நீ போய்ப் பார்த்துட்டு வந்து சொல்லு.. அப்புறமா முடிவெடுக்கலாம்'' என்றான் தினேஷ் முடிவாக!

உடனே நெஞ்சம் நன்றியில் நிறைய, "தேங்க்யூ சார்!'' உணர்ச்சிப் பெருக்குடன் அவனுக்கு நன்றி கூறினாள் பிரதா!

"வெல்கம்! அதை எனக்கு சொல்லாதீங்க.. அப்படி ஒரு வேளை இந்தக் கேஸை நான் வாபஸ் வாங்க நினைச்சா, அதுக்கு காரணம் சித்தியாதான் இருப்பாள்... அவளுக்கு சொல்லுங்க!''

உடனே சித்தியிடம் திரும்பி, நன்றி கூறிவிட்டு எழுந்தாள் அவள். அந்த நிமிடம் அவளுடைய முகத்தில் தெரிந்த சந்தோஷமும், விழிகளில் ஒளிர்ந்த மின்னலும், அவனை உறைய செய்வதாய் இருந்தது!

தன் இதயத்தில் வசிக்கும் மற்றொரு உயிராய்.. அவள் குடிபுகுந்திருப்பதும் தெரியவந்தது!

அவனுடைய இமைகள் விசிறியாய்ப் படபடக்க, சட்டென்று அவனுக்குள் வியர்த்தது.

11

பிறகு அவள் விடைபெற்றுச் செல்ல, தொலைவில் மலைச் சரிவைத் தொட்டு கண்ணாமூச்சி விளையாடும் பனிச்சாரல், அருகினில் செல்லும் போது விலகி ஓடுவது போல் தோன்றியது அவனுக்கு!

"என்னடா சிரிக்கறே.. ஒரு நல்ல விஷயத்துக்காப் பேசினா உனக்கு கிண்டலா இருக்கா?"

"ஓஹோ! நீங்க நல்ல விஷயத்துக்காகப் பேசினீங்களா? சரி.. சரி! நான் நம்பறேன் அப்புறம்.. அந்தப் பொண்ணு பேரென்ன? பிரதாவா?

அந்தப் பிரதாகிட்டே.. நீங்க தலை குப்புற விழுந்த கதையை நாங்க இப்பதான் பார்த்தோம்...'' இழுத்தபடி கேலியுடன் சிரித்தான்.

"ஏய்.. என்ன... ரொம்பதான் தெரிஞ்ச மாதிரி பேசறே?"

"ம்.. இந்த விஷயத்துக்கெல்லாம் டிடெக்டிவ் வெச்சா தெரிஞ்சுக்க முடியும்? முகத்தைப் பார்த்து.. அந்த வழிசல்.. கண்ணோட தேடல்... தவிப்பு இதெல்லாம் வச்சு ஒரு முடிவுக்கு வரவேண்டியது தான்!"

"போக்கடா.. உனக்கு தெரிஞ்சிடுச்சா? வேற வினையே வேண்டாம்!"

சித்தி சோம்பலாக சலித்துக் கொண்டான்.

"சித்தி! ரொம்ப சந்தோஷமா இருக்குடா! எங்கே நீ இப்படியே இருந்திடுவியோன்னு நான் பயந்துட்டே இருந்தேன்.. பூங்குழலி இறந்தப்புறம், நீ உன்னைப் பத்தி நினைக்கறதேயில்லை.. இப்ப இந்தப் பெண்ணால உனக்குள்ளே ஒரு மாற்றம் வந்திருக்குன்னு நினைச்சா.. ஜஸ்ட் சோ ஹேப்பி! ஆல் தி பெஸ்ட்!''

தினேஷ் உடனே எழுந்து வந்து வாஞ்சையுடன் அணைத்து கை குலுக்கி வாழ்த்தினான்.

"தேங்க்யூடா! இதுவரைக்கும் இந்த விஷயம் வேற யாருக்குமே தெரியாது... அவ்வளவு ஏன்... பிரதாவுக்கே தெரியாது!'' மெதுவாகக் கூறினான் அவன்.

"இந்தக் கேஸையே சாக்கா வைச்சு அவளை அடிக்கடி மீட் பண்ணு! அதைப் பத்தின எல்லா விஷயத்தையுமே, நான் உன்கிட்டயே பேசிடச் சொல்றேன்.. அப்பவாவது உன் காதல் டெவலப் ஆகுதான்னு பார்க்கலாம்!''

"சே! அப்படி எல்லாம் மெட்சூரிட்டியில்லாம என்னால யோசிக்க முடியாது தினேஷ்! இது வேற.. அது வேற! அந்த கேஸ் விஷயத்துல, உன்னோட அனுமதியோட மனித நேயத்தோட அவளுக்கு நான் உதவப் போறேன்.. அவ்வளவு தான்!''

"ஓ.கே.! நீ வந்த விஷயத்தைப் பத்தியே ரெண்டு பேரும் மறந்துட்டோம்.'' என்றபடி அவன் தன் இருக்கையில் சென்று அமர, இருவரும் பேச்சைத் தொடர்ந்தனர்.

அன்று மாலையே, அவனைத் தேடி வீட்டிற்கு வந்தாள் பிரதா.

சித்தி, மதியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

ஒருவரது வாழ்க்கையை முடிக்க எமன் எப்போ வருவான்னு யாராலேயும் சொல்ல முடியாது.

அப்போ அவனும் எங்க தொகுதி எம்.எல்.ஏ. மாதிரி தான்னு சொல்றாங்க.

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்.

அவளைக் கண்டதும் உற்சாகத்துடன் எழுந்து அவன் வரவேற்க, சிறு முறுவலுடன் சோபாவில் அமர்ந்தாள் அவள்.

உடனே ஓடி வந்து மடியில் தாவிய மதியை அணைத்துக் கொண்ட போது, அவனிடம் எப்படி நன்றி சொல்வதென்று புரியாத ஒரு உணர்வில் தவித்துப் போனாள்.

பூமியை நோக்கிக்காத ஒரு மெல்லிய பூவின் நிழலாய் அவள் அமர்ந்திருக்க, அதை வெகுவாய் ரசித்தபடி அமர்ந்திருந்தான் சிற்பி.

பிறகு மெதுவாக நிமிர்ந்தாள், "உங்க பிரண்ட் கிட்ட எனக்காக இந்த விஷயத்துல சப்போர்ட் பண்ணி பேசினதுக்கு ரொம்ப தேங்க்ஸ்!" நெஞ்சார்ந்த நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

"வெல்கம்! இதுக்கு எல்லாம் எதுக்கு தேங்க்ஸ்..? இந்த வேலை எடுத்து நடத்திருந்தா உங்களுக்கு லாபம்தான்! அதையே பார்க்காம, நீங்க காம்ப்ரமைஸுக்கு வந்திருக்கீங்கன்னப்போ, நான் பேசினது சாதாரணம்!" அவன் முடிக்கும் முன்பே அங்கு வந்து விட்டார் சாரதா.

"வா பிரதா! சிற்பி எல்லாம் சொன்னான்.. நானும் தினேஷ் கிட்டப் பேசினேன். அவனும் இறங்கி வந்திருக்கான்... இந்த ஞாயிற்றுக்கிழமையே நாம அங்கே போகலாம்!" ஆர்வத்துடன் கூறினார்.

"சரிம்மா நான் பாபா மேடத்துக்கிட்டே பேசிடறேன்.. நாளைக்கு கேவியே வாய்தா வாங்கிடலாம்னு மேடம் சொன்னாங்க.. நீங்களும் சாரும் வந்து பாருங்க... உங்களுக்கு அவங்க அமைப்பும் செயல்பாடுகளும் ஜெனியூனாப் பட்டுதுன்னா, தினேஷ் சார் கிட்டே சொல்லி ஹெல்ப் பண்ண சொல்லுங்க!"

"இவ்வளவு சின்ன வயசிலே உனக்குதான் எவ்வளவு மனித நேயத்தையும் சமூக அக்கறையையும் கடவுள் குடுத்திருக்காருன்னு நானும் சிற்பியும் ஆச்சரியமா பேசிட்டிருந்தோம் பெருமையுடன் சிலாகித்தார்.

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லைம்மா! நமக்கு கிடைக்கிற பிரீ டைம்லே ஏதாவது உபயோகமா செய்யணும்னு தோணுச்சு அதான்! அங்கே வந்து பாருங்க.. எவ்வளவு பேர் சுயநலமில்லாம சேவை செய்றாங்கன்னு! அப்ப நான் கிளம்பறேம்மா...! மதியை நான் அழைச்சிட்டுப் போகலாமா?" ஆவலுடன் கேட்டாள்.

உடனே, அவர் ஒப்புதலாகத் தலையசைக்க, அவள் விடைபெற்றுக் கிளம்பியபோது, அவனுடைய உலகம் தான் சட்டென்று இருண்டு போனது.

மெல்லத் தேய்ந்த அந்தக் கொலுசின் ஓசை.. அவனுடைய ஆழ் மன வெளியின் சங்கீதமாய் உள்ளே பரவியது.

12

அந்த வாரம் முழுவதும் ஒரு வித எதிர்பார்ப்புடன் கழிய, ஏனோ சிற்பியால் அவளைப் பார்க்கவே முடியவில்லை.

வேலை முடிந்து அவன் தாமதமாக வர, அதற்குள் பிரதா மதியை விட்டு விட்டு சென்றிருப்பாள்.

அந்த மூன்று நாட்களும் அவளைப் பார்க்க முடியாமல் பெரிதும் தவித்துப் போனான் அவன்.

முதன் முதலாக ஒரு பெண்ணுக்காக ஏங்கித் தவிப்பது புதிதாய்.. சிறு வெட்கம் கூட வரச் செய்வதாய்!

மூடிய இமைகளுக்குள்ளும், அவள் முகமே தெரிவதாய்!

"என்னேம்மா உங்க பிரண்ட்? மூணு நாளா ஆளையே காணோம்" காபியைப் பருகியபடி தாயிடம் கேட்டான் அவன்.

"அவ தினம் வந்திட்டுதான் இருக்கா நீதான் லேட்டா வர்றே... இப்ப வர நேரம் தான்.. மதி அங்கே போயிருக்காளே!

"நாளைக்கு காலையில நம்ம ரெண்டு பேரையும் அந்த பவுண்டேஷனுக்கு அழைச்சிட்டுப் போறேன்னு பிரதா சொல்லிட்டிருந்தா.."

அதற்குள் "பாத்திமா..." மதியின் அழைப்புடன், கொஞ்சும் சலங்கையாய் அவள் வரவும் கேட்டன.

சலனமற்றிருந்த அவனுடைய இதயத்திற்குள்... சந்தோஷ சலங்கை ஒலி!

"வாம்மா" என்று அவர் வரவேற்றதும் அமர்ந்தவள், அவனிடம் திரும்பினாள்.

"நாளைக்கு காலையிலே பத்து மணிக்கு ரெடியா இருங்க சார்.. எங்க காரிலேயே போயிடலாம்" சிறு முறுவலுடன் கூறினாள்.

"மிஸ் பிரதா! சன்டே அன்னிக்கு எதுக்கு டிரைவரை தொந்தரவு செய்யணும்? வேண்டாம்... நம்ம காரிலேயே போயிடலாமே! ஆழ்ந்த குரலில் முடித்தான்.

அவன் பார்வை ஒரு வித எதிர்பார்ப்புடன் அவளிடம் படிய, சட்டென்று விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் அவள்.

பவுர்ணமி நிலவை சட்டென்று மேகம் மூடிய உணர்வு அவனுக்கு!

"இரும்மா! நான் காபி எடுத்துட்டு வரேன்.. குடிச்சிட்டுப் போகலாம்" என்றபடி எழுந்து உள்ளே சென்றார் சாரதா.

கூடவே எழுந்தவளை "ஒரு நிமிஷம்!" என்று நிறுத்தியது சிற்பியின் குரல்.

"ஏன் பிரதா? என் கூடத் தனியா இருக்க அவ்வளவு பயமா? நான் என்ன... பேயா பிசாசா? ஏன் இப்படி என்னைக் கண்டாலே ஓடறீங்க! இல்லை... உங்களை அப்படியே கடிச்சி விழுங்கிடுவேன்னு பயமா?.. ம்...?" உணர்ந்த குரலில் கேட்டான்.

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லே சார்!" என்றபடி தர்ம சங்கடத்துடன் அமர்ந்து மதியுடன் விளையாட ஆரம்பித்தாள் அவள்.

பிறகு வந்த கணங்கள் அவனுக்குள் யுகங்களாயின.

அவளையே குறும்புடன் ஊடுருவிக் கொண்டிருந்த சிற்பிக்கோ, நேரம் றெக்கை கட்டி பறக்க, மனதிற்குள் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்தன.

மறுநாள் காலையிலேயே சூலவரும் கிளம்பி, பாலா நடத்துகின்ற அந்த பவுண்டேஷனுக்கு சென்றனர்.

அங்கு சென்ற பிறகு தான் தெரிந்தது.... ஊனமுற்றவர்களுக்கான அந்த அமைப்பின் செயல்பாடுகளும்.. எதிர்பார்ப்பில்லாத அர்ப்பணிப்பும்!

பாலாவும் மற்றவர்களும், அவர்களை அன்புடன் வரவேற்று, அந்த இடத்தை சுற்றிக் காண்பித்தனர்.

அங்கு, எல்லோருக்கும் பிரியமுள்ளவனாக இருந்தான் பிரதா!

அவனைக் கண்டதும், உற்சாகமாக ஆர்ப்பரித்து முகம் மலர்ந்து சைகை முறையில் வரவேற்றவர்களைக் கண்டபோது தான், அவர்களுடைய குறையே தெரியதாய்! அதிக மலர்ச்சியுடன் முகம் மலர்ந்து நிற்கும் பூக்களாய் அனைவரும்! பாலா, ஒவ்வொரு இடமாக அவர்களை அழைத்துச் சென்றார்.

ஒரு கட்டடத்தில் நுழைந்ததும், ''இது தான் நாங்க ஊனமுற்றவர்களுக்காக நடத்திட்டிருக்கற பத்திரிகை ஆபீஸ்! கண் பார்வை இல்லாதவங்களும் கேட்கற மாதிரி ஆடியோ மேகசினும் வருது'' என்றார் முறுவலுடன்!

பிரமிப்புடன் சுற்றிப் பார்த்த போது, அடுத்த கட்டடத்தில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன.

''இங்கே உடல் ஊனமுற்ற பட்டதாரிகளுக்கு 'பர்சனாலிட்டி டெவலப்மெண்ட்' பயிற்சி குடுக்கறோம்! ஊனமுற்றவர்களுக்காக ஜாப்மேளா நடத்தறோம்.. வருஷா, வருஷம் சாதனை படைச்சவங்களைத் தேர்ந்தெடுத்து அவார்டு குடுக்கறோம்!''

அவர் முடித்ததும் சுற்றிப் பார்த்த போது, அந்த காது கேட்காத, வாய் பேச முடியாத, பார்வை இழந்தவர்களைப் பார்த்த பெரும் தவிப்பாய்!

தங்கள் ஊனத்தையே மறந்து, தடைக்கற்களை படிக்கட்டுகளாக்கி, படித்து முன்னேறி தனியே வேலைக்கு செல்லுமளவு தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் வளர்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்தால், பிரமிப்பாக இருந்தது.

ஒருவர் பின் ஒருவராக தோள்களைப் பிடித்தபடி வகுப்பு முடிந்து சென்று கொண்டிருந்த பார்வையற்றவர்களைக் கண்ட போது, நாம்தான் எவ்வளவு கொடுத்து வைத்தவர்களென்று தோன்றியது, சிற்பிக்கு!

பிரதா, மதியை அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி விளையாட வைத்துக் கொண்டிருந்தான்.

பாலா சிற்பியிடம் திரும்பினார்.

''இந்த பவுண்டேஷனுக்கு மனிதாபிமானம் மிக்க நிறைய பெரிய மனுஷங்க பல துறையிலேருந்து எங்களுக்கு உதவியிருக்காங்க.. நீங்களும் இதைப் பாத்து புரிஞ்சுக்கிட்டு, ஒரு நல்ல முடிவா சொல்லி இவங்களுக்கு உதவினீங்கன்னா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்''

கையெடுத்துக் கும்பிட்டபடி அவர் கூற, அது ஊனமுற்றவர்களின் மொத்தக் குரலாய்.. எங்களை வாழ விடுங்கள் என்ற நம்பிக்கைப் போராட்டமாய்.. சமூகத்தில் எங்களையும் புரிந்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற மவுன யாசிப்பாய்!

சட்டென்று சாரதாவின் விழிகள் நிறைந்தன.. வேகமாக முன்னால் வந்து பாலாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டார் அவர்.

''எனக்குப் புரியுதும்மா! தனி ஒரு மனுஷியா இந்த அமைப்பை ஆரம்பிச்சி, இந்த மாதிரி பல நல்ல மனங்களோட உதவியால நீங்க சாதிச்சிருக்கற இந்த நல்ல விஷயம் நிச்சயமா சிதறிப் போக நாங்க விட மாட்டோம்! நானும், சிற்பியும் இனேஷிட்ட இது பத்திப் பேசறோம்.. சீக்கிரமே ஒரு நல்ல முடிவா சொல்றோம்''

அவருடைய வார்த்தைகள், பெரும் ஊக்குவிப்பையும் உற்சாகத்தையும் தருவதாய் இருந்தது!

13

சிற்பியையும், சாரதாவையும் அங்கிருந்தவர்களுக்கு பிரதா அறிமுகப்படுத்த, சைகை பாஷையில் கைகளை உயர்த்தி விரித்து அனைவரும் வரவேற்றனர்.

உடனே ''மொழி'' என்ற திரைப்படம் தான் நினைவிற்கு வந்தது சிற்பிக்கு!

பின், பிரதாவின் உதட்டசைவிலேயே அவர்களைப் புரிந்து கொண்டு புன்னகைத்து நன்றி கூறினார்கள்.

அவர்களிடம், பிரதா சைகை மொழியில் வேகமாகப் பேசுவதைக் கண்ட சிற்பிக்கோ, பெரும் ஆச்சரியம்!

''உனக்கு.. சாரி, உங்களுக்கு இந்த சைகை மொழி தெரியுமா?'' ஆவலுடன் கேட்டான்.

''பிரதாவுக்கு இந்த 'சைன் லாங்வேஜ்' நல்லாத் தெரியும்! அவங்க இங்கே அப்பப்ப ப்ரீ டைம்ல வந்து இண்டர்ப்ரெட்டரா வொர்க் பண்ணுவாங்க..

''வருஷத்துல ஒரு வாரம், இந்த 'சைகை மொழி' கத்துக் குடுக்கற வகுப்புகளை ப்ரீயா நடத்துவோம்! அப்போ பிரதாவும் ஒர்க் பண்ணுவாங்க!'' பாலா பெருமையுடன் கூறினார்.

சட்டென்று, அவன் விழிகளில் பெரும் வியப்பும் பெருமிதமும் கசிந்தன.

''இந்தப் படத்துல நீதான் செகண்ட் ஹீரோன்னு சொன்னே... ஆனா உன்னை அதுல காணோமே?''

கண்ணுக் கெட்டாத தூரத்தில ஒரு செகண்ட் நடந்து போறமாதிரி காட்டினாங்களே பாக்கலியா.

—ச.ஆ.கேசவன்,
இளாம் மணியாச்சி.

மறுநாள் காலையிலேயே எல்லோரும் கிளம்பி, பாலாவுடன் அந்த பவுண்டேஷனுக்கு சென்றனர்.

அங்கு சென்ற பிறகு தான் தெரிந்தது.... ஊனமுற்றவர்களுக்கான அந்த அமைப்பின் செயல்பாடுகளும்.. எதிர்பார்ப்பில்லாத அர்ப்பணிப்பும்!

பாலாவும் மற்றவர்களும், அவர்களை அன்புடன் வரவேற்று, அந்த இடத்தை சுற்றிக் காண்பித்தனர்.

அங்கு எல்லோருக்கும் பிரியமுள்ளவளாக இருந்தாள் பிரதா!

அவளைக் கண்டதும், உற்சாகமாக ஆர்ப்பரித்து முகம் மலர்ந்து சைகை முறையில் வரவேற்றவர்களைக் கண்டபோது தான், அவர்களுடைய குறையே தெரிவதாய்! அதிக மலர்ச்சியுடன் முகம் மலர்ந்து நிற்கும் பூக்களாய் அனைவரும்! பாலா, ஒவ்வொரு இடமாக அவர்களை அழைத்துச் சென்றார்.

ஒரு கட்டடத்தில் நுழைந்ததும், "இது தான் நாங்க ஊனமுற்றவங்களுக்காக நடத்திட்டிருக்கற பத்திரிகை ஆபீஸ்! கண் பார்வை இல்லாதவங்களும் கேட்கற மாதிரி ஆடியோ மேகஸினும் வருது" என்றார் முறுவலுடன்!

பிரமிப்புடன் சுற்றிப் பார்த்த போது, அடுத்த கட்டடத்தில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன.

"இங்கே உடல் ஊனமுற்ற பட்டதாரிகளுக்கு 'பர்சனாலிட்டி டெவலப்மெண்ட்' பயிற்சி குடுக்கறோம்! ஊனமுற்றவர்களுக்காக ஜாப்பேர் நடத்துறோம்.. வருஷா, வருஷம் சாதனை படைச்சவங்களைத் தேர்ந்தெடுத்து அவார்டு குடுக்கறோம்!"

அவர் முடித்ததும் சுற்றிப் பார்த்த போது, அந்த காதுகேட்காத, வாய் பேச முடியாத, பார்வை இழந்தவர்களைப் பார்த்த பெரும் தவிப்பாய்!

தங்கள் ஊனத்தையே மறந்து, தடைக்கற்களை படிக்கட்டுகளாக்கி, படித்து முன்னேறி தனியே வேலைக்கு செல்லுமளவு தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் வளர்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்தால், பிரமிப்பாக இருந்தது.

ஒருவர் பின் ஒருவராக தோள்களைப் பிடித்தபடி வகுப்பு முடிந்து சென்று கொண்டிருந்த பார்வையற்றவர்களைக் கண்ட போது, நாம்தான் எவ்வளவு கொடுத்து வைத்தவர்களென்று தோன்றியது, சிற்பிக்கு!

பிரதா, மதியை அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி விளையாட வைத்துக் கொண்டிருந்தாள்.

பாலா சிற்பியிடம் திரும்பினார்.

"இந்த பவுண்டேஷனுக்கு மனிதாபிமானம் மிக்க நிறைய பெரிய மனுஷங்க பல துறையிலேருந்து எங்களுக்கு உதவியிருக்காங்க.. நீங்களும் இதைப் பாத்து புரிஞ்சுக்கிட்டு, ஒரு நல்ல முடிவா சொல்லி இவங்களுக்கு உதவினீங்கன்னா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்"

கையெடுத்துக் கும்பிட்டபடி அவர் கூற, அது ஊனமுற்றவர்களின் மொத்தக் குரலாய்.. எங்களை வாழ விடுங்கள் என்ற நம்பிக்கைப் போராட்டமாய்.. சமூகத்தில் எங்களையும் புரிந்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற மவுன யாசிப்பாய்!

சட்டென்று சாரதாவின் விழிகள் நிறைந்தன.. வேகமாக முன்னால் வந்து பாலாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டார் அவர்.

"எனக்கும் புரியுதும்மா தனி ஒரு மனுஷியா இந்த அமைப்பை ஆரம்பிச்சி, இந்த மாதிரி பல நல்ல மனங்களோட உதவியால நீங்க சாதிச்சிருக்கற இந்த நல்ல விஷயம் நிச்சயமா தேறிப் போக நாங்க விட மாட்டோம்! நானும், சிற்பியும் டிஸ்கஸ் பண்ணிட்டு இது பத்திப் பேசறோம்.. சீக்கிரமே ஒரு நல்ல முடிவா சொல்றோம்"

அவருடைய வார்த்தைகள், பெரும் ஊக்குவிப்பையும் உற்சாகத்தையும் தருவதாய் இருந்தது!

13

சிற்பியையும், சாரதாவையும் அங்கிருந்தவர்களுக்கு பிரதா அறிமுகப்படுத்த, சைகை பாஷையில் கைகளை உயர்த்தி விரித்து அனைவரும் வரவேற்றனர்.

உடனே "மொழி" என்ற திரைப்படம் தான் நினைவிற்கு வந்தது சிற்பிக்கு!

சிலர், பிரதாவின் உதட்டசைவிலேயே அவர்களைப் புரிந்து கொண்டு புன்னகைத்து நன்றி கூறினார்கள்.

அவர்களிடம், பிரதா சைகை மொழியில் வேகமாகப் பேசுவதைக் கண்ட சிற்பிக்கோ, பெரும் ஆச்சரியம்!

"உனக்கு.. சாரி, உங்களுக்கு இந்த சைகை மொழி தெரியுமா?" ஆவலுடன் கேட்டான்.

"பிரதாவுக்கு இந்த 'சைன் லாங்வேஜ்' நல்லாத் தெரியும்! அவங்க இங்கே அப்பப்ப ப்ரீ டைம்ல வந்து இன்டர்ப்ரெட்டரா வொர்க் பண்ணுவாங்க..

"வருஷத்துல ஒரு வாரம், இந்த 'சைகை மொழி' கத்துக் குடுக்கற வகுப்புகளை ப்ரீயா நடத்துவோம்! அப்போ பிரதாவும் ஹெல்ப் பண்ணுவாங்க!" பாலா பெருமையுடன் கூறினார்.

சட்டென்று, அவன் விழிகளில் பெரும் வியப்பும் பெருமிதமும் கசிந்தன.

"இந்தப் படத்துல நீதான் செகண்ட் ஹீரோன்னு சொன்னே... ஆனா உன்னை அதுல காணோமே?"

கண்ணுக் கெட்டாத தூரத்தில ஒரு செகண்ட் நடந்து போறமாதிரி காட்டினாங்களே பாக்கலியா.

-ச.ஆ.கேசவன், இளம் மணியாச்சி.

இவளுக்குள் இத்தனை பரிணாமங்களா என்ற பிரமிப்பும் ஏற்பட்டது.

அந்த உணர்வுகள், அப்படியே வார்த்தைகளாய் வெளிப்பட்டன.

"ஸ்! இட்ஸ் அமேசிங் பிரதா! ஒரு லாயரா.. பிசினஸ் உமனா.. சோஷியல் ஒர்க்கரா.. எத்தனை அவதாரம் எடுத்திருக்கீங்க? இன்னும் வேற ஏதாவது இருக்கா... இல்லை.. அவ்வளவு தானா?" பிரதாவிடம் திரும்பிக் கேட்டான்.

"மிஸ்டர் சித்தி! அவங்க பாதிக்கப்பட்ட பெண்களுக்காக இலவசமா வேலை பார்க்குற ஒரு சாமான்ய பணிப்பெண்... அது உங்களுக்குத் தெரியுமா?" பாலாதான் கேட்டார்.

அவருடைய முகஸ்துதியால் முகம் அந்திவானமாய் சிவக்க, "பிளீஸ்.. போதும் மேடம் என் ப்ராணம்" தர்ம சங்கடத்துடன் முடித்தாள் அவள்!

பொதுவாகவே, முகஸ்துதிக்கு மயங்கி நிற்கும் பெண்களையே அறிந்திருந்தவனுக்கு, அவளுடைய கூச்சமும், தவிப்பும் புதிதாய் தோன்றியது!

"என்னங்க... இவ்வளவு வெக்கப்படறீங்க? கோர்ட்டுலே வீர வசனம் பேசி எதிர் வக்கீலை மடக்குற ஒரு லாயர்.அது வேற பத்தாதுன்னு பெரிய சமூக சேவகி... என்னமோ நாளைக்கு உங்களுக்கு கல்யாணம்னு சொன்னமாதிரி, இவ்வளவு வெட்கப்பட்டு முகம் சிவக்கறீங்க?"

கண்களில் குறும்பு மிதக்க, அவன் கேட்ட அந்தக் கணமே, அவனிடமிருந்த மென்மை தொலைந்து போய், ஒரு வித இறுக்கம் வந்தது.

உடனே பாலாதான் அந்த இறுக்கத்தை கலைத்தார்.

"மிஸ்டர் சித்தி! எங்க பவுண்டேஷனோட செயல்பாடுகளை புரிஞ்சிட்டிருப்பீங்க.. மிஸ்டர் தினேஷ் கிட்ட பேசி எங்களுக்கு இந்த வேலைசெஞ்சுதந்தா ரொம்ப நன்றியுள்ளவங்களா இருப்போம்! பிளீஸ்.. இது எனக்காக இல்லை... இங்கே இருக்கற இந்த அற்புதமான மனுஷிகளுக்காக!" பாலா மெல்லிய குரலில் கூறினார்.

யாரிடமும், எதற்காகவும் கெஞ்சிப் பழக்கமில்லாதவர் அவரென்பது புரிந்தது. சட்டென்று கனிந்த விழிகளுடன், தவிப்பாய், நின்றிருந்த பிரதாவையே ஒரு கணம் இமைக்காமல் நோக்கியவன், அவரிடம் திரும்பினான்.

"மிஸ் பாலா! எதையுமே எதிர்பார்க்காம இவங்களுக்கா மனித நேயத்தோட சேவை செய்யற நீங்க.. தனக்கு கேஸ் வரணும்னு கூட நினைக்காம, இதை சமாதானமா முடிக்க நினைக்கிற வக்கீலா மேடம், பிரதா... தங்களோட ஊனத்தை மறந்து அதை வெற்றிக்கான படிகளா மாத்தின இவங்க...இப்படி உங்க எல்லோரையும் பார்த்தப்புறம்... இதைக் கூட நான் செய்யலைன்னா.. ஹூம்.. அப்புறம் மனிதாபிமானம் இதுக்கே அர்த்தமில்லாமப் போயிடும்! லெட்ஸ் ஹோப் பார் தி பெஸ்ட்" என்றபடிக் கைகுலுக்கி அவரிடம் விடை பெற்றான் அவன்.

பிறகு அங்கிருந்து திரும்பி வரும்போது தான், சாரதா தன் உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

"எனக்கு ரொம்ப பிரமிப்பா இருந்ததும்மா பிரதா! நல்லா இருக்கறவங்களே சோம்பி இருக்கற இந்தக் காலத்துல, கண் தெரியாம, நடக்க முடியாம, காது கேட்காம, வாய் பேச முடியாம இருக்கற இவங்கள்லாம் எவ்வளவு நம்பிக்கையோட படிச்சு, கலையா தொழில் கத்துக்கிட்டு முன்னேறி வராங்கன்றதை நினைச்சா சிலிர்த்துப் போகுதும்மா!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினார்.

"ஆமாம்மா! நல்லா இருக்கற நாம எல்லாம் சின்ன கஷ்டங்களுக்கே உடைஞ்சு போயிடுவோம்! ஆனா இவங்களுக்கெல்லாம் உடல்தோதான் ஊனம் இருக்கே தவிர, மனசுல அது கொஞ்சம் கூடக் கிடையாது! மனசளவில நம்மை விடப் பலசாலிங்க இவங்கல்லாம்! அதான் இவ்வளவு போராட்டசாதிக்க முடியுது!

"சில சமயங்கள்லே, நாம ஒவ்வொருத்தரும், நாமும் நொந்து போய் நம்மை சுத்தி இருக்கற உறவுகளையும் பாலவீனமாக்கிடறோம் ரெதை எனக்கு புரிய வச்சதே இவங்க எல்லாரும் தான்!

"நம்மைச் சுத்தி இருக்கற மனைப் பார்வைகளும், புரளிப் பேச்சுகளும் தான் வாழ்க்கையிலே நம்மை உயர்த்தற ஏணியாகணும்னு நான் உயர்ந்ததே, இவங்களைப் பார்த்தப்புறம்தான்!

"இந்த மாதிரிக் குறை உள்ளவங்களை தூக்கி வச்சி கொண்டாடவும் தேவையில்லை... அதே போல ஐயோ பாவம்னு ஒதுக்கவும் வேண்டாம்! இயல்பா ஏத்துக்கிட்டாலே போதும்கிறதை நான் இங்கே வந்தப்புறம் புரிஞ்சிக்கிட்டேன்!

"இவங்க ஒவ்வொருத்தரும், யாரோட தயவையும் எதிர்பார்க்காம கல்வியையும் பாலா மேடம்! இதுக்கு நாங்க எல்லாரும் சின்னச் சின்ன ஹெல்ப் பண்றோம்.அவ்வளவு தான்! மத்தவங்களுக்கு பயன்படற மாதிரி வாழுறது நல்லது தானே!"

எளிதாக முடித்தவளையே ரியர் வியூ மிரரின் வழியே பார்த்த போது, நெஞ்சிக்குள் பெரும் பிரமிப்புடன் ஆச்சர்யமும் ஏற்பட்டது!

அவளுடைய மனித நேயம், துணிச்சல், தன்னம்பிக்கை, பிறருக்கு உதவுகின்ற குணம் எல்லாமே அவனை ஒரேடியாக சரித்து வீழ்த்தின.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு பிரதா.. அவங்களோட சேர்த்து உங்களையும் இப்படிப் பாக்கறப்ப! ஒவ்வொருத்தருக்கும் எவ்வளவு தெளிவும், தீர்க்கமும் தன்னம்பிக்கையும் இருக்குன்னு நினைச்சா மனசுக்கு நிறைவா இருக்கு" பெரும் வாத்சல்யமும் பெருமையுடன் கசிந்தன சித்தியின் குரலில்!

பல ஆண்டுகளாக மறைந்து உலர்ந்து வெடிப்பு விட்டிருந்த அவனின் இதயம், இன்று மென் உணர்வுகளால் அதிர்ந்தது.

அவளுடைய பாராட்டு... உலர்ந்திருந்த மனதில் உற்சாகத்தைப் பாய்ச்சியது.

"நான் இன்னிக்கே தினேஷ் கிட்டே எல்லாம் பேசி ஒரு நல்ல முடிவா உங்களுக்கு சொல்றேன்!"

சித்தி கூறியதும் நன்றியுணர்வில் நெஞ்சம் நெகிழ்ந்தது. நன்றியுடன் முறுவலித்தாள். சிறு, சிறு மொட்டாய் உதிர்ந்த அவளுடைய புன்னகைப்

இவளுக்குள் இத்தனை பரிமாணங்களா என்ற பிரமிப்பும் ஏற்பட்டது.

அத்தனையுகள், அப்படியே வார்த்தைகளாய் வெளிப்பட்டன.

''ஸ்மா இட்ஸ் அமேசிங் பிரதா! ஒரு லாயரா.. பிஸினஸ் உமனா.. சோஷியல் ஒர்க்கரா.. எத்தனை அவதாரம் எடுத்திருக்கீங்க? இன்னும் வேற ஏதாவது இருக்கா... இல்லை.. அவ்வளவு தானா?'' பிரதாவிடம் திரும்பிக் கேட்டான்.

''மிஸ்டர் சித்! அவங்க பாதிக்கப்பட்ட பெண்களுக்காக இலவசமாவே வாதாடற ஒரு சாமானப் படைச்சவங்க.. அது உங்களுக்குத் தெரியுமா?'' பாலாதான் கேட்டார்.

அவளுடைய முகத்துதியால் முகம் அந்திவானமாய் சிவக்க, ''ப்ளீஸ்.. போதும் மேடம் என் புராணம்'' தர்மசங்கடத்துடன் முடித்தாள் அவள்.

பொதுவாகவே, முகஸ்துதிக்கு மயங்கி நிற்கும் பெண்களையே அறிந்திருந்தவனுக்கு, அவளுடைய கூச்சமும், தவிப்பும் புதிதாய் தோன்றியது!

''என்னங்க... இவ்வளவு வெட்கப்படறீங்க? கோர்ட்டிலே வீர வசனம் பேசி எதிரிகளையெல்லாம் மடக்குற ஒரு லாயர்! அது வேற பத்தாதுன்னு பெரிய சமூக சேவகி... என்னமோ நானைக்கு உங்களுக்கு கல்யாணம்னு சொன்ன மாதிரி, இவ்வளவு வெட்கப்பட்டு முகம் சிவக்கறீங்க?''

கண்களில் குறும்பு மிதக்க, அவன் கேட்ட அந்தக் கணமே, அவளிடமிருந்த மென்மை தொலைந்து போல், ஒரு வித இறுக்கம் வந்தது.

உடனே பாலாதான் அந்த இறுக்கத்தை கலைத்தார்.

''மிஸ்டர் சித்! எங்க பவுண்டேஷனோட செயல்பாடுகளை புரிஞ்சிட்டிருப்பீங்க.. மிஸ்டர் தினேஷ் கிட்ட பேசி எங்களுக்கு இந்த பேவரை செஞ்சு தந்தா ரொம்ப நன்றியுள்ளவங்களா இருப்போம்! ப்ளீஸ்.. இது எனக்காக இல்லை... இங்கே இருக்கற இந்த அற்புதமான மனுஷங்களுக்காக'' பாலா மெல்லிய குரலில் கூறினார்.

யாரிடமும், எதற்காகவும் கெஞ்சிப் பழக்கமில்லாதவர் அவரென்பது புரிந்தது. சட்டென்று கனிந்த விழிகளுடன், தவிப்பாய், நின்றிருந்த பிரதாவையே ஒரு கணம் இமைக்காமல் நோக்கியவன், அவரிடம் திரும்பினான்.

''மிஸ் பாலா! எதையுமே எதிர்பார்க்காம இவங்களுக்கா மனித நேயத்தோட சேவை செய்யற நீங்க.. தனக்கு கேஸ் வாறனும்னு கூட நினைக்காம, இதை சமாதானமா முடிக்க நினைக்கிற வக்கீலா மேடம், பிரதா.. தங்களோட ஊனத்தை மறந்து அதை வெற்றிக்கான படிகளா மாத்தின இவங்க.. இப்படி உங்க எல்லோரையும் பாத்தப்புறம்... இதைக் கூட நான் செய்யலைன்னா.. ஹூ ம்.. அப்புறம் மனிதாபிமானம் இதுக்கே அர்த்தமில்லாமப் போயிடும்! லெட்ஸ் ஹோப் பார் தி பெஸ்ட்'' என்றபடிக் கைகுலுக்கி அவரிடம் விடைபெற்றான் அவன்.

பிறகு அங்கிருந்து திரும்பி வரும்போது தான், சாரதா தன் உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

''எனக்கு ரொம்ப பிரமிப்பா இருந்ததும்மா பிரதா! நல்லா இருக்கறவங்களே சோம்பி இருக்கற இந்தக் காலத்துல, கண் தெரியாம, நடக்க முடியாம, காது கேட்காம, வாய் பேச முடியாம இருக்கற இவங்கள்லாம் எவ்வளவு நம்பிக்கையோட படிச்சு, கலைகளை தொழில் கத்துக்கிட்டு முன்னேறி வாராங்கன்றதை நினைச்சா சிலிர்த்துப் போகுதும்மா!'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினார்.

''ஆமாம்மா! நல்லா இருக்கற நாம எல்லாம் சின்ன கஷ்டங்களுக்கே உடைஞ்சு போயிடுவோம்! ஆனா இவங்களுக்கெல்லாம் உடல்லேதான் ஊனம் இருக்கே தவிர, மனசுல அது கொஞ்சம் கூடக் கிடையாது! மனசளவில நம்மை விடப் பலசாலிங்க இவங்கல்லாம்! அதான் இவ்வளவு போராடி சாதிக்க முடியுது!

''பல சமயங்கள்லே, நாம ஒவ்வொருத்தரும், நாமும் நொந்து போய் நம்மை சுத்தி இருக்கற உறவுகளையும் பாலைவனமாக்கிடறோம் இதை எனக்கு புரிய வச்சதே இவங்க எல்லாரும் தான்!

''நம்மைச் சுத்தி இருக்கற ஏளனப் பார்வைகளும், புரளிப் பேச்சுகளும் தான் வாழ்க்கையிலே நம்மை உயர்த்தற ஏணியாகணும்னு நான் உணர்ந்ததே, இவங்களைப் பாத்தப்புறம் தான்!

''இந்த மாதிரிக் குறை உள்ளவங்களை தூக்கி வச்சி கொண்டாடவும் தேவையில்லை... அதே போல ஐயோ பாவம்னு ஒதுக்கவும் வேண்டாம்! இயல்பா ஏத்துக்கிட்டாலே போதும்கிறதை நான் இங்கே வந்தப்புறம் புரிஞ்சிக்கிட்டேன்!

''இவங்க ஒவ்வொருத்தரும், யாரோட தயவையும் எதிர்பார்க்காம கல்வியையும் பாலா மேடம்! இதுக்கு நாங்க எல்லாரும் சின்ன சின்ன ஹெல்ப் பண்றோம் அவ்வளவு தான்! மத்தவங்களுக்கு பயன்படற மாதிரி வாழுறது நல்லது தானே!''

எளிதாக முடித்தவளையே ரியர் வியூ மிரரின் வழியே பார்த்த போது, சித்தின் பெரும் பிரமிப்புடன் ஆச்சர்யமும் ஏற்பட்டது!

அவளுடைய மனித நேயம், துணிச்சல், தன்னம்பிக்கை, பிறருக்கு உதவுகின்ற குணம் எல்லாமே அவனை ஒரேடியாக ஈர்த்து வீழ்த்தின.

''ரொம்ப சந்தோஷமா இருக்கு பிரதா.. அவங்களோட சேர்ந்து உங்களையும் இப்படிப் பாக்கறப்ப! ஒவ்வொருத்தருக்கும் எவ்வளவு தெளிவும், தீர்க்கமும் தன்னம்பிக்கையும் இருக்குன்னு நினைச்சா மனசுக்கு நிறைவா இருக்கு'' பெரும் வாத்சல்யமும் பெருமையுடன் கசிந்தன சித்தியின் குரலில்!

பல ஆண்டுகளாக வறண்டு உலர்ந்து வெடிப்பு விட்டிருந்த அவளின் இதயம், இன்று மென் உணர்வுகளால் அதிர்ந்தது.

அவளுடைய பாராட்டு... உலர்ந்திருந்த மனதில் உற்சாகத்தைப் பாய்ச்சியது.

''நான் இன்னிக்கே தினேஷ் கிட்டே எல்லாம் பேசி ஒரு நல்ல முடிவா உங்களுக்கு சொல்றேன்!''

சித் கூறியதும் நன்றியுணர்வில் நெஞ்சம் நெகிழ்ந்தது. நன்றியுடன் முறுவலித்தாள். சிறு சிறு மொட்டாய் உதிர்ந்த அவளுடைய புன்னகைப்

14

வீட்டிற்குச் சென்றதும், ஏனோ அவனுடைய வார்த்தைகளே அவளுக்குள் சுழன்றடித்துக் கொண்டிருந்தன.

அன்று மாலையானதும், மதியைத் தேடி அவர்களின் வீட்டிற்கு சென்றான். சாரதாவுடன் பேசிவிட்டு மதியைத் தூக்கி வந்தபோது, அவர் கூறியது நினைவுக்கு வந்தது.

அவனுடைய சுழலும் விழிகளிலேயே, சிற்பியை அவள் தேடுவதை கவனித்த சாரதா, மெதுவாக விபரம் கூறினார்.

அவன் இந்தக்கேஸ் விஷயமாக தினேஷைப் பார்க்கப் போயிருப்பதாகச் சொன்ன போது, இந்த விவகாரம் நல்லபடியாக முடிய வேண்டுமென்று பிரார்த்தித்தது மனது!

மறுநாள் காலையிலேயே சிற்பி அவளைத் தேடி வந்து விட்டான்.

அவனுடைய அலை பாய்ந்த விழிகளை ரசித்தபடி, "நானும் உங்களோட ஆபீஸுக்கு வரேன்! வசந்தரா மேடத்தோட கொஞ்சம் பேசணும்" ஆழ்ந்த குரலில் கூறினாள்.

உடனே, அவனுடன் காரில் கிளம்பிய போது, அவன் என்ன சொல்லப்போகிறானோவென்ற தவிப்புடன் அமர்ந்திருந்தாள் அவள்.

திடீரென்று திரும்பியவள், "என்ன? பேச்சையே காணோம்! தினேஷ் என்ன சொன்னான்னு கேக்க மாட்டீங்களா?" அவளை ஆழமாய் ஊடுருவியபடி கேட்டான்.

"ம்.. நீங்களே சொல்வீங்கன்னு பாத்தேன்.. அதான் வெயிட் பண்ணிட்டிருந்தேன்!" மெதுவாகக் கூறினாள்.

"ம்.. என்ன பதில் வந்தா உனக்கு சந்தோஷம்?" கண்கள் குறுகுறுக்க அவன் கேட்க, அந்த நிமிடத்தின் காத்திருப்பு, தாங்க முடியாததாய் இருந்தது அவளுக்கு!

"ப்ச்" என்று அவள் திரும்ப, "பாசிடிவ்வான ரிசல்ட் தான்! கேஸை வாபஸ் வாங்க தினேஷ் சம்மதிச்சிட்டான்..."

கண் ஆப்பரேஷனுக்குப் பிறகு ஏதாவது வித்தியாசம் தெரியுதுங்களா...?

தெரியுது டாக்டர் மங்கலா தெரிந்த நர்ஸ்கள் எல்லாம் இப்ப பளிச்சென்று தெரியறாங்க!.

–தேனி, எஸ்.மாரியப்பன்.

அவன் முடிக்கும் முன்பே மகிழ்ச்சியில் அவள் முகம் விகசிக்க, மின்னல் கீற்றாய் விழிகள் ஒளிர்ந்தன.

"தேங்க் யூ சார்! தேங்க் யூ சோ மச்" நன்றியும், நெகிழ்ச்சியும் கலந்திருந்தன அந்தக் குரலில்!

"வெல்கம்! ஆனா நான் தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும்" புரியாத ஒரு பாவனை அவளிடம்!

"ஏன்... எதுக்கு?" விளங்காமல் அவள் கேட்க, "ம்.. எங்க பக்கத்து வீட்டு மோனாலிசா சிரிச்சிட்டாங்களே.. அதுக்குத் தான்!" விழிகளில் உள்ளடக்கிய குறும்புச்சிரிப்புடன் மொழிந்தான் அவன்.

சட்டென்று அவள் புன்னகைக்க, ஒரு அழகிய ஓவியம் போலிருந்தது.. ஏனோ அந்த இடமே அழகாகிவிடுவது போல் ஒரு உணர்வு!

அவனுடைய உல்லாசச்சிரிப்பைக் கண்டதும், திடீரென்று ஒருவித ஒதுக்கம் வந்தது அவளிடம்!

உடனே அவள் முகம் கசங்கியது.

"ஏன் பிரதா! என்னைப் பாத்தா எப்பவுமே உனக்குள்ளே சுருங்கிக்கிறே? நானும் கிட்டத் தட்ட உன்னை மாதிரித் தான். வெளி செக்கிடுவ! எந்த ஒரு விஷயமும், சின்ன வார்த்தையும் கூட என்ன ரொம்ப பாதிக்கும்! இந்த சந்தோஷத்தை என்னோட பகிர்ந்துக்கறது கூடவா தப்பு?" உலர்ந்த குரலில் கேட்டான்.

"சாரி..." மென்று முழுங்கியவளின் விழிகளில், நிஜமான தவிப்பு தொக்கி நின்றது!

பிறகு அட்வகேட் அலுவலகத்திற்கு சென்று இறங்கியதும், வேகமாக அவளை உள்ளே அழைத்துச் சென்றான் அவன்.

வசந்தரா, வாசலுக்கே வந்து அவளை வரவேற்க, உள்ளே சென்று அமர்ந்தனர்.

அவனுடைய பதிலுக்காக அவர் ஆவலுடன் காத்திருக்க, "எனக்கு உங்களை சந்திச்சதிலே ரொம்ப சந்தோஷம் மேடம்! சமுதாயத்தில பாதிக்கப்பட்ட பெண்களுக்காக போராடறதிலே உங்களுக்கு ஒரு தனியிடம் உண்டுன்னு கேள்விப்பட்டிருக்கேன்..." புன்னகையுடன் நிறுத்தினாள்.

"அப்படி எல்லாம் ஒண்ணும் பெரிசா இல்லை சார்! எங்களுக்கு வர்ற கேஸை நல்லா டீல் பண்றோம்! பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை குடுக்கறோம்! அவங்க கேஸை எடுத்து நடத்தும் போது நம்மையறியாம ஒரு திருப்தி... நிறைவு வந்துருது... அவ்வளவு தான்!"

"ம்.. தினேஷ்கிட்டே எல்லாம் பேசியாச்சு! அவன் கேஸை வாபஸ் வாங்க சம்மதிச்சிட்டான்...

"அந்த இடத்துக்கு முதல்லே விலை ரெடிபூ பண்ணிட்டு, இந்த அக்கௌண்ட் நம்பரில் இவர் எண்டில அந்த பவுண்டேஷனுக்கே மாத்திக் குடுக்கறதா சொல்லிட்டான்.

"என்னோட ஷேரையும் அதிலே சேர்த்துக்க சொல்லி இருக்கேன்! இன்கம் டேக்ஸ் கழிவும் இருக்கும். அதனால கவலைப்பட வேண்டாம்னு சொல்லி இருக்கேன்... ஓகேயா?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

"ரொம்ப நன்றி மிஸ்டர் சிற்பி! எவ்வளவு பெரிய விஷயத்தை இவ்வளவு ஈஸியா முடிச்சுத் தந்திருக்கீங்க... தேங்க்ஸ் ஆப்டு யூ" இவர்களுடைய வார்த்தைகள் நன்றியில் நனைந்திருந்தன... மனதின் அடி ஆழத்திலிருந்து உணர்வுபூர்வமாக வந்தன.

"பரவாயில்லை மேடம்! நேத்து அந்த அமைப்புக்கு போய்பார்த்தப்புறம் தான் புரிஞ்சுது... நாம எல்லாரும் இன்னும் நிறைய சாதிக்கணும்னு! அதனால தான் என்னால விடாப்பிடியா தினேஷை சம்மதிக்க வைக்க முடிஞ்சுது!"

"எஸ்யோ.. தேங்க் யூ! நாங்க உங்களுக்கு ரொம்ப கடமை பட்டிருக்கோம்.. நான் உடனே பாலாகிட்டே பேசறேன்... சமூகத்துக்கு நல்லது செய்யணும்னு நினைச்சி சுயநலமில்லாம பாடுபடறவங்களுக்கு தான் எத்தனை சோதனைகள்... பிரச்சனைகள்!"

ஒரு பெருமூச்சுடன் அவர் நிறுத்த, அந்த கேஸ் விஷயமாக எல்லா விபரங்களையும் அக்கறையுடன் கேட்டறிந்த பிறகு, விடை பெற்றுக் கிளம்பினான் அவன்.

அவனை வழியனுப்புவதற்காக இருவரும் வெளியே வர, வசந்தராவின் செல் அழைத்தது.

"ஒரு நிமிஷம் மிஸ்டர் சிற்பி! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க" என்றபடி பேசுவதற்காக உள்ளே சென்றாள்.

திடீரென்று பிரதாவின் குரல் அவனைக் கலைத்தது.

"சாரி சார்! நான் முன்னாடி உங்களைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டேன்.. நீங்க இவ்வளவு நல்லவரா மனித நேயம் உள்ளவரா இருப்பீங்கன்றதை, அன்னிக்கு மிஸ்டர் தினேஷ் கூடப் பேசினப்பதான் நான் புரிஞ்சிக்கிட்டேன்! அன்னிக்கே உங்ககிட்டே மன்னிப்பு கேக்கணும்னு நினைச்சேன்" தயங்கியபடி நிறுத்தினாள்.

"மன்னிப்பா? நான் என்ன சர்ச் ஃபாதரா? என்கிட்ட கேக்கறே?" விழிகள் குறுகுறுப்பாய் அவளையே ஊடுருவக் கேட்டான் அவன்!

"ஏன்.. சர்ச் ஃபாதர்கிட்டே தான் கேக்கணுமா? இது ஒண்ணும் பாவ மன்னிப்பு இல்லையே?" அவளும் விடவில்லை!

அதற்குள் வசந்தரா வந்துவிட, அவன் விடைபெற்றுக் கிளம்பினான்.

இப்போதெல்லாம் அவளைப் பற்றிய நல்லெண்ணம் வித்தாய் விழுந்து, அழகாய் துளிர்விட ஆரம்பித்திருந்தது.

இதயச் சாரத்திற்குள் மறைந்து நின்றிருந்த சோகங்கள்... எல்லா உணர்வுகளையும் மட்டுப்படுத்தின.

15

அலுவலகத்திற்குச் சென்ற சிற்பியின் மனதிலோ, இளம் பனிச் சாரலாய் பிரதாவே நிறைந்திருக்க, அவனுக்குள் பெரும் சிலிர்ப்பாய்!

திருமணம் என்ற சடங்கையே வெறுத்து வந்தவனுக்குள் முதன் முதலாய் நேசத்தின் முகவரி!

இன்றிரவு, இதைப் பற்றி கட்டாயம் சாரதாவிடம் பேச வேண்டுமென்ற உறுதியுடன் வேலையிலாழ்ந்தான் அவன்.

இன்றைய பார்வை பரிமாற்றமும் பேச்சும் சில நிமிடங்கள் தான் என்றாலும் அவளுக்கு அது பெரிய இன்பமுகமாய் இருந்தது!

அன்றிரவு மேல்வீட்டிலிருந்துடன் தன் தாயை அழைத்தான் அவன்.

"அம்மா உங்ககிட்டே முக்கியமா ஒரு விஷயம் பேசணும்!"

அவன் கூறியதும் வியப்புடன் திகைத்தவர், "என்னப்பா? என்ன விஷயம்?" ஆவலுடன் கேட்டார்.

"இன்னும் நீங்க சொல்லிட்டே இருப்பீங்களே... பூங்குழலி வழக்கமாக தான், அப்படி ஆயிடுச்சு எனக்காவது கல்யாணம் பண்ணிக் கண்குளிரப் பார்க்கணும்.. நல்லா வாழணும்னு! எனக்கு சம்மதம்மா" ஆர்த்த குரலில் கூறினான்.

ஒரு கணம் நம்ப முடியாமல் மறந்தபடி, அவனையே வியந்த விழிகளோடு நோக்கிக் கொண்டிருந்தவரின் முகத்தில், தாங்க முடியாத உற்சாகம்!

"நிஜம், என் வயத்துல இப்பதான் பாலை வார்த்தேப்பா! இனிமே எனக்கு வேறென்ன வேணும்? நான் நாளைக்கே தரகருக்கு போன் பண்ணி வரச் சொல்றேன்!" குதூகலத்துடன் ஆர்ப்பரித்தார்.

"வேண்டாம்மா... பொண்ணை... நான் ஏற்கனவே பாத்துட்டேன்" மெதுவாக முடித்தான் அவன்.

"நீயே பாத்துட்டியா? யாருப்பா அது.. உன்கூட வேலை பாக்கிறாளா?" ஆவலுடன் கேட்டார்.

"ஊஹூம்.. உங்களுக்கும் நல்லாத் தெரிஞ்ச பொண்ணுதான் அவங்க!"

சட்டென்று விழிகளில் கூர்மை படர, "நம்ம பிரதாவா அது? என் யூகம் சரியா இருந்தா, அந்தப் பிள்ளையாருக்கு சுத்திவிட்டு தேங்காய உடைச்சிடுவேன்" ஆர்வத்துடன் படபடத்தார்.

"ஊஹூம்... சொல்ல மாட்டேனே!" அவன் கிண்டலாகக் கூற, "இன்னும் எத்தனை நாளைக்கு என் கிட்டே மறைப்பேன்னு பாக்கறேன்" சுட்டு விரலை உயர்த்தி எச்சரித்தார்.

உடனே போலியாய்க் கன்னத்தில் கை வைத்து யோசித்தபடி, "குறைஞ்ச பட்சம் எனக்குக் கல்யாணம் ஆகற வரைக்கும் தான்!" என்றவனின் குரலில் குறும்பு கொப்பளித்தது.

சட்டென்று, அவர் விழிகள் நீரில் நிறைந்தன.

இப்படி அவனைப் பார்த்து எவ்வளவு நாளாயிற்று... பூங்குழலி

பிரசவத்துக்கு போகும் போது உன்தங்கையை உதவிக்கு கூட்டிட்டு வந்தியே இப்ப அவ எங்கே?

அவளும் பிரசவத்துக்குப் போயிருக்கா!

—தேனி, எஸ்.மாரியப்பன்.

இறந்தபிறகு இப்போதெல்லாம் அவன் சிரிப்பதே அபூர்வமாகி!

முன்பு குறும்பும் துள்ளலுமாக இருந்தவன், ஒரேடியாக மாறி இறுகிப்போய், பல நாட்களாகிவிட்டிருந்தன.

"இவ்வளவு உற்சாகமா உன்னை மாத்தின அந்தப் பொண்ணு யாரு சித்து? அவளை உடனே பாக்கணும் போலிருக்கு" அந்தத் தாயின் குரலில் பெரும் தவிப்பும் எதிர்பார்ப்பும் இருந்தது!

"ம்.. ஒரு சின்ன க்ளு சொல்லட்டுமா? கொஞ்ச நேரம் முன்னாடி தான் அவளே வந்துட்டுப் போனா! இப்ப சொல்லுங்க என் மனசை யாருன்னு..?"

"பிரதாவா?" கேட்டபடி உற்சாகமாக அவனை முன்னுச்சியில் முத்தமிட்டவர், "இதைப் பத்தி நானே உன் கிட்டே பேசலாமின்னு இருந்தேன்ப்பா! ரெண்டு பேருமே ஒரே மாதிரி யோசிச்சிருக்கோம் பாரு! நான் உடனே போய் சங்கத்துக்கிட்டே பேசறேன்!" பெருமையுடன் முடித்தார்.

"அம்மா! கொஞ்சம் பொறுமையா இருங்க.. இந்த விஷயம் இன்னும் பிரதாவுக்குத் தெரியாது... முதல்லே நானே என் விருப்பத்தை அவங்ககிட்டே சொல்றேன்... அப்புறமா பெரியவங்க கிட்டே பேசலாம்!"

"அப்படியா? முதல்லே மனசை இருக்கறதை உடைச்சு தெளிவா பேசிடுப்பா! கடவுள் சீக்கிரம்பாங்க.. ஆல் தி பெஸ்ட்" மனம் நிறைந்த உணர்வுடன் அவனை வாழ்த்தினார்.

மறுநாளே அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது... அன்று மதியம் பிரதாவிடமிருந்து ஒரு போன் வந்தது.

யாருடைய எண் என்று புரியாமல் செல்லை அவன் உயிர்ப்பித்த போது, "ஹலோ சார்! நான் பிரதா பேசறேன்.. இன்னிக்கு சாயந்திரம் மிஸ்டர் தினேஷ் கிட்டே நேராவே வந்து பர்சனலா தேங்க்ஸ் சொல்லணும்னு நினைக்கிறேன்! நீங்க ப்ரீயா இருந்தா அங்கே வரீங்களா?" உற்சாகத்துடன் கேட்டாள்.

"சரி! ஆனா ஒரு திருத்தம்! நீங்க இங்கே வந்துடுங்க... ரெண்டு பேருமாப் போகலாம்" ஆழ்ந்த குரலில் முடித்தான் அவன்.

பிறகு கடந்த நேரம் முழுவதும், அவளுடைய இதயம் அவனுடைய காலடி ஓசைக்காய் தவமிருந்தது.

16

மாலையில், அவன் வரும்போதே மனம் இனிமையாய்த் துள்ள, அதை மறைத்தபடி அவனை வரவேற்றாள் அவள்.

பிறகு அவள், ஹோண்டாவில் கிளம்பும்போது, "ஒரு நிமிஷம் பிரதா! கொஞ்சம் கண்ணகி சிலை வரைக்கும் போகணும்.. போயிட்டு அப்புறமா தினேஷைப் பாக்கலாம்"

ஆணித்தரமாகவும், ஆளுமைத் தனத்துடனும் ஒலித்த அவன் குரலை மீற முடியாமல், ஹோண்டாவைத் திருப்பினாள் அவள்.

அவனும் காரை நிழல்போல் ஓட்டி வர, கூட்டம் அதிகமில்லாத அந்த

கடற்கரைசாலையில் வண்டியை நிறுத்தினான் அவன்.

கண்ணெதிரில் கையிலிருந்த செல்லின் மீது சிறு குருவியொன்று அமர்ந்து மூக்கைக் கூர்தீட்டிக் கொண்டிருந்தது.

''இங்க வாங்க பிரதா! உக்காருங்க!'' சுத்தமாக இருந்த மணல் வெளியைக் கைகாட்டி விட்டு அமர்ந்தான் அவன்.

அவள் யோசனையுடன் அமர, ''கோபமா பிரதா? உங்க கூட கொஞ்சம் தனியா பேசணும்! அதான் இந்த அதிரடிக் கடத்தல்!.. தயவு செஞ்சு தப்பா நினைக்காதீங்க.. ப்ளீஸ்!'' என்றான் ஆழ்ந்த குரலில்!

அவள் பதில் கூறாமல் சிந்தித்த படி அமர்ந்திருக்க, ''என்ன யோசனை பிரதா? மை காட்... நீ எவ்வளவு அழகா இருக்கேன்னு தெரியுமா உனக்கு? நான் உன்னை மனசார விரும்பறேன்.. உன் கூடக் கடைசி வரைக்கும் வாழணும்னு ஆசைப்படறேன்'' மென்மையாகக் கூறினான்.

சட்டென்று, அவளுக்குள் பெரும் விதிர்ப்பும் தவிப்பும் பரவின.

ஒரு கணம் நம்ப இயலா அதிர்ச்சியுடன் விழி விரித்து அவனையே நோக்கியவள், மறு நிமிடமே எழுந்தாள்.

அவனுடைய முகமும், செவ்வையும் ஏதையோ உணர்த்த, ''ப்ளீஸ் பிரதா! முதல்லே உக்காருங்க... நான் எதுவும் தப்பாக் கேக்கலை! லவ் பண்ணி ஊரை சுத்தலாமின்னு சொல்லலை! எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு.. என்னை கல்யாணம் செஞ்சுக்க சம்மதமான்னு தான் கேட்டேன்..'' அவசரமாக அவளை வழி மறித்தான்.

உடனே, அவளுடைய நெஞ்சக் கூட்டிற்குள்ளிருந்து எதையோ யாரோ பிடுங்கி எறிந்தாற்போல் வலித்தது.

கண்களை சுருக்கி அவனை நோக்கியவள், ''சாரி சார்! என்னால யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது... உங்களுக்குள்ளே திடீர்னு இப்படி ஒரு எண்ணம் எப்படி வந்தது? உங்க ஆசையைத் தூண்டி விட்டதில என் பங்கு எதுவும் இருந்தா...

அதுக்கு ஒரு வேளை நான் காரணமா இருந்தா, தயவு செஞ்சு என்னை மன்னிச்சிடுங்க ப்ளீஸ் சார்!'' பரிதவிப்புடன் இறைஞ்சியவளின் விழிகளில், பெரும் கலக்கம் தெரிந்தது!

''ஏன்.. ஏன் பிரதா? கல்யாணம்ன உடனே ஏன் பதட்டப்படறீங்க? எல்லோருக்கும் இயல்பா நடக்க வேண்டிய ஒரு விஷயம் தானே அது! எனக்கு.. சில காரணங்களாலே, இத்தனை நாளா வெறுப்பா இருந்தது... இப்போ உன்னைப் பாத்தப்புறம், ஏனோ கடைசி வரைக்கும் உன் கூட வாழணும்னு தோணுது... உன்னால மட்டும் தான் எனக்கு சந்தோஷத்தையும் இனிமையையும் தர முடியும்னு நினைக்கிறேன்!''

''சாரி! தப்பு பண்ணிட்டீங்க! என்னால யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது! சந்தோஷத்தையும் இனிமையையும் அவங்களுக்கு சத்தியமாத் தர முடியாது!'' பதைப்புடன் கூறிவிட்டு எழ முயற்சித்தாள்.

அவனுடைய வலுவான கரம், அவளை இரும்பாய் பற்றி நிறுத்தியது.

''எனக்கு பதில் சொல்லிட்டு அப்புறம் தான் நீ இந்த இடத்தை விட்டு நகர முடியும்! என்று சொல்லு... ஏதாவது காரணம் இருக்குமில்லையா? அது என்னன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்!'' அடிக்குரலில் சீறினான்.

''சொல்ல லைன்னா என்ன செய்வீங்க? ம்..?''

அவள் கோபத்துடன் கேட்க, ''இப்படியே உன்னைத் தூக்கிட்டுப் போயி வலுக்கட்டாயமா தாலி கட்டிடுவேன்!'' சிரிக்காமல் உறுதியுடன் கூறினான்.

''ஹூம்! என் கதையைக் கேட்டப்புறம், இதே பதிலைச் சொல்ல உங்களுக்கு நிச்சயமா தைரியம் இருக்காது... பாவம்!''

வேதனையும் விரக்தியுமாய் அவள் கூறியதும், யோசனையுடன் அவளையே ஊடுருவினான் அவன்.

பிறகு, ''உன் வாழ்க்கையில அப்படி என்ன சோகம் பிரதா? என்னை ஒரு நண்பனா நினைச்சா என்கிட்ட பகிர்ந்துக்கலாமே?'' மென்மையாகக் கேட்டான்.

''இல்லை.. வேண்டாம்! ப்ளீஸ் என்னை வற்புறுத்தாதீங்க.. நான் எதுவும் சொல்ல மாட்டேன்!''

அழுத்தமாகக் கூறியவளையே ஒரு கணம் இமைக்காது நோக்கியவன், ''சரி! வசந்தரா மேடத்துகிட்டே உன்னைப் பத்தி கேட்டுத் தெரிஞ்சுக்கறேன்!'' என்று முடித்து விட்டு எழுந்தான்.

''இல்லை.. வேண்டாம்!'' பதட்டத்துடன் அவனைத் தடுத்தவளின் விழிகள் கலங்கியிருக்க, சிறிது நேரம் சிலை போல் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''உனக்கு சொல்ல மனசில்லைன்னா வேண்டாம் பிரதா! தயவு செஞ்சு கண்ணைத் தொடச்சிக்க! உன்னை தன்னம்பிக்கையும், தைரியமுமா ஒரு வித கம்பீரத்தோட பாத்துட்டு இப்போ இது மாதிரி... ப்ச்.. வலிக்குது.. ப்ளீஸ்!''

அவளுடைய உணர்வுகள் நிதர்சனமாய் புரிய, வெகு காலமாய் உள்ளேயே அடக்கி அணை கட்டியிருந்த சோகங்கள், கரை உடைத்து வெளிவர ஆரம்பித்தன.

17

கடல் மணலில் நீலிரமாய் கோலம் போட்டபடி, தன்னுடைய கடந்த காலத்தை அவனிடம் பகிர்ந்து கொள் ஆரம்பித்தாள் அவள்.

அவளுடைய நினைவுகள், நீண்ட களைப்புடன் பின்னோக்கிப் பயணித்தன.

ஏழு வருடங்களுக்கு முன்பு...!

ப்ரதாவின் குடும்பம், அப்போது வேறு ஊரில் குடியிருந்தனர்.

அவள், பி.காம் இறுதிப் பரீட்சை எழுதிவிட்டுத் தேர்வு முடிவிற்காகக் காத்திருந்தாள். அப்போதுதான், தரகர் மூலமாக அவளுக்கு

அந்த வரன் வந்தது. மாப்பிள்ளை தனபால், பி.இ. முடித்துவிட்டு, டெல்லியில் பெரிய கம்பெனியில் வேலை பார்த்து வந்தான்.

அவனுக்கு அம்மா அப்பா இல்லை... ஒரு அத்தை மட்டுமே அவனை விட சில வயதுகளே மூத்திருந்த ஒரு இளம் விதவை அவள்!

அவர்கள் பெண் பார்க்க வந்தபோது தனபாலுக்கும், ப்ரதாவைப் பிடித்து விட, நிறைய சீரும் நகைகளுமாய், மிகவும் விமரிசையாகத் திருமணம் செய்து வைத்தார் லட்சமணன்!

புகுந்த வீட்டில் மாமியார், நாத்தனார் என்று அவள் எந்தவிதப் பிரச்சனையும் இல்லாமலிருப்பாள் என்று உறவுப் பெண்கள்...... புதுப் பெண்ணாக டெல்லிக்குச் சென்றாள் அவள்.

லட்சமணனும், ரங்கநாயகியும் அவளைக் குடித்தனம் வைத்துவிட்டு, மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

டெல்லியில் உயர்தர மக்கள் வசிக்கின்ற கரோல் பாக் ஏரியாவில் ஒரு பெரிய பங்களாவில் தனபால் குடியிருந்தான்.

சுற்றிலும் தோட்டம் சூழ இருந்த அந்த சொந்த வீடும், அவனுக்கு கம்பெனியில் அளித்திருந்த காரும், அவனுடைய செல்வச் செழிப்பை பறை சாற்ற, பெருமையும் மகிழ்ச்சியுமாய் ஊர் வந்து சேர்ந்தனர் லட்சமணனும் ரங்கநாயகியும்!

ஆனால் தங்களுடைய மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்காது என்பதை அவர்கள் அறியவில்லை.

முதலில் ஒரு வாரம், ப்ரதாவிற்குத் தேன் நிலவாய் இனித்தது. அவளிடம் பாசத்தைப் பொழிந்த தனபால் மெதுவாக மாறத் துவங்கினான். அவன் வேலைக்குச் செல்ல ஆரம்பித்த பிறகுதான், அவனுடைய அத்தை மேனகா தன் வேலையைக் காட்டத் துவங்கினாள்.

திடீரென்று, ஒரு நாள் வேலைக்காரியும், சமையல்காரம்மாளும் நிறுத்தப்பட... அவளே எல்லா வேலைகளையும் செய்யும்படியானது. சமையலும் செய்து மற்ற வேலைகளையும் செய்து முடிப்பதற்குள், திணறிப் போனாள் அவள்.

நம் வீடுதானே என்று பல்லைக் கடித்துக் கொண்டு எல்லாவற்றையும் செய்யும்போது, மேனகா டி.வி. பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பாள்.

இடையிடையே அவளை அழைத்து, ஜூஸ், சூப்பும் செய்து தரச் சொல்லி ஆணையிடுவாள்.

ஊருக்கு திருமணத்திற்கு வந்தபோது, புடவை கட்டி பவ்யமாக இருந்த அவளின் நடை, உடைகளும் மெதுவாக மாறத் துவங்கின.

வீட்டில் மிடியும், டாப்புமாய் அதிகமான அலங்காரத்துடன் அவள் வலம் வரத் துவங்க, விக்கித்துப் போனாள் ப்ரதா.

சில நாட்களிலேயே தெரிந்தது... இருவருமே மிகவும் மோசமானவர்களென்பது!

எப்போதுமே இரவில் பால் குடித்துவிட்டுப் படுத்த உடனே, அடித்துப் போட்டாற்போல் உறங்கி விடுவாள் அவள்.

காலையிலிருந்து அதிகமாய் வேலை செய்வதால்தானென்று அவள் நினைத்திருந்தாள்.

ஒரு நாள் சமையலறைக்குச் சென்றபோதுதான், தான் குடிக்க வைத்திருந்த பாலில் தனபாலே இரண்டு மாத்திரைகளைப் போட்டுக் கலப்பதைப் பார்த்து விட்டாள்.

இரவு, தினமும் இருவருக்கும் பாலைக் கலந்து எடுத்து வந்து தருவது, சமீப காலமாகவே அவனுடைய வழக்கமாகி இருந்தது. அன்று, ஒரு முடிவுடன் தன் அறைக்கு திரும்பிச் சென்றவள், பாலைப் பருகாமலே வாஷ் பேசினில் கொட்டி விட்டுப் படுத்து விட்டாள்.

மனமும் உடலும் ஏதோ ஒருவித எதிர்பார்ப்பில் பதறிக் கொண்டிருக்க, தனபால் உறங்குவதற்கு வரவில்லை.

வெகு நேரம் காத்திருப்பிற்குப் பிறகு மெதுவாக எழுந்து சென்று பார்த்தால், ஹாலில் யாரையுமே காணவில்லை!

மேனகாவின் அறைக் கதவு மெலிதாய் திறந்திருக்க, அருகில் சென்று பார்த்தபோதுதான், அவள் பெரிதும் அதிர்ந்து போனாள்.

ஸ்லீவ்லெஸ் நைட்டியணிந்து கையில் மதுக் கோப்பையுடன் மேனகா அமர்ந்திருக்க, தனபால் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

உடலும் உள்ளமும் பதறித் துடிக்க அவள் மீண்டும் எப்படித் தன் அறைக்கு வந்தாளென்றே தெரியவில்லை.

தாங்க முடியாத அதிர்ச்சியில் தேகம் நடுங்க, தான் ஒரு தவறான இடத்தில் வந்து மாட்டியிருப்பது மட்டும் புரிவதாய்!

''கடவுளே எனக்கு ஏன் இப்படி ஒரு கொடுமையை செய்தாய்... நான் என்ன பாவம் செய்தேன்...'' மனம் இறைஞ்ச, பயத்திலும் நடுக்கத்திலும் காய்ச்சலே வந்துவிட்டது.

மறுநாள் காலையில் அதிர்ச்சியில் சோர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவளை, மேனகாவின் கர்ண கடூரக் குரல் எழுப்பியது.

''ஏய்... என்ன... நீ இந்த வீட்டு மகாராணியா? விடிஞ்சு இவ்வளவு நேரமாத் தூங்கறே? எழுந்திருச்சி மரியாதையா வேலையைப் பாரு!'' உரத்த குரலில் கத்தினாள்.

தனபால் எதையுமே கண்டுகொள்ளாதவனைப் போல் அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தான்.

என் மாமியாரை போன் டாக்டர் கிட்ட கூப்பிட்டுப் போனது தப்பாப்போச்சு!

ஏன்...?

ரொம்ப ஜாக்கிரதையா வைத்தியம் பண்ணி பிழைக்க வச்சிட்டார்!

–தேனி, எஸ்.மாரியப்பன்.

இருவரையும் பார்த்தாலே, நேற்றைய இரவின் நினைவில்... அருவருப்பில் அவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

அவன் தீண்டிய தன் தேகத்தையே எரித்துக் கொள்ளும் ஆவேசம் வந்தது. உள்ளே எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்த மனதை மறைத்து இந்த வீட்டிலிருந்து எப்படித் தப்புவதென்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.

மொழிப் பிரச்சனை வேறு அவளை கதிகலக்கச் செய்ய, இந்தி கற்றுக்கொள்ளாத தன் மடத்தனத்தை எண்ணி ஓய்ந்து போனது நெஞ்சு!

மனமும் உடலும் மரத்துப் போயிருக்க, வேலைகள் தாமதமாகிவிட, அதற்கும் மேனகாவிடம் திட்டு வாங்கினாள் அவள்.

அந்த இரு கொடிய அரக்கர்களிடமிருந்து தப்பும் சந்தர்ப்பமே அவளுக்கு வாய்க்கவில்லை.

நாட்கள் நகர நகர, அவளால் எந்த வேலையுமே செய்ய முடியவில்லை. தலை சுற்றலும், வாந்தியும் வேறு அவளைப் பாடாய்ப் படுத்தின. அதோடு மேனகாவின் ஏச்சும், பழிச் சொற்களும் சேர்ந்து கொள்ள, ஒரு நாள் தாங்க முடியாமல் கணவனிடம் வெடித்து விட்டாள் அவள்.

அதற்கு, அவனிடமிருந்து வந்த பதிலை அவள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. "ஏய்! இங்கே மேனகா வச்சதுதான் சட்டம்... புரியுதா? அவ என்ன சொல்றாளோ அப்படி நடந்துக்கிட்டாதான் உனக்கு நல்லது... வீணா அடிபட்டு சாகாதே!"

உச்சஸ்தாயியில் எச்சரித்து விட்டுப் போன தனபாலையும், அவன் செயல்களையும் நினைத்தால், அடி வயிறு வரை கசந்தது.

18

ஒரு நாளிரவு, பாலைக் குடிக்காமல், அவர்களின் அந்தரங்கத்தை அம்பலப்படுத்தி விட வேண்டுமென்று விழித்திருந்தாள் அவள்.

மெதுவாக மேனகாவின் அறைக்கு சென்றபோது, உள்ளிருந்து கேட்ட வார்த்தைகள், ஒரு புறம் அமுதத்தையும் அதே சமயம் திராவகத் துளிகளையும் சேர்த்து வீசின.

லேசாக கதவு திறந்திருக்க, எட்டிப் பார்த்தபோது, தனபாலின் மடியில் படுத்தபடி மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தாள் மேனகா.

"தனா டார்லிங்! அந்தப் பொண்ணு கர்ப்பமா இருக்கிற மாதிரித் தெரியுது... கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கக் கூடாதா? இப்போ... இவளை எப்படி அந்த பாம்பே பார்ட்டிகிட்டே விலை பேசறது? முதல்லே அதைக் கலைக்கிற வழியைப் பாரு! அப்புறமா அவளுக்கு ஒரு வழி பண்ணலாம்!

"போன வருஷம், நீ கல்யாணம் செஞ்சு அழைச்சிட்டு வந்தியே... அவளை எந்தவித தடங்கலும் இல்லாம, அப்படியே அந்த துபாய் ஷேக்குக்கு அஞ்சு லட்சத்துக்கு வித்தோம்...

"அப்புறமா பழைய காதலனோட அவ ஓடிப் போயிட்டான்னு ஊர் முழுக்க கதை கட்டினோம்... எல்லாரும் நம்பிட்டாங்க... நாம எழுதின

அந்த லெட்டரைப் பார்த்துட்டு அவ குடும்பமே பயந்து போய் வாயை மூடிக்கிச்சே! அவதான் எழுதினதா நம்பிட்டாங்க அந்த மடப் பசங்க!"

அதைக் கேட்டதும், வாயை இறுக மூடியபடி தாங்க முடியாத பேரதிர்வில் உடலும் உள்ளமும் உறைந்துவிட, மூளையே யோசிக்க மறுத்து மரத்துப் போய், அப்படியே சுவரில் சாய்ந்து அமர்ந்தாள் அவள்.

அப்போதுதான், தன்னுடைய தலை சுற்றலுக்கும், வாந்திக்கும் அவளுக்கே காரணம் புரிந்தது!

இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது என்ற கணக்கிடுதலிலேயே அவளுடைய கவனமெல்லாம் இருக்க, தன்னைப் பற்றி நினைக்கவே மறந்து போயிருந்தாள் அவள்.

இரண்டு மாதங்களாக பீரியட்ஸ் வராமல், இப்போதுதான் மூன்று மாத கர்ப்பம் என்று தெரிந்தபோது, இது அவனுடைய குழந்தை என்ற நினைவில் தேகமே பற்றி எரிவது போல்!

திருமணமான பிறகு எவ்வளவு இனிமையாக எதிர்நோக்க வேண்டிய ஒரு விஷயமிது... இன்று இது இவ்வளவு நாராசமாக கொடூரமாக மாறும் என்பதை இன்றுதான் உணர்ந்தாள் அவள்.

இந்த அளவுக்கு கேவலமான, மனைவியையே விலை பேசத் துணிந்த ஒரு கொடூரனின் வாரிசு தன் வயிற்றில் ஜனித்திருக்கிறதே என்ற அருவெறுப்பிலும், சுயபச்சாதாபத்திலும் உடல் கூசியது.

உடனே தாங்க முடியாமல் குமட்டிக் கொண்டு வர, தன்னையறியாமலே அன்றிரவு சாப்பிட்ட அனைத்தையுமே 'ஓ'வென்று வாந்தியெடுத்து விட்டாள் அவள்.

சப்தம் கேட்டு வெளியே வந்த தனபாலின் விழிகளில், கடும் சீற்றம்!

"என்னடி! உளவு பாக்கறியா? நீ என்ன எங்களை வேவு பாக்கறது... நானே சொல்றேன் கேட்டுக்க! ஆமாம்... இவதான்.. என் மனைவி மேனகா! எங்க பிசினஸே இதுதான்...".

"வருஷத்துக்கொரு பொண்ணை கல்யாணம் செய்யறது... அப்புறம் வித்துடறது.. நீ மூணாவது!... ஒவ்வொரு ஸ்டேட்டா பாரபட்சமில்லாம செஞ்சிட்டிருக்கோம்! இங்கிருந்து தப்பிக்கலாமின்னு மட்டும் கனவு காணாதே... அப்புறம் உன்னைக் கொலை பண்ணக் கூடத் தயங்க மாட்டோம்."

காட்டு மிருகமாய் அவன் கர்ஜிக்க, ஓய்ந்து போய், அழக்கூடத் திராணியின்றி கண்கள் வறண்டு அமர்ந்திருந்தாள் அவள்.

மறு நாளிலிருந்து அந்த வீட்டிலிருந்து அவள் தப்பிக்க செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின.

தன் குடும்பத்திற்கும் டெல்லி கமிஷனருக்கும் ஒரு கடிதம் எழுதி வாட்ச்மேனிடம் அவள் கொடுக்க, உடனே அந்தக் கடிதம் மேனகாவிடம் வந்து சேர, அவளை அடித்து நொறுக்கி விட்டான் தனபால்.

மறுநாளே, இருவரும் ஒரு முடிவு செய்து அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

கருவைக் கலைப்பதற்காக அவர்கள் அழைத்துச் செல்ல, வழியிலேயே அவர்களிடமிருந்து தப்பிவிடும் நோக்கத்தில், ஓடும் காரிலிருந்து குதித்து விட்டாள் அவள்.

உடனே பின்னால் வந்த கார், சடன் பிரேக் போட்டு நின்றது.
அதிலிருந்த இருவர் ஓடிவந்து அவனைத் தூக்கினர்.

இதை எதிர்பார்க்காத இருவரும், காரை எடுத்துக் கொண்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர்.

பிறகு, அவசரமாக அவனை மருத்துவமனையில் அவர்கள் அனுமதிக்க, வயிற்றில் பலமாக அடிபட்டதில் குழந்தை கலைந்திருந்தது.

அவளும் கோமா நிலைக்கு சென்றிருக்க, அவள் யாரென்றே அறிய முடியவில்லை.

பதினைந்து நாட்கள் கழித்து அவள் கண்விழித்தபோதும், பெரும் அநாதையாக, கதறலாகவே விழித்தாள் அவள்.

அப்போதுதான் தன்னை சுற்றியிருந்த அன்பு உள்ளங்களையும், மருத்துவர்களையும் அவள் அடையாளம் கண்டுகொண்டாள்.

பிறகு மெல்ல மெல்ல அவளிடம் விஷயத்தை சேகரித்த மருத்துவர்கள், உடனே அவளுடைய பெற்றோருக்கு விபரத்தைத் தெரியப்படுத்தினர்.

உடனே போலீசிற்கும் தகவல் தெரிவிக்கப்பட, மேனகாவும் தனபாலும் தலைமறைவாகியிருந்தனர்.

மெல்ல மெல்ல அவள் தேற, வேறு ஒரு கேஸ் விஷயமாக கைது செய்யப்பட்ட தனபாலையும் மேனகாவையும், லட்சுமணனும் ரங்கமும் அடையாளம் காட்ட, அவர்களின் மேல் வழக்கு பதிவு செய்து கோர்ட்டில் கேஸ் நடந்தது.

அப்போது, வசுந்தரா டெல்லியில் ப்ராக்டீஸ் செய்து கொண்டிருந்தார். அப்போது அறிமுகமாகி ப்ரதாவின் கேஸை எடுத்து நடத்தி, வலுவாக வாதாடி வெற்றியும் பெற்றார்.

பல வழக்குகளில், மேனகாவும் தனபாலும் சம்பந்தப்பட்டிருந்ததால், கொலை முயற்சி ஏமாற்றி திருமணம் செய்தல், பெண்களை விலைபேசி விற்பது, குடும்ப வன்முறை என்ற பல குற்றங்களுக்காக இருவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

ஆனால் தண்டனையை அனுபவிக்க பயந்து, மேனகா தற்கொலை செய்து கொள்ள, தனபால் மட்டும் சிறையிலிருக்கிறான்.

19

எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பிய லட்சுமணன், தன் சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டு சென்னைக்கு வந்துவிட்டார்.

அங்கு ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரை ஆரம்பித்தவர், வசுந்தராவின் யோசனையால், அவளை பி.எல். சேர்த்து விட்டார்.

அவள் படித்துக் கொண்டிருக்கும்போது, கணவருடைய பணி மாற்றத்தால், தமிழ்நாட்டிற்கே வந்துவிட்டார் வசுந்தரா.

இரு குடும்பத்துக்குமிடையே, ஒரு வலுவான நட்பிழை இயல்பாகவே அமைந்துவிட, அவரிடமே ஜூனியராக சேர்ந்தாள் ப்ரதா!

இன்று, தங்களைப் போல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக

இருவரும் போராடி வருகின்றனர். (நீண்ட காலத் தோழமை உணர்வுடன் இணைந்திருக்கின்றனர்.

ப்ரதா தன் கடந்த காலத்தைப் பற்றிக் கூறி முடித்தபோது, ஒரு புயல் கடந்த பூமியாய் மாறியிருந்தது தேஜ்வின் இதயம்!

அவளுடைய வாழ்க்கையும், வேதனைகளும் அப்படியே சம்மட்டியால் முகத்தில் அறைந்தன... அப்படியே பூக்குழியின் இறுப்பை நினைவுபடுத்தின.

முகம் கசங்கி ஒடிந்து போய் அமர்ந்திருந்தவனையே கலங்கிய விழிகளோடு நோக்கியவள், "இப்ப என்ன சொல்றீங்க தேஜ் சார்? ஏண்டா இவளை விரும்பினோம்னு தோணுதா? அவசரப்பட்டு நம்ம முடிவை சொல்லிட்டோமே... இப்போ எப்படிப் பின்வாங்கறதுன்னு வருத்தமா இருக்கா?" விரக்தியும் ஏளனமுமாக வார்த்தைகளை தெறவிட்டாள்.

தன்னை நிலைப்படுத்தி வேகமாக நிமிர்ந்தவனின் விழிகள், செவ்வரியோடிச் சிவந்திருந்தன... உடனே அவனிடமிருந்து பதில் வந்தது!

"இல்லை... உன்னை நான் முன்னாடியே சந்திச்சிருக்கலாமோ... இந்த விஷயத்தைப் பத்தி உன்னை நேசிக்க ஆரம்பிச்ச முதல் நாளே உன்கிட்ட பேசியிருக்கலாமேன்னு தோணுது! அப்படிப் பேசியிருந்தா இந்நேரம் நீ என் மனைவியாயிருப்பே! அந்தப் பழைய நாட்களோட கொடூர நினைவுகளும், வேதனைகளும் மறக்கற மாதிரி ஒரு அற்புதமான வாழ்க்கையை... சொர்க்கத்தை உனக்கு தந்திருப்பேனே! அதை இவ்வளவு தாமதமாக செய்ய நேர்ந்திருக்கேன்னு வருத்தமா இருக்கு" ஆழமான குரலில் கூறியபடி அவளையே ஊடுருவினான் அவன்.

இதை எதிர்பார்க்காத ப்ரதாவிற்குள், சிறு நடுக்கம் ஓட... விதிர்த்துப் போய் எழுந்தாள்.

"சாரி நான் கௌம்பறேன் சார்...!" வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

உடனே எழுந்து அவளைப் பின் தொடர்ந்தவன், "ஒரு நிமிஷம் ப்ரதா!

என்னால உன்னை மறக்க முடியாது.. நீ இல்லாத ஒரு வாழ்க்கையை கற்பனை பண்ணியும் பார்க்க முடியாது! உன்மேல நான் வச்சிருக்கற நேசம்... என் உடம்புக்குள்ளே இருக்கற உயிர் மாதிரி! அதை வெளியே

'வீட்டுக்கு அப்பளம் வாங்கிட்டுப் போகணும்ங்கறதை மறந்துவிட்டேன்.

அடடே அப்புறம்?

என் மனைவி என்னை நொறுக்கிவிட்டாள்.

-எம்.அசோக்ராஜா, திருச்சி.

எடுத்து விளை, நான் செத்துடுவேன் ப்ரதா! அதிலே குற்றம் குறையும் என்னால பாக்க முடியாது!

''உனக்காக நான் எத்தனை வருஷம் வேணாலும் காத்திருப்பேன்''... உறுதியாய் கூறினான்.

விருத்த கோபத்துடன் திரும்பியவள், ''என்னால யாரையும் கல்யாணம் செஞ்சிக்க முடியாது! அவங்க கூட வாழ முடியாது... அவங்க எதிர்பார்க்கற மனைவியா நடந்துக்க முடியாது... புரியுதா! ப்ளீஸ் என்னை விட்டுடுங்க!'' கையெடுத்துக் கும்பிட்டு விட்டு வேகமாக ஓடிச் சென்று ஹோண்டாவை உயிர்ப்பித்துக் கிளம்பி விட்டாள்.

அப்படியே உறைந்து நின்றிருந்தவனுக்குள், அவளை எப்படியாவது மாற்றி தன் இணையாக்க வேண்டும்... அவளுக்கு ஆனந்தத்தையும் நிம்மதியையும் அறிமுகப்படுத்தி, இனிமையான ஒரு வாழ்க்கையை பரிசாக வழங்க வேண்டும் என்ற வேட்கையும், ஏக்கமும்!

சிறிது நேரம் அப்படியே நின்றிருந்தவன், ஒரு பெருமூச்சுடன் காருக்குச் சென்றான்.

விழிகளை நழுவலாக்கி அவனுடைய நேசம் உட்புக, அவள் இதயம் திறவாக்கதவென்பது புரிந்தது.

20

அன்று மாலையில், வீட்டிற்கு வரும்போது மிகவும் ஓய்ந்திருந்தான் அவன். நடந்த விஷயங்களைப் பற்றி எதுவுமே அறியாததால், உற்சாகமாக அவனை வரவேற்றார் சாரதா.

''வாப்பா! இப்பதான் கனகம் பஜ்ஜி செஞ்சா.. இரு.. எடுத்துட்டு வரேன்!'' என்று எழுந்தார்.

''இல்லைம்மா.. எனக்கு தலை வலிக்குது.. வேண்டாம்! நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன்'' உயர்ந்த குரலில் கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்றான்.

அவனுடைய முகமும், குரலும் எதையோ உணர்த்த, யோசனையுடன் அமர்ந்தார் அவர்.

சிறிது நேரத்திலேயே, மதி எழுந்து வந்துவிட்டாள்.

பிறகு பொழுது அவளுடன் செல்ல, இன்று ப்ரதா ஏன் வரவில்லை.. ஒரு வேளை சித்தி அவளுடன் பேசியிருப்பாளோ.. பல வினாக்கள் அவருக்குள்!

அன்றிரவு, ஒன்பது மணியாகியும் அவன் சாப்பிட வராததால், மெதுவாக அவனுடைய அறைக்குள் சென்றார் சாரதா.

அவர் உள்ளே நுழைந்ததுமே, வேகமாக எழுந்து அமர்ந்தவனுடைய முகம் சோர்ந்து, கண்கள் இடுங்கியிருந்தன.

''என்னப்பா.. சாப்பிட வரலை.. ஏன் இவ்வளவு டல்லா இருக்கே? தலைவலிக்கு ஏதாவது மருந்து சாப்பிட்டியாப்பா?'' பரிவுடன் வினவியபடி அவனருகில் அமர்ந்தார்.

''ம்... இப்ப பரவாயில்லைம்மா! மருந்தெல்லாம் வேண்டாம்... எனக்கு பசிக்கலை... நீங்க சாப்பிட்டுப் படுங்க! மதி எங்கேம்மா?''

சோர்வு மிகுந்திருந்தது அவன் குரலில்!

''அவ சாப்பிட்டுட்டு தூங்கிட்டா... ஏதாவது பிரச்சனையா சித்து? எனக்கு ஒரு சந்தேகம்... ப்ரதாகிட்டே பேசிட்டு வந்தியாப்பா? சிறு ஆவலுடன் கேட்டார்.

உடனே இடுக்கிட்டு நிமிர்ந்தவனைக் கண்டதும், அவருக்குப் புரிந்து போயிற்று. ''ஏன்ப்பா... அவ ஒத்துக்கலையாப்பா? நான் வேணாப் போய் ரங்கத்துக்கிட்டே பேசவா?''

அவர் கேட்ட மறு கணமே குறுக்கிட்டவன், ''அம்மா... ப்ளீஸ் அவங்க கிட்ட எல்லாம் போய் பேசி, ஆறியிருக்கற ரணத்தை மேலும் கிளற வேண்டாம்!

''நாம நினைச்ச மாதிரி இல்லைம்மா! ப்ரதாவோட வாழ்க்கையிலயும், நம்ம பூங்குழலிக்கு நடந்த மாதிரி, பெரிய சோகம் நடந்திருக்கு! அதிலே உடைஞ்சு போகாம, அவ உயிர்த்தெழுந்து வந்ததே பெரிய ஆச்சர்யம்தான்!

''அவ என்னை ரிஜெக்ட் பண்ணினது கூட என்னை அவ்வளவா பாதிக்கலை...

என்னால அவளை மாத்திட முடியும்கிற நம்பிக்கை இருக்கு!

''ஆனா அவளோட கடந்த காலம்... அதிலே அவ கடந்து வந்த சோதனைகளும், வேதனைகளும்... நினைச்சாலே கதி கலங்கிப் போகும்மா!''

''என்னப்பா சொல்றே? அப்படி அவளுக்கு என்ன பிரச்சனை? பதறிப்போய் கேட்டார் அவர்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு அவளுடைய கல்யாண காலத்தைப் பற்றியும்.... அதிலிருந்து ஒரு திருமண அகதியாய் அவள் தப்பி வந்ததைப் பற்றியும், அவன் மெதுவாக விவரிக்கத் துவங்கினான்.

அவன் கூறக் கூற சாரதாவிற்குள் பூங்குழலியின் நினைவும், பெரும் படபடப்பும் இழை கோர்த்தன.

அவன் முடிக்கும்போது, அவருடைய விழிகள் அருவியாகி இருக்க, மனமோ பாறாங்கல்லாய் கனத்திருந்தது.

கடவுளே... அந்த சிறு பெண்ணுக்கு இவ்வளவு சோதனையா என்று நெஞ்சம் பதைத்துப் போனது.

அவளை மருமகளாக்கி, உள்ளங்கையில் வைத்துத் தாங்கி, பூங்குழலிக்கு பதிலாக அவளை இந்த வீட்டுப் பெண்ணாக்கிச் சீராட்ட வேண்டும் என்று வேகம் வந்தது.

ஒரு முடிவுடன் நிமிர்ந்தவர், ''ரொம்ப கஷ்டமா இருக்குப்பா.. நீ சொன்னதைக் கேட்டதும்! அப்படியே மனசும் உடம்பும் ஆடிப் போச்சு...

''உடனே, அவளை இந்த வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து கண்ணுக்குள்ளே வச்சிப் பாத்துக்கணும்னு தோணுது!

''நீ கவலைப் படாதே சித்து! நான் நாளைக்கே இதுபத்தி ரங்கத்துக்கிட்டே பேசறேன்!

வாப்பா... வந்து கொஞ்சமாவது சாப்பிடு!''

அவனுடைய முன்னுச்சி முடியை ஆதரவாகக் கோதிவிட்டு

அழைத்தார்.

"இல்லைம்மா... என்னை கஷ்டப்பட்டு பண்ணாதீங்க... ஒரு கப் பால் மட்டும் போதும்!"

ஒய்ந்து போய் கூறியவளையே பார்த்திருந்தவர், மெதுவாக எழுந்து வெளியே வந்தார்.

பிறகு அவர் அளித்த பாலைப் பருகி விட்டு படுத்தவளால், வெகு நேரம் உறங்கவே முடியவில்லை!

பிரதாவின் நினைவுகளும், அவளுடைய சோகங்களும் அவளை வெகுவாய் ஆட்படுத்தியிருக்க, பெரும் சூழலில் சிக்கிய பரிசலாய் மனம் சிக்கித் தவித்தது.

"பெண்ணே! உனக்குள் ஏன் இவ்வளவு சோகங்கள்... அதில் ஒரு துளியையாவது துடைத்தெறிந்து விடும் வாய்ப்பை எனக்குத் தருவாயா? வாழ்க்கையின் மொத்த அர்த்தத்தையும் எனக்கு உணரச் செய்தவளே! உன்னை மடியில் வைத்து கண்ணின் இமைபோல் தாங்க ஏங்கித் தவிக்கிறேன் நான்!

'கடவுளே... அந்த தேவதையின் சந்தோஷச் சிறகுகளை ஏன் வெட்டி எறிந்தாய்?

ஒட்டை உடைத்து வெளிவரும்போதே பல சோதனைகளை சந்திக்கின்ற சிறு பறவைக் குஞ்சாய், வாழ்க்கைப் பாதையில் முதல் அடியெடுத்து வைக்கின்றபோதே, அவளுக்குத்தான் எத்தனை போராட்டங்கள்!

நினைக்க நினைக்க... இதயத்தை இறுகப் பிசைவதுபோல் ஒரு வலி எழுந்தது.

பெரும் வேதனையும் அலைப்புறுதலுமாய் அவன் உறங்க ஆரம்பித்தபோது, நடுநிசியைக் கடந்திருந்தது. பொழுது!

21

மறுநாள் காலையில் சிற்பி எழுந்திரிக்கத் தாமதமானதால், மதியை சமையல்காரம்மாவிடம் விட்டுவிட்டு, சாரதாவே பிரதாவின் வீட்டிற்குச் சென்றார்.

பிரதாவும், அட்வகேட் அலுவலகத்திற்கு கிளம்பிப் போயிருந்தாள்.

"வாங்க சாரதா! என்ன... காலையிலேயே வந்திருக்கீங்க... ஆச்சர்யமா இருக்கு!"

உற்சாகத்துடன் வரவேற்றார் ரங்கம்.

"நான் உங்க கூடக் கொஞ்சம் பேசணும்... நம்ம பிரதாவைப் பத்தி!" தயக்கத்துடன் கூறியபடி சோபாவில் அமர்ந்தார் சாரதா!

சட்டென்று ரங்கத்தின் முகத்தில் ஒருவித வேதனையும், எச்சரிக்கை உணர்வும் பரவின.

"என்ன விஷயம் சாரதா?" சிறிது தடுமாற்றத்துடன் வந்தது அவர் குரல்!

"என் பையன் சிற்பி, நம்ம பிரதாவை விரும்பறான் ரங்கம்! அது விஷயமா பேசலாமின்னு..."

அவர் முடிக்கும் முன்பே அவர் முகம் இருண்டு விட, கலங்கிய விழிகளுடன் வாயைப் பொத்தியபடி விம்ம ஆரம்பித்தார் ரங்கம்.

"ரங்கம்... சாரி.. உங்களோட துக்கத்தைக் கிளறிவிட நான் இங்கே வரலை... எங்களுக்கு எல்லா விபரமும் தெரியும்..."

அந்தக் கணமே வியப்பும் அழுகையுமாய் நிமிர்ந்தவர், "உங்களுக்கு எப்படி...?" கம்மிய குரலில் கேட்டார்.

"நேத்து சிற்பியே பிரதாகிட்டே பேசிட்டானாம்... அப்பதான்... விபரமே தெரிஞ்சுது!"

"தெரிஞ்சும் ஏன் சாரதா வந்தீங்க? அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை மறுபடியும் அமைச்சுக் குடுக்கணும்னு நாங்க ரெண்டு பேரும் படாத பாடு பட்டுட்டிருக்கோம்!" ஆனா அவ தான் எதுக்குமே ஒத்துக்க மாட்டேங்கறாளே..." கண்ணீருடன் வாய்விட்டுக் கதறினார்.

அவருடைய முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்த சாரதா, மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"எங்களுக்கு சம்மதம் ரங்கம்! பிரதாவோட பழைய வாழ்க்கையை புரட்டிப்பாக்கறப்போ, பாதிக்கப்பட்ட பூங்குழலிதான் என் நினைவுக்கு வரா!

"அவளைத்தான் எங்களாலே உயிரோட வாழ வைக்க முடியலை... பிரதாவையாவது எங்க வீட்டுப் பெண்ணாக்கி, சந்தோஷமா வாழ வைக்கணும்னு மனசு தவியா தவிக்குது...

"என்ன பண்றது? காயப்பட்டவங்களுக்கு தானே அதோட வலி தெரியும்.. பிரதா... அந்த ரணங்களையெல்லாம் அனுபவிச்சவ... அதான் பயப்படறா! மெதுவாப் பேசிப் பாருங்க... உங்களுக்கு சம்மதம்னா உடனே நல்ல நாள் குறிச்சிடலாம்!" இதமான குரலில் முடித்தார்.

உடனே அவருடைய கரங்களிரண்டையும் பற்றிக் கொண்ட ரங்கத்தின் விழிகளில் பெரும் நன்றியுணர்வும்... மிகுந்த நிறைவும் காணப்பட்டது.

பிறகு, அவரிடம் விடை பெற்று வீட்டிற்கு வந்தபோது, சிவந்த விழிகளும் கசங்கிய முகமுமாய், சோபாவில் அமர்ந்திருந்தான் சிற்பி.

"எங்கேம்மா போயிட்டீங்க... காலங்காத்தாலே?" சோர்வுடன் விசாரித்தான்.

ஆட்சியில் பங்கு கேட்ட கூட்டணிக் கட்சியிடம் 'தலைவர் என்ன சொன்னார்'?

வாஸ்துப்படி வெளியில் இருந்துதான் ஆதரவு தரணும்னு சொல்லிட்டார்!

-எம்.அசோக்ராஜா, திருச்சி.

''ஒண்ணுமில்லைப்பா... பக்கத்துலதான் நீ சாப்பிட்டியாடா...'' பரிவுடன் விசாரித்தார் சாரதா.

''இல்லைம்மா... பசிக்கலை!'' சிறு விரக்தியுடன் கூறியவனையே, கவலையுடன் அளவிட்டார்.

பிறகு ஒரு பெருமூச்சுடன், ''சரி! இனிமே தான் சாப்பிட்டு நீ ரொம்பத் தெம்பா இருக்கணும்... இந்த விஷயத்துல ரங்கத்துக்கு சம்மதம்! பிரதாவை நீதான் எப்படியாவது மாத்தணும்! முயற்சி செஞ்சா நம்மால முடியாதது எதுவுமில்லை! அவளை எப்படியாவது மாத்து சிற்பி... உன்னோட காதலை அவளுக்குப் புரியவை!'' ஆணித்தரமான குரலில் முடித்தார்.

அவனுக்குள், பெரும் தெம்பும், தைரியமும் கைவசப்பட்டன. எப்படியாவது, அவளை மாற்றியாக வேண்டும் என்ற வெறியும், உறுதியும் வந்தன.

22

அன்று மாலையிலும், மதியைத் தூக்கிச் செல்ல பிரதா வரவில்லை!

கோர்ட்டிலிருந்து நேராக கடைக்குதான் சென்றிருப்பாள் என்ற யூகத்துடன், மதியைத் தூக்கியபடி கடைக்குக் கிளம்பினான் அவன்.

அவன் கடைக்குள் நுழைவதைக் கண்டதுமே ஓடி வந்து வரவேற்ற லட்சுமணனின் விழிகளிலேயே, அவருக்கும் விபரம் தெரியுமென்பதை உணர்ந்து கொண்டான் அவன்.

உடனே அவனை உள்ளே அழைத்துச் சென்றவர், ''பிரதா! நம்ம சிற்பி தம்பி வந்திருக்காரு பாரு... கூடவே உன் பெட் மதியும் வந்திருக்கா! இவங்களை கொஞ்சம் கவனி!'' இயல்பாக அவளிடம் இருவரையும் ஒப்படைத்துவிட்டுச் சென்றார்.

அவரிடம் மறுக்கவும் முடியாமல், அவனை வரவேற்கவும் மனமின்றி இறுகி நின்றிருந்தவளிடம், உற்சாகத்துடன் தாவினாள் மதி.

இயல்பாகப் பொங்கிய பிரியத்துடன் அவளைத் தூக்கி கொண்டாலும், அவனிடமிருந்து விலக எண்ணி, சாக்லேட் இருக்குமிடத்திற்கு சென்றாள்.

ஒரு சாக்லெட்டைப் பிரித்து அவள் வாயில் சிறிதளவு ஊட்டி விட்டு, குனிந்து குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''மதிக்கு கிடைத்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்காதா? எத்தனை நாளா ஏங்கிட்டிருக்கேன் தெரியுமா?''

அவனுடைய குரல் மிக அருகில் ஒலிக்க விதிர்ப்புடன் நிமிர்ந்த போது, அவளையே குறுகுறுப்புடன் விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

சட்டென்று மூச்சடைக்க அவசரமாக அங்கிருந்து அகன்றபோது, யாரோ துப்பட்டாவைப் பற்றி இழுப்பது போன்ற உணர்வில் பதறிப் போனவளாய் நின்றாள்.

சிற்பியின் சீண்டலாக இருக்குமோவென்ற பயத்துடன், ''சிற்பி!



சித்தி வருவாளே என்ற உறுத்தலுடன் அரை மனதாக அவள் தலையசைக்க, ''என்னாச்சு பிரதா... ரொம்ப ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கே? சண்டே அன்னிக்கு நீ ரெகுலரா அங்கே தானே போவே?'' யோசனையுடன் கேட்டார் அவர்.

''ம்... ஆமாம்... நான் வரேன்...'' இழுத்தபடி முடித்தவளைக் கண்டபோது, அவருக்குள் பலத்த யோசனையும் கவலையும் பரவின.

அந்த ஞாயிறன்று மாலையில், அவள் கிளம்பிக் கொண்டிருக்கும் போதே லட்சுமணன் அவளை அழைத்தார்.

''பிரதா நீ பாலாவோட பவுன்டேஷனுக்கு தானே போறே? சாரதாம்மா இப்பதான் போன் பண்ணினாங்க! சித்தியும் அங்கே தான் போறாராமே... உன்னையும் அழைச்சிட்டு போவாருன்னாங்க! ரெடியா இரு'' என்றார்.

''அப்பா! நான் என்னோட வண்டியிலப் போயிடுவேன்'' பதைப்புடன் கூறினாள் அவள்.

''ஏம்மா! அந்தத் தம்பியும் அங்கே தான் போறாரு! நீ திரும்பி வரும்போது ராத்திரியாயிடும்... ஏன், தனியா அவ்வளவு தூரம் வரணும்? ஒரு துணையோட போனா எங்களுக்கும் நிம்மதியாயிருக்கும்! நான் சொல்றதைக் கேளு''

ஒருவிதப் பிடிவாதத்துடன் அவர் முடிக்க, வேறு வழியின்றி அவனுக்காகக் காத்திருந்தாள்.

சில நிமிடங்களிலேயே அவன் வந்துவிட, காரில் ஏறிக் கிளம்பிய போது இன்று அவனிடம் முடிவாகப் பேசி விட வேண்டுமென்ற உறுதி வந்தது.

கார் அந்தத் தெருவைக் கடந்ததுமே, அவனிடம் திரும்பினாள். ''ஏன் இப்படி என்னைத் தொந்தரவு செய்றீங்க? நான் பாட்டுக்கு என் வண்டியிலப் போயிருப்பேன்... கள்'' என்று கூறினாள்.

மெதுவாகத் திரும்பியவன், ''நான் ஒன்னுமே செய்யலை... அம்மாதான் உங்கம்மாவுக்கு போன் பண்ணி முடிவெடுத்தாங்க'' அலட்சியமாக மொழிந்தான்.

''நான் எங்கே போனாலும், எல்லா இடத்துக்கும் உங்களாலே துணை

எங்க... எங்கவீட்டுலே காலிங் பெல் ரிப்பேர் ஆயிடுச்சுன்னு கூப்பிட்டோமே என் சார் வரவில்லை?

வந்தேனே...

வந்து மூணு தடவை காலிங் பெல்லை அழுத்தினேனே...

ஒருத்தருமே வரவில்லையே... அதான் போயிட்டேன்.

-ஆர்.ஜி. அம்பிகைராமன், நெல்லை.

வர முடியுமா? இன்னிக்கு ஒரு நாள்லே நான் ஒன்னும் காணாமப் போயிட மாட்டேன்... என்னை யாரும் தூக்கிட்டுப் போக மாட்டாங்க''

''ம்... என்ன கேட்டே...? எல்லா இடத்துக்கும் துணை வர முடியுமான்னா? ஹ்ம்ம்... வாழ்க்கை முழுமைக்கும் துணையா வரேன்னவன் நான்... நீ தான் ஒத்துக்கலை...! அதோட என்னை மீறி உன்னை யாராலயும் தூக்கிட்டுப் போக முடியாது... அதை முதல்லே புரிஞ்சிக்க!'' அவனும் நக்கலாகவே பதில் கொடுத்தான்.

''ம்க்கும்...'' என்றபடிக் கோபத்துடன் திரும்பி, வெளியில் பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

25

அதே நேரம் சிக்னல் விழுந்து விட, அவர்களருகில் வந்து நின்ற பைக்கின் பின்னால் அமர்ந்திருந்த பெண், பைக்கை ஓட்டிய தன் காதலனை இறுக அணைத்துக் காதோரம் முத்தமிட்டாள்.

சட்டென்று தேகமெங்கும் கூசிவிட... அவள் திரும்பியபோது, உணர்ச்சியின்றி அவளையே கூர்ந்திருந்தான் சித்தி.

''ம்... இந்த மாதிரி பாக்கியமெல்லாம் எனக்கு எங்கே கிடைக்கப் போவுது? இம் 'மூன்றதுக்கு முன்னாடிதான் என் காதலி எதிரிடறானே! அவன் குடுத்து வைச்சவன்... அனுபவிக்கிறான்...ம்!'' ஒரு போலிப் பெருமூச்சுடன், குறும்பு விழிகளில் கசியப் புன்னகைத்தான் அவன்.

அவளுக்கு தான் படபடப்பாகிப் போனது... ''ப்ளீஸ்... கொஞ்ச நேரம் சும்மா வரீங்களா? இல்லைன்னா இப்படியே இறங்கிப் போயிடுவேன்...'' மெல்லிய குரலில் மிரட்டினாள்.

''எங்கே கதவைத் திற... பார்ப்போம்! என் உத்தரவில்லாம அந்தக் கதவு திறக்காது தெரியுமா?''

''அதையும் பார்ப்போம்...'' என்றபடி அவள் தன் புறமிருந்த கதவைத் திறக்க முயல, அது மாட்டேன் என்று அழிச்சாட்டியம் செய்தது.

அப்போது தான், கன்ட்ரோல் ஸ்விட்ச் அவனிடமிருப்பது புரிந்தது. வெறுப்புடன், தான் எதிலோ மாட்டிக் கொண்ட உணர்வும் சேர, வேகமாகத் திரும்பிக் கொண்டாள் அவள்.

அப்போதும் அந்த ஜோடி இணை பிரியாமல் தழுவியிருக்க, விதிர்த்து போய் குனிந்த போது, அவன் குரல் காதோரம் சிலிர்ப்பாய் ஒலித்தது.

''என்ன... அவங்களைப் பாத்தாவது இந்த வயசுல எப்படி நடந்துக்கறதுன்னு கத்துக்கிட்டியா? முன்னாடியெல்லாம் இப்படி பப்ளிக்ல கொஞ்சறவங்களைப் பார்த்தா வெறுப்பா இருக்கும்... ஆனா இன்னிக்கு தான் ரொம்ப சந்தோஷமா இருக்கு'' குறும்புடன் கூறிவிட்டு, எதிரே சிக்னல் விழுந்ததால், காரை எடுத்தான் அவன்.

அடக்க முடியாத கோபத்துடன் ஒரு தடவை தப்பா முடிவெடுக்கறது... சறுக்கி விழுறது சகஜம் தான்..! ஆனா விழுந்தப்புறம் எழ முடியாம இருக்கறதுக்குப் பேர் கோழைத் தனம்... அதுவும் ஒரு விதமான தோல்விதான்!

''இப்போ, தொழில் ரீதியா உயிர்த்தெழுந்து ஒரு வாபரா செயல்பட்டிருக்கேன்னு நீ சொல்லலாம்..! ஆனா, என்னைப் பொறுத்த வரைக்கும் அது வெற்றி இடையாது... பழசை மறந்து நீ எப்போ எக்கான ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறியோ, அது தான் உன்னையா நீ ஜெயிச்சுக் காட்டினதுக்கு அடையாளம்!

''அவசரத்தில் தற்கொலை பண்ணி உயிரை விடற கோழையை விட, அந்த நிமிஷத்தை வென்று உயிர் வாழுறவன் தான் நிஜமான வீரன்... அதுக்குத்தான் நிறைய வல்லமை வேணும்! அந்த விஷயத்துல நீ ஒரு கோழைதான்!'' அவன் முடித்த கணமே பாலாவின் பவுண்டேஷனும் வந்து விட்டது.

இருவரும் இறங்கியபோது, ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் வரவேற்றனர் பாலாவும் வசந்தராவும்!

அவர்கள் உள்ளே சென்றதும், ''இன்னிக்கு நீங்க ரெண்டு பேரும் ஜோடியா வந்ததைப் பார்த்தா எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? லேட்டாக் அதர் மாதிரி இருந்தது...'' அவளுடைய காதருகில் கிசுகிசுப்பாய்க் கூறினார் வசந்தரா.

உடனே பிரதாவின் விழிகள் சிவந்து, சட்டென்று ஒரு இறுக்கம் தெரிந்தது.

பிறகு அனைவரும் உற்சாகத்துடன் அவர்களை வரவேற்று, தங்களின் நன்றியை கோரஸாய் ஒரு பாடலாய்ப்பாடி வெளிப்படுத்தினர்.

அந்த நிறுவனத்தின் செயல்பாடுகளையும், முயற்சிகளையும், சாதனைகளையும் ஒவ்வொன்றாக பாலா விவரிக்க, தினேஷ் வியப்புடன் கேட்டபடி வந்தான்.

இறுதியில் அவனும் வெகுவாக நெகிழ்ந்திருப்பது, அவன் பாலாவுடன் கை குலுக்கி வாழ்த்தியதிலிருந்தே தெரிந்தது.

''இட்ஸ் அமேஸிங்... இல்லை சிற்பி? இது சாதாரண விஷயமில்லை! இவ்வளவு பெரிய ஒரு விஷயத்தை நீங்க ஒரு லேடியா முயற்சி செஞ்சு, இத்தனை பேர் உதவியோட ஆர்கனைஸ் பண்றதை நினைச்சா... ரொம்பப் பெருமையா இருக்கு! தேங்க் காட்... இதுக்கு உதவற ஆப்பர்சுனிட்டியைக் குடுத்ததுக்கு...

''ஆனா, நாம இதுக்கு மிஸ் பிரதாவுக்கு தான் நன்றி சொல்லணும்... இல்லை சிற்பி?'' அவளிடம் திரும்பிக் கேட்டுவிட்டு, பிரதாவிடம் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தான் தினேஷ்.

பிறகு ஒவ்வொரு இடமாகச் சுற்றிப் பார்த்த போது, பிரமித்துப் போனது அவன் மனது.

''நாம எல்லாரும், நல்லா இருக்கும் போதே சில வேலைகளை செய்ய ரொம்ப யோசிக்கிறோம்...! இவங்க எல்லாரும், எவ்வளவு ஆக்டிவா எல்லா விஷயங்கள்லேயும் பயிற்சி எடுத்துக்கிறாங்க! ஆச்சரியமா இருக்கு...

''அதான், அப்பா இதுக்கு ஹெல்ப் பண்ணணும்னு நினைச்சிருக்காங்க... அம்மா கூட நேத்து இதான் சொன்னாங்க... அப்பாவோட விருப்பத்தை உடனே நிறைவேத்த சொன்னாங்க!''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான் தினேஷ்.

''ஆமாம் தினேஷ்! இங்கே உடல் ஊனமுற்றவங்க எல்லாரும், நம்மளை விட எல்லா விஷயங்களையும் கலகலப்பா கத்துக்கிறாங்க... புரிஞ்சிக்கிறாங்க! ஆனா, நல்லா இருக்கறவங்க, எவ்வளவுதான் வெளிப் பார்வைக்கு உற்சாகமாக காட்டிக்கிட்டாலும், மனசளவில ஊனமாத்தான் இருக்காங்க'' ஓரக் கண்ணால் பிரதாவையே கூர்ந்தபடி அவன் கூற, அவளுக்கு மட்டுமே, அந்த புதிர் செய்தி புரிவதாய் இருந்தது.

ஆனால், அந்த நிமிடம் இருவரையும் கவனித்த வசந்தராவிற்கும், அவர்கள் இருவருக்குமிடையே ஏதோ ஒரு பிரச்சனை இருப்பது வெளிச்சமாய் புலப்பட்டது.

''அவன் சொன்னதைக் கேட்ட உடனே இறுகிப் போன பிரதா, விறைப்புடன் வேறு புறம் திரும்பிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய விழிகளுக்குள் மூழ்கி, காதல் முத்தெடுக்க முயற்சித்துக் கொண்டிருந்த சிற்பியின் பயணம் பாதியிலேயே நின்றது.

26

விருந்து இனிதே முடிய, அனைவரும் கிளம்பினர். மறு வாரமே, அத்தனை புரொசிஜர்களையும் முடித்து அந்த இடத்தை பத்திரம் செய்து பெயர் மாற்றித் தருவதாக வாக்களித்து விட்டு, தினேஷ் விடைபெற்றான்.

அனைவருக்கும், சில பரிசுப் பொருட்களை அன்பளிப்பாய், நன்றி அறிவிப்பாய் வழங்கி அனுப்பி வைத்தார் பாலா.

காரில் திரும்பி வரும்போது, பிரதா எதுவுமே பேசாமல், இருக்கையில் பின் புறம் சாய்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில், அவனுடைய ஆழ்ந்த குரல் அவளை உலுக்கியது.

''ஏன்... என்னைப் பார்க்க கூட உனக்கு பிடிக்கலையா? அப்படி என்ன தப்பு செஞ்சேன் நான்? பார்க்க முடியாதபடி அவ்வளவு அருவருப்பாவா இருக்கேன்... ம்?'' சிறு சினத்துடன் வினவினான்.

சட்டென்று திறந்த இமைகளுடன் மனமும் பாரமாய் கனத்திருக்க, பதில் கூறாமல் விழிகளைத் தாழ்த்தினாள் அவள்.

''ஹூம்... பாறையோட மோதற மாதிரிதான் இதுவும் போலருக்கு... உன் மனசு ஐஸ் கட்டியா உறைஞ்சிருக்குன்னு நினைக்கிறேன்... ஆனா என்னோட நேசம் நெருப்பா சூழ்ந்து, உன்னை ஒரு நாள் உருக வைக்கும் பாரு!'' கூறிவிட்டு மிக வேகமாகக் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

அவளுக்குள்தான் சிறு நடுக்கமாய்... வீடு வந்த பிறகுதான் ஒழுங்காவே மூச்சு விட முடிந்தது!

உள்ளே சென்றதும், கதவைத் திறந்து வரவேற்றார் லட்சுமணன்.

''என்னம்மா? விருந்து நல்லா நடந்துதா? சிற்பி தம்பியோட தானே வந்தே?'' ஆவலுடன் கேட்டார்.

''ஆமாம்ப்பா... எனக்கு தலை வலிக்குது... நான் போய்ப்படுக்கிறேன்'' என்றபடி தன் அறைக்குள் போய் கதவை சாத்திக் கொண்டாள்.

உடனே முகம் கழுவி உடை மாற்றி தொப்பென்று படுக்கையில் சாய்ந்தாள். ஏனோ அழையா விருந்தாளியாய் சிற்பியின் நினைவுகள்!

சிற்பி, தன்னை மறந்து சில நேரங்களில் பற்கள் பளிச்சிட... தலையை சாய்த்து சிரிக்கும் போதும், அப்போது அவன் முகம் மாறிவிடும் அழகும், மறவாமல் கண் முன் வந்தன.

என்னவோ எனக்கு வீட்டுக்கா வந்ததோ... உன் புன்னகை?

அந்த ஆண்மகனின் கம்பீரத்திற்கும், வசீகரத்திற்கும், இயாக உள்ளத்திற்கும் தன்னையறியாமல் சரியத் தொடங்கி விட்டதோ இதயம்?

"நான் என்னில் உறைந்த நேசத்தை தேட ஆரம்பித்து விட்டேனா சிற்பி?" தன்னையே வெறுத்து அவள் விழிகளில் கண்ணீராய் அவித்த வேதனை நெஞ்சில் விழுந்து கோபத் தணலாய் மாறியது.

அனலில் இட்ட புழுவாய் துடிக்க ஆரம்பித்த நெஞ்சம், உணர்வுகளை மரக்கச் செய்ய, உறைபனி சிற்பமாய் உருமாறி, உயிர்த்திருந்தாள் அவள்.

அவளை அசைக்கத்துவங்கிய அவனுடைய வார்த்தைகள், வேதனைகளை புறம் தள்ளின.

மறுநாளே, எதிர்பாராத விதமாக வசந்தாவிடமிருந்து சிற்பிக்கு ஒரு அழைப்பு வந்தது.

"மிஸ்டர் சிற்பி! கொஞ்ச நாளாவே நான் பிரதாவை கவனிச்சிட்டு வரேன் அவ, ரொம்ப வித்தியாசமா டல்லா இருக்கா! நேத்து பாத்தப்ப தான் தெரிஞ்சுது! அதுக்குக் காரணம் நீங்கதான்னு தோணுது... ஆம் ஐ கரெக்ட்...? ஒரு வேளை தப்பா இருந்தா... பிளீஸ் நான் கேட்டதை மறந்துடுங்க! மெல்லிய குரலில் கேட்டார்.

சில நொடி மௌனத்திற்குப் பிறகு பேச ஆரம்பித்தவனின் குரல் இறுகியிருந்தது.

"நீங்க சொன்னது கரெக்ட் தான்! ஆனா, அவ டல்லா இருக்கறதா நீங்க சொல்றதை நான் நம்பலை... ஏன்னா அவளை நான் ஒரு பர்சன்ட் கூட பாதிக்கலைங்கிறதுதான் உண்மை!" அவன் குரலில், பெரும் விரக்தியும் சலிப்பும் விரவித் தெரிந்தன.

"இல்லை! மிஸ்டர் சிற்பி... நீங்க அவளை ஹன்ட்ரட் பர்சன்ட் பாதிச்சிருக்கீங்க... அதுதான் கரெக்ட்! அவளை ஏழு வருஷமா அறிஞ்சவ நான்... இந்த மாதிரி ரெஸ்ட்லெஸ்ஸா அவளை நான் பாத்ததில்லை... இதுதான் முதல் தடவை!

நீங்க அவளை முழுசா பாதிச்சிருக்கீங்கன்றது என் கணிப்பு! நான் உங்களோடக் கொஞ்சம் பர்சனலாப் பேசணும்! இன்னும் ஒரு மணி நேரத்துல என் ஆபீஸுக்கு வரமுடியுமா?" ஆர்வத்துடன் கேட்டார்.

"ம்... வரேன்! ஆபீஸில் பிரதா இல்லையே?"

"அவ இங்கே இருந்தா, நான் உங்களை வரச் சொல்லியிருக்க மாட்டேனே!

பிளீஸ்... வாங்க" அழைத்துவிட்டு லைனை டிஸ்கனெக்ட் செய்தார்.

அதே நேரத்தில், வீட்டிலிருந்த பிரதாவிற்கும் அவன் நினைவுகளே ஆக்கிரமித்திருந்தன.

"ஏன் அவனை நான் புறக்கணிக்கறேன்? பழைய காயங்கள், ரணங்களினால் வந்த பயமா? இல்லை... புது வாழ்வை ஏற்க இதயம் பயப்படுகிறதா?" அவளுக்கே விளங்கவில்லை.

ஆனால் சம்மட்டி அடியாய் இதயத்தில் காம்பேறியிருந்த வடுக்கள் முழுமையாக ஆறவில்லை என்பதை மட்டும் உணர முடிந்தது... அந்த அனுபவங்கள் தந்த வலிகளும் வேதனைகளும் எதிர்காலத்தை பயந்துடனே எதிர்நோக்க வைப்பதும் புரிந்தது!

அன்று, அவன் கூறிய வார்த்தைகள் முகத்தில் அறைந்து, மனதில் தைத்திருந்தன.

சிற்பி, வசந்தாவின் அலுவலகத்திற்கு சென்றபோது, மணி ரெண்டாகி விட்டது.

அவனை வரவேற்று அமர வைத்தவர், நேராகவே விஷயத்திற்கு வந்தார்.

"மிஸ்டர் சிற்பி! பிரதாகிட்டே நீங்க பேசினதை எல்லாம், மதிவமே அவங்க அம்மாகிட்டே பேசித் தெரிஞ்சிக்கிட்டேன்! ஆனா எல்லா விபரமும் சொன்னாளா அவ?" மெதுவாய் கேட்டார்.

"ம்... அப்படித்தான் நான் நினைக்கிறேன்... அவளுக்குக் கல்யாணம் ஆனது... கணவன்ற பேரில இருந்த அந்தக் காமக் கொடூரனாலயும், அவனோட தவறான தொடர்புகளாலயும் பாதிக்கப்பட்டது... அப்புறம் கருவுற்றது... கடைசியில அவங்க தன்னை வெளிநாட்டுக்கு விற்கப் போறது தெரிஞ்சதும் தப்பிச்சி காரிலிருந்து உருண்டு வந்தது... தன் கருவைத் தொலைச்சது... அவனுக்கு தண்டனை வாங்கித் தந்தது எல்லாமே சொன்னா!" யோசனையுடன் முடித்தான் அவன்.

சட்டென்று, அவருடைய விழிகளில் பெரும் வேதனை படர்ந்தது...

"நான் நினைச்சது உண்மைதான்... அதுக்கு மேலயும் ஒரு காரணம் இருக்கு... அதை அவளால சொல்ல முடியாது... அவ மறுக்கறதுக்கு மூல காரணமே அதுதான்! ஆனா அதை உங்களால தாங்கிக்க முடியுமான்னு தான் எனக்கு தெரியலை" அவர் குரல் பெரிதும் கம்மியிருந்தது.

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க... நான் ஏத்துப்பேன்! இதுக்கு மேல என்ன வேதனையை அவ அனுபவிச்சிருக்க முடியும்?" தவிப்புடன் கேட்டான் அவன்.

"ம்... அனுபவிச்சிட்டிருக்கா! அன்னிக்கு காரில இருந்து கீழே விழுந்ததிலே அவளோட கரு மட்டும் கலையலை! கருப்பையிலே பலமா அடி

என்னங்க நீங்க மாப்பிள்ளை வீடா? பொண்ணு வீடா?
நானா? நான் மாப்பிள்ளை போட்சின்னு விடுங்க!

– ஆர்ஜிகலியாணி,

பட்டதிலே, இன்னொரு குழந்தையை தாங்கற சக்தி அதுக்கு இல்லை... இனி, இவளுக்கு தாயாகற பாக்கியம் கிடையாது... தாய்மை மறுக்கப்பட்ட வேதனை ரொம்பக் கொடுமையானது இல்லையா...? அதுதான் அவ உங்களை மறுக்கக் காரணமோ! இப்ப சொல்லுங்க மிஸ்டர் சித்பி... அவளை இந்த நிலையிலயும் நீங்க ஏத்துப்பீங்களா?'' கர்மமயுடன் கேட்டார் அவர்.

திடீரென்று கண் முன்னே பனைமரம உயரத்திற்கு உயர்ந்த அலைகள், தன்னை சுனாமியாய் சுருட்டிய உணர்வில் தவித்துப் போனான் அவன்.

சில நொடிகள்தான் அப்படி உறைந்திருந்தான்... மெல்ல மெல்ல ஒரு விறுத்தெளிவுடன் அவன் நிமிர, வசந்தரா அவனுடைய பதிலுக்காகக் காத்திருந்தார்.

''வசந்தரா மேடம்!.. எனக்கு சம்மதம்...! இப்பவும் நான் பிரதாவை உயிரா விரும்பறேன்... அவ சுமக்கப் போற என் வாரிசை எதிர்பார்த்து அவளை நான் மறுத்தேன்னா, அப்புறம் என் நேசத்துக்கே அர்த்தமில்லாமப் போயிடும்! எனக்கும் ஒரு குழந்தை வேணும் தான்... அது மதியாவே இருக்கட்டுமே...! அவளுக்கும் மதியை ரொம்பப் பிடிக்கும்... நான் பேசறேன்... நிச்சயமா அவ இதுக்கு ஒத்துப்பா!''

அவனுடைய வார்த்தைகள், இருண்டிருந்த வசந்தராவின் மனதில் நம்பிக்கை விளக்கை ஏற்ற, உடல் சிலிர்த்து போனது.

இப்படி ஒரு அற்புதமான மனிதனுடன், பிரதா நிச்சயமாக இணைய வேண்டுமென்ற வேட்கையும், வேகமும் வந்தன.

''ரொம்ப தேங்க்ஸ் சித்பி சார்! கடவுளை சில சமயங்கள்லே நாம தேடிக்கூட பார்க்க முடியும் போலிருக்கு!''

கண்கள் நிறைந்திருக்க, மெல்லக் கை கூப்பி வணங்கினார்.

''சரி... இதெல்லாம் வேண்டாமே... நானும் சாதாரண மனுஷன் தான் மேடம்...! என் பிரதாவை எதுக்காகவும் விட்டுத் தர முடியுமா, சுயநலமா யோசிச்சு முடிவெடுத்த ஒரு உண்மையான காதலன்...! அவ்வளவுதான்''

சிறு முறுவலுடன் கூறிவிட்டு அவன் விடைபெற்ற போது, அவனுடைய மனித நேயத்தின் விசுவரூபம் தெரிந்தது!

மொழியின் வடிவம், கவிதையாவதைப் போல்... காதலின் மொழி தியாகமோவென்றும் தோன்றியது.

27

மறுநாளே, இதுபற்றி பிரதாவிடம் பக்குவமாக பேசி ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டும் என்ற முடிவுடன் அலுவலகத்திலிருந்து கிளம்பினார் வசந்தரா.

அன்றிரவு, தனக்குள் மூழ்கிய யோசனையுடன் பிரதாவை எண்ணியபடி உறங்காது விழித்திருந்தான் சித்பி.

அதே நேரம் ஹாலில் இருந்த போன் ஒலிக்க ஆரம்பிக்க, திரும்பி மணி பார்த்த போது, ஒன்று என்றது சுவர்க் கடிகாரம்!

இந்த நேரத்தில் யாராக இருக்குமென்ற பதட்டத்துடன் எழுந்து போய் எடுத்த போது, ரங்கம்தான் பதட்டத்துடன் பேசினார்.

''தம்பி! இங்கே அங்கிளுக்கு நெஞ்சு வலிக்குதுன்றாரு! ஒரேடியா வேர்த்துக் கொட்டுது... டிரைவருக்கு போன் இல்லை... கொஞ்சம் கார் எடுத்துட்டு...''

அவர் முடிக்கும் முன்பே, ''நீங்க அவரை தயார் பண்ணுங்க... நான் உடனே வர்றேன்'' என்று வைத்தான்.

அப்போது சப்தம் கேட்டு வெளியே வந்த சாரதா, பதட்டத்துடன் என்னவென்று விசாரிக்க, உடை மாற்றியபடி அவசரமாக விபரம் கூறிவிட்டு ஓடினான் அவன்.

காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றபோது, பிரதாவும் எழுந்திருந்தாள்.

ரங்கம் அழுது கொண்டிருக்க, சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள் அவள்.

உடனே லட்சுமணனைக் கைத்தாங்கலாகப் பிடித்து காரில் ஏற்றி, அவர்களும் ஏறியதும் வேகமாகப் பறந்தான்.

அருகிலிருந்த பெரிய மருத்துவமனையில் அனுமதித்தபோது, உடனே அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ''ஹார்ட் அட்டாக்'' என்றனர்.

அவரை ஐசியூவில் அனுமதித்து - அவசரமாக சிகிச்சையை ஆரம்பித்தனர்.

விபரம் தெரிந்து மயங்கி விழுந்த ரங்கத்தைத் தேற்றி சமாதானப்படுத்திக் கொண்டிருந்த பிரதாவை பார்த்தான், பரிதாபமாக இருந்தது.

உடனே ரங்கத்திற்கு மறுபக்கமிருந்த இருக்கையில் அமர்ந்தவன், ''கவலைப்படாதீங்க ஆன்ட்டி! சரியான நேரத்துக்கு அழைச்சிட்டு வந்ததாலே ஒண்ணும் பயமில்லைன்னு டாக்டர் சொன்னாங்க... மைல்ட் அட்டாக்தானாம்! கவலைப்படாதீங்க.. அங்கிளுக்கு சரியாயிடும்...''

பொறுமையாக ஆறுதல் கூறியவனையே நோக்கியவளுக்குள், மெலிதாய் ஒரு சலனம்!

இவன் மிகவும் நல்லவன்... இவன் வார்த்தைகள் மந்திரச் சொல்லாய்... தன் தந்தை குணமாகி விடுவாரென்று கோடி பலம் தருகின்றதே!

இவனை நம்பி வாழ்க்கையை சர்வ நிச்சயமாக ஒப்படைக்கலாம்... என்னைப் பூப் போல் பாதுகாத்து உள்ளங்கையில் வைத்துத் தாங்குவான்.

ஆனால், என் ரகசியங்களையும் ரணங்களையும் முழுதாய் அவனுக்கு நான் தெரிவிக்கவில்லையே? இதுவரை வெளிப்படாத பெரிய ஒரு உண்மை எனக்குள் ஊமைக் காயமாய் ஒளிந்திருக்கிறதே...? அதை சொல்லி அவன் என்னை மறுத்து விட்டால்.... வேண்டாம்... இந்த சிறு இனிமை சுகத்துடனே இருந்து விடுகிறேன்...

பெரும் சஞ்சலத்துடன் அவனையே இமைக்காது நோக்கியிருந்தவளைப் பார்த்தவனுக்குள், பெரும் வித்தியாசம் தெரிந்தது. புதிர் செறிவாய் பல உணர்வுகளை அந்த அழகு விழிகள் வெளிப்படுத்தின.

மறுநாளே, லட்சுமணன் ஐசியூவிலிருந்து அறைக்கு மாற்றப்பட, ரங்கமும் பிரதாவும் சிறிது தெளிந்து இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தனர்.

வசந்தாவும், காலையிலேயே விமானமிதந்து வந்துவிட்டார்.
அன்று மதியம், வேற்று மனிதர் யாருமில்லாத ஒரு நேரத்தில், லட்சுமணன் பிரதாவிடம் கோரிக்கை வைத்தார்.

தன் மகளைத் தன்னருகில் சைகை செய்து அழைத்தவர், ''பிரதா! நேத்து நைட் தான், வாழ்க்கையில முதன்முதலா எனக்கு ஒரு பயமே வந்தது... நெஞ்சுல வலியில துடிச்சி ஐசியூவில தனியா இருந்தப்பதான், உன்னை அநாதையா தனிமையில தவிக்க விட்டுட்டுப் போயிடுவேனோன்னு தவிச்சுப் போயிட்டேன்!

''எனக்கு எல்லாம் தெரியும்! சித்தி தம்பியும் அவங்க அம்மாவும், எங்க ரெண்டு பேர் கிட்டேயும் பேசினாங்க... உனக்காக.... இல்லை... எனக்காக ஒத்துக்கடா!'' வேல்முருக வாங்க இறைஞ்சினார்.

அதற்குள் ரங்கம் பதறிப்போய் அழ ஆரம்பிக்க, ''அப்பா! ப்ளீஸ்... நீங்க உணர்ச்சி வசப்படக் கூடாது... டென்ஷனாகக் கூடாதுன்னு டாக்டர் சொன்னாங்க! நாம வீட்டுக்குப் போனப்புறம் இதைப்பத்திப் பேசலாம்'' அவரை சமாதானப்படுத்தினாள் பிரதா.

''இல்லை... எனக்கு உடனே முடிவு தெரிஞ்சாகணும்...! இளமைங்கிறது ஒரு எரிமலை மாதிரிடா! உள்ளேயே அமைதியா பொங்கிட்டிருக்கும்! எல்லாராலயும் எல்லா நேரத்திலயும் தங்களைக் கட்டுப்படுத்திக்க முடியாது! திடீர்னு ஒரு நாள் அது தாங்க முடியாம பொங்கி வெடிக்கும்... அப்ப சேதங்கள் நிறைய ஆகும்... புரிஞ்சிக்கடா! நான் இருக்கும் போதே, உனக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சித் தந்துடணும்... இல்லைன்னா இந்த உடம்பு வேகவே வேகாது!''

கலங்கிய விழிகளுடன் அவர் குமுற, அவளால் தாங்கவே முடியாது போயிற்று.

''அப்பா... உங்களுக்கு சரியாகட்டும்... அப்புறமா பேசி முடிவு செய்யலாம்!

இப்படி எல்லாம் தயவு செஞ்சு இனிமேப் பேசாதீங்க!'' அவளுடைய விழிகளும் நீரை சுமந்திருக்க, கன்னங்கள் நனைந்தன.

''அப்போ... உனக்கு சம்மதம்தானே?'' கண்கள் மின்ன அவர் கேட்டபோது, சாவின் விளிம்பிற்கு சென்று மீண்டவரிடம், ஏனோ மறுக்க முடியவில்லை.

''ம் சரிப்பா!'' என்றாள், நெஞ்சுக்குள் பெரும் சஞ்சலத்துடன்!

வாழ்க்கையையே தொலைத்து விட்டதாக எண்ணியிருந்த நேரத்தில்... மூடியிருந்த இதயக்கூட்டுக்குள் அவன் நினைவுகள் கதகதப்பாய் படம் போடப்பட்டிருந்தன.

28

மறுநாள் மாலையில் அவரைப் பார்க்க வந்த சித்தியிடம், இதைப் பற்றி உடனே கூறிவிட்டார் அவர்.

அவன் உள்ளே வந்தவுடனே மெதுவாக எழுந்து அமர்ந்தவர், ''கை குடுங்க மாப்பிள்ளை... என் பொண்ணு பிரதா சம்மதிச்சிட்டா! இனிமே என்ன? எம

...செய்ய முடியாது!'' உற்சாகத்துடன் அவளுடைய கையைப் பற்றிக் குலுக்கினார்.

இதை எதிர்பாராத பிரதாவோ, அதிர்ச்சியில் பனிச்சிலையாய் உறைந்திருந்தாள்.

அதே நேரத்தில் உள்ளே நுழைந்த வசந்தாவிற்குள் இனம் புரியாத உணர்வுகள் ஆக்கிரமிக்க, நேராக அவளிடம் வந்து அணைத்துக் கொண்டாள்.

''கங்கிராட்ஸ் பிரதா! நான் சொன்னவேனே இல்லை... பிரதா நிச்சயமா மாறுவான்னு... ஆல் தி பெஸ்ட் சித்தி! அவளை வெளியில அழைச்சிட்டுப் போங்க... உங்க ரெண்டு பேருக்குள்ளே பேச எவ்வளவோ இருக்கும்! நான் இங்கே பாத்துக்கறேன்!'' வாழ்த்தி அனுப்பி வைத்தாள்.

லட்சுமணனுக்கு எதிராக மறுக்கவும் முடியாமல், இவன் முடிவை ஏற்கவும் முடியாமல் அவனுடன் வெளியேறியவள், காரில் ஏறியதுமே பொங்கி விட்டாள்.

''ஒரு நிமிஷம் மிஸ்டர் சித்தீர்! என்னைப் பத்தி முழுசாத் தெரியாம ரொம்ப சந்தோஷப்படாதீங்க... நீங்க அறியாத ரகசியம் ஒண்ணு முள்ளா எனக்குள்ளே உறுத்திட்டு இருக்கு! அதைக் கேட்டப்புறம் நிச்சயமா இதுக்கு ஏன் ஒத்துக்கிட்டோம்னு வருத்தப்படுவீங்க!'' பரிதவிப்புடன் மூச்சு வாங்க நிறுத்தினாள்.

உடனே மௌனச் சிரிப்பில் குலுங்கியவன், ''ம்... அது என்னன்னு நான் கொஞ்சம் கெஸ் பண்ணட்டுமா?'' குறும்புடன் கேட்டான்.

''நோ... உங்களாலே முடியாது!'' வீராப்பும், வெறுமையாக வந்தது அவள் குரல்!

''முடியும்! அந்த ஆக்சிடெண்ட்டுல உன்னோட கரு மட்டும் கலையலை! உன் தாய்மைக் கனவுகளும் காலம் நீராக் கலைஞ்சிடுச்சி... அது தானே?''

அவன் மென்மையாகக் கேட்டதுமே, இரு விழிகளுமே தெறித்து விழுந்து விடும் போல் விழித்தவள், உடனே முகத்தைப் பொத்தி கழிவிரக்கத்தில் அழ ஆரம்பித்தாள்.

அதற்கு மேல், ஒரு கணம் கூட அவனால் தாங்க முடியவில்லை.

அப்படியே, ஒரு குழந்தை போல் அவளை அணைத்து மார்போடு

''சினிமா நடிகைக்கும், டி.வி.நடிகைக்கும் என்ன வித்தியாசம்...?''
''சினிமா நடிகை தயாரிப்பாளர்களை அழவைப்பா... டி.வி.நடிகை பார்க்கிறவங்களை அழ வைப்பா...!''.
சைதை லலிதா, சென்னை.

இறுகச் சேர்த்து சமாதானப்படுத்தியவனுக்குள் பெரும் தவிப்பு!
சிறுத்தையின் துரத்தலுக்கு அஞ்சி, புகலிடம் தேடி ஓடித் தப்பித்த மானின் படபடப்பு, அவனிடம்!
தன்னுடைய எதிர்கால வாழ்க்கையையே, இரு கையில் ஏந்திய உணர்வு!
வெகு நேரம் அவளை வருடி ஆறுதல்படுத்தியவன், அவள் விசும்பல்கள் குறைந்து விலகியதும், மென் குரலில் பேச ஆரம்பித்தான்.
''அழக்கூடாது பிரதா! எனக்கு, எப்பவும் நான் பார்த்த அந்த கம்பீர மான தைரியமான ஜான்சி ராணியைத் தான் பிடிக்கும்!
''எவ்வளவோ சோதனைகளைகடந்து வந்திருந்தாலும் ஒரு வித நிமிர் வோட இந்த உலகத்துல தலை நிமிர்ந்து நடமாடி, எல்லாருக்கும் மனித நேயத்தோட உதவின அந்த கருணை தேவதை தான் எனக்கு வேணும்! இந்த அழுமூஞ்சி எனக்கு வேண்டாம்... அந்தப் பழைய பிரதா எனக்குக் கிடைப்பாளா?''
அவனுடைய சிவந்திருந்த நாசியில், செல்லமாய் கண்டியபடி கேட்டான்.
சிவந்த விழிகளை அவன் மீது பதித்தவள், ''நிஜமாத்தான் ஒத்துக்கிட்டீங்களா?''
உங்களோட எதிர்காலக் கனவுகளைக் கலைக்க நான் விரும்பலை... அதனால் தான் இதுக்கு... இவ்வளவு தீவிரமா நான் மறுத்தேன்!
''இவ்வளவு தெரிஞ்சும் என்னை ஏத்துக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது?'' கலக்கத்துடன் மெதுவாகக் கேட்டாள்.
''ம்... இப்படி அழுகாச்சி காவியமாக் கேட்டா நான் எப்படி பதில் சொல்றது? எல்லாம் தெரிஞ்சப்புறம் தான், உன்மேல என்னோட நேசமே இன்னும் அதிகமாச்சுன்ற நிஜத்தை சொல்லவா? என்னோட வாரிசுக் கனவுகளை நீ கலைச்சேன்னு எப்படி சொல்றே?
''நம்ம கல்யாணம் முடிஞ்சு ஒரு ஆக்சிடெண்ட்டுல எனக்கு இப்படி ஆகியிருந்தா... என்ன செய்வே... என்னை விட்டுட்டுப் போயிடுவியா? இல்லை தானே? அது மாதிரி தான் இதுவும்!
''எப்போ உன்னை நான் விரும்ப ஆரம்பிச்சேனோ, அன்னிக்கே மன

''சார்- பரீட்சை பேப்பரில் அனாவசியமாகக் கிறுக்கக் கூடாதுன்னு சொன்னீங்களே சார்?''
'அதுக்காக ஒண்ணுமே எழுதாமல் 'சும்மா' பேப்பரையே திருப்பித் தந்திரோ?'
—எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

சளவில் நீ என் மனைவியாகிவிட்டே! உனக்கு ஒரு துன்பம்னா அது என்னையும் பாதிக்கும் தானே?
''அதோட, நமக்கு தான் மதி இருக்காளே... அவளை நம்ம குழந்தையாய் பார்த்துப்போம்... வேணும்னா மீனாவும் அடாப்ட் பண்ணிக்கலாம்...! ஒரு ஆண் குழந்தையையும் அநாதை ஆசிரமத்திலிருந்து தத்தெடுத்துக்கலாம்! நமக்குப் பிறந்தா தானா? பூங்குழலியோட இறப்பும் இதுவும், கடவுளோட தீர்ப்பாத்தான் எனக்குப் படுது! ஏன் உனக்கு இதிலே சம்மதமில்லையா?'' மகிழ்ச்சியாய் ஒலித்தது அவன் குரல்!
''நீங்க... வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கலாமே! ஏற்கனவே கல்யாணம் முடிஞ்சு வாழ்க்கையில ரொம்பக் காயப்பட்டுப் போன என்னை ஏன் செலக்ட் பண்ணீங்க? இன்னும் அழகா, நல்ல பொண்ணாப் பார்த்துக்கலாமே?'' முழுவதும் நம்ப முடியாமல் கேட்டாள்.
''ம்... இந்த சென்னையிலே இருக்கற எத்தனையோ லட்சம் பெண்கள்லே என் இதயத்தில பதிஞ்ச முதல் பொண்ணு நீ தான் என்னோட உணர்வுகள்... உனக்காகவே இவ தான்னு உன்னைத்தான் கட்டிக் காட்டுச்சு!''
இயல்பாகக் கைகளை விரித்தபடி, விழிகள் குறுகுறுக்க முடித்தான் அவன்.

29

இவன்தான் எனக்காக எவ்வளவு யோசித்திருக்கிறான்? தன்னுடைய எதிர்கால எதிர்ப்புகளை எல்லாம் அடக்கி, என் மகிழ்ச்சி ஒன்றே முக்கியமாய் எப்படித் திட்டமிட்டிருக்கிறான்! எவரும் செய்யக் கூடத் துணியாத பெரும் தியாகத்தை எனக்காக எவ்வளவு சுலபமாக செய்யத் துணிந்திருக்கிறான்?
என்னுடைய கடந்த காலத்தை மறந்து, அதன் விளைவையும் ஒதுக்கி, இவ்வளவு பெருந்தன்மையுடன் என்னை நேசிக்கின்ற இவனுக்கு என்னால் என்ன தர முடியும்'' என்னைத் தவிர!
வாழ்நாள் முழுவதும் இவன் மனம் கோணாமல், காயப்படாமல், ஒரு குழந்தையைப் போல், பூவாய் ஏந்துவதைத் தவிர!
நெற்றியில் விசுவரூபம் வேகமாய் முகத்திலறைய, நிமிர்ந்தாள் அவள்.
''ரிபி! எனக்கும் சம்மதம்... ஐ லவ் யூ'' கூறிவிட்டு வேகமாக அவன் மார்பில் தஞ்சமடைந்து இறுக அணைத்துக் கொண்டாள்.
தனக்கென்று... தன்னை உயிராய் நேசிக்கின்ற ஒருவன் இருப்பதை அறிந்தவுடனே, இதயம் சிலிர்த்துப் போய் பெரும் பரவசத்தையும், இனிமையையும் கைவசப்படுத்துவதாய்!
அந்த நிமிடம், அவனுடைய உலகமே வெளிச்சமானாற் போல் ஒரு உணர்வு!
''ஏய்! இப்ப என்ன சொன்னே... திரும்ப சொல்லு!'' நம்ப முடியாத கனவொன்று நிஜமாய் கைவசப்பட்ட தவிப்புடன் அவளைப் பற்றி உலுக்கினான்.

''ஊஹூ'ம்... திரும்ப சொல்ல முடியாது... வேணும்னா புரியவைக் கவா?'' குறும்புடன் கேட்டுவிட்டு, நாணத்துடன் விழிகளைத் தழைத் துக் கொண்டாள் அவள்.

''ம்... புரிய வை பார்ப்போம்!'' அவன் முடிப்பதற்குள், அவளுடைய இதழ்கள் அவனுடைய கன்னத்திற்குள் செல்லமாய்ப் புதைத்தன.

ஆயிரம் வார்த்தைகளை விட, அந்த சிறு செயல் பெரும் உன்மத்தம் தருவதாய்!

கண்களில் மையலும் நெஞ்சம் நிறையக் காதலுமாய் அவன் அவளு டைய விழிகளுக்குள் ஊடுருவ, அவளுடைய இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

மறு நிமிடமே, வேகமாக இழுத்து அணைத்த அவனுடைய கரங்க ளும் உதடுகளும் எல்லை மீறத் தொடங்கின.

திடீரென்று அருகில் ஒலித்த மற்றொரு காரின் ரிவர்ஸ் ஹாரன் சத்தத் தில் கலைந்து, சட்டென்று மார்பில் கை வைத்து சித்தியைத் தள்ளிவிட் டாள் பிரதா.

அவள் தள்ளிய வேகத்தில் பின்னால் சாய்ந்து சமாளித்தவன், ''ஓ காட்... பார்க்கறதுக்கு புள்ளிமான் மாதிரி இருந்தாலும் வேகத்துல சிறுத்தை புலிதான்! ம்... முதலிரவன்னிக்கு, நான் ஒரு கவசம் மாட்டிக் கிட்டு உன்னைப் பாதுகாப்போட தான் நெருங்கணும்னு நினைக்கி றேன்!''

அவன் வார்த்தைகளில் குறும்பு கசிந்தோட வெட்கத்து டன் முகம் மூடினாள் அவள்.

மெல்லிய குரலில், ஒரு வித ரசனையுடன் மெதுவாக அந்தப் பாடல் வரிகளை முணுமுணுத் தான் அவன்.

''வானவில்லின் துண் டொன்று மண்ணில் வந்து...

யாருக்கும் சொல்லாமல் பெண்ணானதோ!

இன்று அவளைப் பார்த்த போது... ஒரு இனிய விடியலில் வந்த வானவில்லாய்... அவனு டைய வாழ்வை விடியச் செய்த தேவதையாய்த் தோன்றியது.

பகலிலிருந்து உதிர்ந்து... இருட்டு பூமியில் விழுந்த சரு காய், அந்திப் பொழுது நகர ஆரம் பித்தது.

'என் கணவர் வேலைக்காரியுடன் ஓடிப் போயிட்டாருடி... அதான் எனக்குக் கவலையாக இருக்குது.

அப்படியா?

ஆமாண்டி. இவ்வளவு திறமையான வேலைக்காரி போயிட்டாளேனுதான் கவலையாக இருக்குடி.

-எம்.அசோக்ராஜா, திருச்சி.

நிறைந்தது